விலை 4 அணா

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
9 JUN 1947
MADRAS

The Swadesamitran ILLUSTRATED WEEKLY

குழந்தைப்பருவத்தில்

முக்கியமான சுகத்தைத் தரும்

வுட்வார்ட் வைத்தியனின்

"கிரைப் வாட்டர்"

என்னும் மருந்துத் திராவகம்

குழந்தைக்கு

ஆரோக்யத்தைத் தரும்.



WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD. LONDON. ENGLAND

க்ரைப் வாட்டர் இப்பொழுது மருந்து சாமான்கள் கட்டுப்பாடு அறிக்கையில் சேர்க்கப்பட்டிருக்கிறது. உபயோகிப்பவரின் விலை பாட்டில் விலை ரூ. 2—2—0.

பீபிள்ஸ் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்.

(தலைமை ஆபீஸ்: பீபிள்ஸ் பில்டிங்ஸ், போர்ட், பம்பாய்.)

ஸ்தாபிதம்: 1926

மானேஜிங் டைரக்டர்: சர்தார் சார்தூல் ஸிங் கவீஷர்

பூர்த்தி பெற்ற வியாபாரம்: 4 கோடிக்குமேல்

செலுத்தப்பட்ட உரிமைகள்: சுமார் 10 லக்ஷம்

பீபிள்ஸ் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியார் இந்தியாவில் **1926**-ம் வருஷ முதல் ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் வியாபாரம் செய்து வருகின்றனர். இந்த இருபது வருஷங்களில் இந்தியா முழுவதிலுமுள்ள தனது ஆயிரக்கணக்கான பாலிஸிதார்களுக்கும் சிறப்பாகச் சேவை புரிந்திருக்கிறது. "பீபிள்ஸ்" என்ற பெயர் முழுப்பாதுகாப்பின் சின்னமாக விளங்குகிறது.

கம்பெனியில் ஆயுள் இன்ஷ்யூரன்ஸிற்கு பல வசீகரமான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக "உத்தரவாதமுள்ள போனஸ் பாலிஸி" திட்டம் பல அம்சங்களிலும் சிறந்து விளங்குவதாகும்.

பீபிள்ஸ் பாலிஸி சேகரிக்கும் வேலை மேற்கொள்ள விரும்பும் அனுபவமுள்ள நபர்கள் விண்ணப்பித்துக் கொள்ளலாம். நல்ல வியாபாரம் செய்ய உத்திரவாதமளிக்கக்கூடிய ஆர்கனைஸர்களும் தேவை. மாதாந்திர சம்பளம் உண்டு.

விண்ணப்பிக்கவும்:—

பிராஞ்சு காரியதரிசி,

பீபிள்ஸ் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிட்.

30, மூர் தெரு, ஜி. டி. மதராஸ்.

Rgd. No. 2221.

27 வருஷமாய் தென்னுடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

சேலம் மூன்று தாமரை பீடிகளை

உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.

Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம்- S.I.R.

பிரசித்திபெற்ற

"காஸிநோ" ஸ்நோ

உங்கள் முகப்பருவைப்போக்கி, சருமத்தை மிருதுவாக்கி, முகத்தைப் பொலிவுடன் பிரகாசிக்கச் செய்வது 'காஸிநோ' ஸ்நோவே.
வாங்கும்பொழுது 'காஸிநோ' மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.
ஏஜண்டுகள் இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

விவரங்களுக்கு :

சந்திரா டிரேடிங் கம்(
93, ஆசாரப்பன் தெரு, ஜி.

சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசீகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.

காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில், ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் **காமினியா ஆயில்** உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

ஆடோ டிஸ்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

Sole Agent:—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P. O Box 2035 Bombay 2.



...விதமான எலக்டி... கள் கண்டிரோல் விலைக்... மாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்.

M. R. பார்த்தசாரதி ஐயங்கார்
28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெ...
திருவல்லிக்கேணி,
மதராஸ்.

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

சந்தனாதித் தைலம் — அரைக்கீரை விதைத் தைலம்

கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்
பலகாய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு
முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

சோல் ஏஜெண்டுகள் :—
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)
B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.



வாழ்க்கையில் புதிய ஒளி

பண்டிட் டி. கோபாலாசார்லுவின்

ஜீவாம்ருதம்

சந்தோஷமும், ஆரோக்கியமும் நிரம்பிய குடும்பத்தின் அழகே அலாதியானதுதான். ஜீவாம்ருதம் தேக புஷ்டியையும், வீரிய விருத்தியையும் அளிப்பது. ஆண், பெண் இருபாலரும் சாப்பிடக்கூடியது. இது நரம்புகளை வலுப்படுத்தி, வாழ்க்கையில் புதிய இன்பத்தைத் தரவல்லது.

ஆயுர்வேதாஸ்ரமம் லிமிடெட் மதராஸ் 17

சவரின்

நறுமணமும் குமட்டுவது

பாக்குத்தூள்

எல்லா கடைகளிலும் கிடைக்கும்.

★

ஹோப் & கோ.
ஜயா மான்ஷன், மதராஸ்.

சக்தி ஆருடம்!

புகழ்பெற்ற "சக்தி பால ஜோதிடரால்" வருங்கால பலன்கள் தெளிவாகச் சொல்லப்படும். அண்ணாமலை யூனிவர்சிட்டி வித்யா ரத்ன Prof. R. ராமானுஜாச்சாரி M. A., கூறுவது:-"தங்கள் சாஸ்திர ஆராய்ச்சியையும் எதிர்கால பலன்கள் கூறும் திறமையையும் நான் மிகவும் மெச்சுகிறேன். பலன்களில் எனக்கு மிகவும் திருப்தி" 1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் எழுத ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்திகவசம் ரூ. 7-8-0. வி. பி. பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும். N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I)

No. 3 TM

களங்கமற்ற அழகிய சரும நிறம் அன்பின் நட்பைப் பெருகிறதென்பது வாஸ்தவமே. அதற்கு காரணம் சருமத்தை நன்கு பாதுகாப்பதேயாகும்.

டாகெட் அண்டு ராம்ஸ்டெல் கம்பெனியின் வானிஷிங் க்ரீமை தினசரி உபயோகித்தால் அது உங்கள் சரும நிறத்தை சூர்யவெப்பம், காற்று, தூசி முதலியவைகளால் ஏற்படும் கெடுகலிலிருந்து காப்பாற்றுகிறது. டாகெட் அண்டு ராம்ஸ்டெல்லின் வானிஷிங் க்ரீம் சரும தோஷங்களை மறைப்பதோடு உங்களுடைய மேக்—அப்பை எப்பொழுதும் புதிதாக இருக்கும்படி செய்கிறது. உங்கள் சருமத்தின் இளமை நிறத்தையும் அழகையும் காப்பாற்றுகிறது.

எல்லா கெமிஸ்ட்களிடமும் பிரதான ஸ்டோர்களிலும் கிடைக்கும்.

Daggett & Ramsdell's

VANISHING CREAM

ரூ. 100 இனாம்

ஆச்சரியகரமான சக்தி வாய்ந்த சித்த யந்திரம் (Govt. Regd.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித கடின சாதனமும், தேவைகளும் அவசியமில்லை இதனால் (ஆண், பெண்) நீர் விரும்பும் எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நட்சத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு, லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம், பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள். பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ 100 இனாம். செம்பு ரூ. 2-8-0 வெள்ளி ரூ 3-0-0. சுத்த தங்கம் ரூ. 13-0-0.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலஹீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம். பெறுங்கள் சொற்ப நரைக்கு ரூ. 2-8-0. அதற்கு மேற்பட்டது ரூ 3-8-0. எல்லா நரைக்கும் ரூ. 5.

Shree Kamrup Kamachhya Ashra[m]
No. 6. P. O. Katrisarai. (Gaya)

டெலிபோன் 2246 தந்தி : ஸ்பேட் க்ளாவர் பீடி

(USE ALWAYS)
500 1st Quality Spade Clover Beedies 500
SPADE CLOVER
SPADE CLOVER BEEDI
M. MOHAMED OOMER. 37, MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் M. முஹம்மது உமர்சாகிபுவின் குமாரரான முஹம்மது நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும் உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார் காலத்திலிருந்ததைப் போன்றே சிறப்பாக விளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொப்ரைட்டர்
ஸ்பேட் க்ளாவர் & ஆர்டின் பீடிகள்
37, மண்ணடி, மதராஸ்.

THE REGISTRAR ... 30 JAN 1948

நபிகள் நாயக மான்மியம்

உலக மதபோதக உத்தமத் திருநபியின் உன்னத சரிதை. ஹி. ஆருவதாண்டு. அஹ்ஜாப் யுத்தம் முடிய 29 அதிகாரங்களில், கிரவுன் 1X4 அளவில் 600 பக்கங்களில் பல வர்ண பல படங்களுடன் பெரும் பொருட் செலவில் வெளிவந்துவிட்டது. மிகவும் தூய வழு வழுப்பான திக் கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டு, வசீகரிக்கும் ரக்ஸீன் பைண்டு செய்யப்பட்டது. கண்ணைப்பறிக்கும் 4 வர்ண ஆர்ட் ஜாக்கெட் போர்த்தப்பட்டது. விலை ரூ. 12. தபாற்செலவு ரூ. 1—4—0. (வேறு.)

31-12-47க்குள் முன்பணம் அனுப்புவோர்க்கு தபாற்செலவு இனாம்!

தாருல் இஸ்லாம், 30, சாந்தோம், சென்னை 4.

கண்ணில் பூவிழுதல்

டிகாலஸ் க்யூர் (ரிஜிஸ்) ஒரு உத்தரவாதமான நிவாரணி. கண் வியாதிகள் எதற்கும் சிறந்தது. அபாயமற்றது. 1000-க் கணக்கான பேர் ஆபரேஷனில்லாமல் சொஸ்தமாயுள்ளனர். உலகப் பிரசித்தி பெற்றது. வெற்றிக்கு உத்தரவாதம். விவரம் இலவசம். விலை ரூ. 3. தபால் செலவு அணா 12.

செவிடு

முழுச்செவிடு அல்லது அரைச்செவிடு, காதில் இரைச்சல், மற்றும் எக்காரணத்தினாலும் எவ்வித நோயானாலும் நாலே வாரத்தில் சொஸ்தப்படுத்துவதற்கு உத்தரவாதம். ஹானியற்றதும் உடனே பலனளிப்பதுமான மருந்து. கியாதிபெற்ற மூலிகை மருந்து. விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

குஷ்டம், வெண்குஷ்டம்

தீராத நோயும் தீரும். உடம்பு முழுவதுமோ அல்லது பாகத்தில் மட்டுமோ இருந்தாலும் சரி, எமது கியாதிபெற்ற, ஹானியற்ற மூலிகைகளினால் நாலே வாரத்தில் பூரண குணம் காண்பீர்கள். விவரங்கள் கேட்டால் எழுதுவோம்.

KAMALA WORKS,
6, Panchpota, BENGAL.

பெண்களின் பொக்கிஷம்!

மோஹன சுகந்தல் தைலம்

வைத்திய சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்டது. ஜீவசக்தி வாய்ந்த கூந்தல் தைலம் அழகான கேசத்தை பட்டுப்போல் மிருதுவாக, நீண்டு வளரச் செய்கிறது.

இன்றே உபயோகித்து திருப்தி அடையுங்கள்.

விலை ரூ. 1—4—0 : : கேட்லாக் இனாம்.

மலையாள மெடிகல் ஹால் (REGD)

189, வக்கீல் புது தெரு, — Post Box No. 27 — மதுரை.

H. O. TRIVANDRUM

பிராஞ்சுகள்:—

207, நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம்.
20, கோவிந்தப்ப நாயக்கன் தெரு, G. T. மதராஸ்.
58E, தர்மராஜா கோவில் வீதி, பெங்களூர், தண்டு.
179, SEA STREET, COLOMBO.

குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

(லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்.

40 நாட்களில் குணம்

தலைமை ஆபீஸ்: **வால்டேர், ஆர். எஸ்.** | **லக்ஷ்மி & கோ.,** 2/135, பிராட்வே, மதராஸ்.

அனைவருக்கும்

திருப்தி

யளிக்கக்கூடிய

எல்லாவிதமான

நவீன பட்டு & நூல் ஜவுளி ரகங்களுக்கு

மாருதி க்ளாத் மார்ட்
ராஜவீதி — கோயமுத்தூர்.

ஜாதகம்! ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விவரம்:—1 முதல் 3. உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2.
3-க்குமேல் கேள்வி 1-க்கு அணு 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5.
ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 2.
குறிப்பு:—வெளிநாட்டிற்கு இரட்டிப்புக் கட்டணம்.

சில - நற்சாட்சிகள் :

Lt. Col. M. N. C. ஸர்ஜன் ஜெனரல் மதராஸ்:— ''தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.''

ராவ்பகதூர் C. V. கிருஷ்ணஸ்வாமி B. A., ரிடையர்டு Dy. S. P. அண்டு அட்வகேட், உறையூர் கூறுவது:—ஜோதிஷ உலகில் இவரது சாஸ்திர ஞானமோதி இணையில்லாதது. இவர் கூறும் ஜாதக பலன்களைக் கேட்டவர், அவைகள் உண்மையாகவும், பூர்த்தியாகவும், ஆச்சரியமாகவும் இருப்பதை உணர்வதுடன் அவரை உண்மையில் இம்மை மறுமைக்கு வழித்தோழராகவும், ஆப்த நண்பராகவும் இருப்பதை அறிவார்.

Sri B. K. சதுர்வேதி - பார்-அட்-லா, டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ், ஸாரத்கார்-பிகானிர் ஸ்டேட் :—தங்களுடைய ஜோதிஷ பலன்கள் மிகவும் உண்மையாகவும், அதி ஆச்சரியமாயும் விளங்கின. தாங்கள் பெரிய ஸ்டேட் ஜோதிஷார்-ராஜ் ஜோதிஷராய் பிரகாசிக்கத் திறமை வாய்ந்தவர்''.

Sri E. J. இராஜரத்னம், சிலோன்-சிவில் ஸர்விஸ், கவர்ன்மெண்ட் ஏஜண்டு, களுடாரா, கொழும்பு, சிலோன்:—''தங்களுடைய ஜோதிஷ கணிதஞானத்தையும், பலன் கூறும் முறையையும் கண்டு மிகவும் மெச்சுகிறேன். இவ்வளவு ஆச்சரியமாயும், உண்மையாகவும், எதிர்கால பலன்களை கூறுவீர்கள் என்று நான் எண்ணவே இல்லை.

T.V. ஜெயராம சாஸ்திரிகள், ஆயுர்வேத பண்டிட் & ஜோதிஷ வித்வான்.

வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ, தெப்பக்குளம் P. O. (தென் இந்தியா)

யாரெல்லாம் ஆங்கிலம் கற்கலாம்

1. ஆங்கில எழுத்துகூடத் தெரியாத பெண்களுக்கும் ஆண்களுக்கும்
2. பாடசாலைகளில் சென்று பயிலமுடியாத குமரிகளுக்கும்
3. சிறிது கற்று நிறுத்தியவர்களுக்கும்
4. ஆங்கில படிப்பு இல்லாத குறையால் பிரமோஷன் கிடையாது வருந்தும் சர்க்கார் சேவகர்களுக்கும்
5. எஸ். எஸ். எல். ஸி. அல்லது மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தோல்வியுற்று, காலேஜில் பிரவேசனம் இன்றி வருந்துபவர்களுக்கும்
6. பிரமோஷன் வேண்டுமென்று எண்ணுகிற ஆசிரியர்களுக்கும்
7. தவிர, எவர்க்கும் தத்தம் இல்லத்தில் இருந்தே தங்கள் வேலைகளுக்கு யாதொரு இடையூறுமின்றிக் குறைந்த காலத்தில் ஆங்கிலம் கற்கலாம். இன்று ஆங்கில எழுத்துகூடத்தெரியாத ஒருவருக்கு ஒரே வருடத்தில் நான்காவது பாரத்தின் ஆங்கில அறிவு பெறலாம்.

தொடர்ந்து மூன்று வருடங்கள் கற்பதாயின், கேம்பிரட்ஜ் ஸீனியர் என்னும் ஒரு பெரிய பரீட்சையில் தேறலாம். கல்வி பூராவும் தபால் மூலம் நடத்தப்படும். ஆங்கிலம் பயில விரும்புவோர், தான் படித்த வகுப்பையும் குறிப்பிட்டு கீழ்க்காணும் விலாசத்திற்கு உடனே எழுதவும்.

கேம்பிரட்ஜ் காலேஜ், கைதமுக்கு, திருவனந்தபுரம்

N. B. தங்களது குமாரர்களை விரைவில் கேம்பிரட்ஜ் ஸீனியர் பரீட்சையில் வெற்றியடையச்செய்து, இன்டர்மீடியட்டுக்குப் பிரவேசனம் செய்ய அரிய ஓர் வழியாகும்.

REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA (GOVT. REGD)

இது சித்த வசீகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தகைய கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீட்சை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

செம்பு விலை	ரூ.	2.
வெள்ளி ,,	ரூ.	3.
தங்கம் ,,	ரூ.	10.

நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை ஸிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும். பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5.

SREE KASHIVISHWANATH ASHRAM, No. 14/A, P.O. Katrisarai, (Gaya)

வாழிய செந்தமிழ்

சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

— வாரப்பதிப்பு —

Vol. XVIII] ஸர்வஜித்துஸு மார்கழிமீ 13உ ★ 1947-ஆம் டிசம்பர்மீ 28உ No. 48

விபரீதப் பரீட்சை

உணவுப் பொருள் கட்டுப்பாட்டைக் கொஞ்சம் கொஞ்சமாக நீக்குவதென்ற இந்திய சர்க்காரின் முடிவு குறித்துச் சென்ற வாரம் எழுதியிருந்தோம். இதைத் தொடர்ந்து சென்னை சர்க்கார் கைக்கொள்ளவிருக்கும் உத்தேச ஏற்பாடுகளும் வெளியாயிருந்தன.

சென்ற வாரம் சென்னை கவுன்ஸிலில் உணவு மந்திரி கட்டுப்பாடுகள் நீக்கம் சம்பந்தமாக ஓர் அறிக்கை விடுத்தார். கூடிய விரைவில் கட்டுப்பாடுகள் நீங்க வேண்டுமென்று கொள்கை அளவில்தான் இந்திய சர்க்கார் இதுபற்றிய தங்கள் முடிவைத் தெரிவித்தார்கள்.

எந்த தோரணையில் இதை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வர வேண்டும், அது எந்த சமயத்தில் என்ற விஷயங்களெல்லாம் அந்தந்த மாகாண சர்க்கார்களுக்கே விட்டுவிட்டார்கள்.

இம்மாகாணத்தைப் பொருத்தவரை, உணவுத்திண்டாட்டம் கடுமை. இங்கு கட்டுப்பாட்டை உடனே நீக்குவதென்ற யோசனை ஆதரவு பெறுவதற்கில்லை. சென்னை சர்க்காரும் சில தினங்கள் முன்வரை இதை ஆதரிக்கவில்லை. இங்குள்ள நிலைமையைக் கண்டு, அடுத்த வருஷ முடிவுவரை கட்டுப்பாட்டை நீடிப்பதென்றே அவர்கள் முடிவு செய்திருந்தனர். ஆனால் இப்போது திடீரென்று சர்க்கார் தங்கள் முடிவை மாற்றிக் கொண்டு விட்டனர். கட்டுப்பாடு நீக்கம் உடனேயே அமுலுக்கு வந்துவிடுமென்று அவர்கள் அறிவிக்கின்றார்கள். இடையில் ஏற்பட்டுள்ள நிலைமை உண்மையில் சர்க்காரை இன்னும் உஷாராக நடந்து கொள்ள எச்சரிப்பதாகும். மாகாணத்தின் பல பகுதிகளில் பருவ மழை தவறிவிட்டது. பயிர்கள் சாவியாகப் போய்விட்டதாகச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன. திருநெல்வேலி போன்ற ஜில்லாக்களில் பஞ்சம் தலைகாட்ட ஆரம்பித்திருப்பதாக உணவு மந்திரியே ஒப்புக்கொள்ளுகிறார். இந்த சமயத்திலா உணவுக் கட்டுப்பாட்டை உடனே நீக்க முடிவு செய்வது? இவ்வாறு முடிவு செய்ததன் மூலம் சென்னை சர்க்கார் செய்ய விருக்கும் பரீட்சை விபரீதமானது.

கட்டுப்பாட்டு நீக்கத்தை அவர்கள் அமுலுக்குக் கொண்டு வரவிருக்கும் முறையும் தக்க முன் யோசனையுடன் அமைந்ததாகக் காணவில்லை. இதன்படி முதலில் அதாவது டிசம்பர் 28-ந் தேதி முதல் மலையாளத்தையும், நீலகிரியையும் தவிர மற்ற பற்றுக்குறை ஜில்லாக்களில் கிராமாந்திர ரேஷன் நீங்கிவிடும். அடுத்தபடியாக ஜனவரி 4-ந் தேதி முதல் வடபாகத்திலுள்ள உபரி ஜில்லாக்களிலும், பிப்ரவரி 4-ந் தேதி முதல் தென்பாகத்திலுள்ள உபரி ஜில்லாக்களிலும் கட்டுப்பாடு மறைந்துவிடும். மேற்குறித்த தேதிகள் வரை உபரி ஜில்லாக்களில் அறுவடையாகும் தானியத்தில் ஓரளவை சர்க்கார் கொள்முதல் செய்வர். அதிலிருந்து பற்றுக்குறை ஜில்லாக்களிலுள்ள பட்டணங்களின் ரேஷன் தேவையைப் பூர்த்தி செய்

சென்ற வாரம் அகில இந்திய புகைப்பட ஸெலனில் படக்காட்சியை சென்னை கவர்னர் மே. த. நை. ஆரம்பித்து வைத்துப்பேசினர்.

வர். ஆனல் அங்குள்ள கிராமாந்திர மக்களின் நிலையென்ன? பற்றுக்குறையாக உள்ள அப்பிரதேசங்களில் ரேஷன் ஏற்பாடு உள்ள போதே அதன்படி அவர்களுக்குரிய சொற்ப அளவு தானியமும் அவர்களுக்குச் சரியாகக் கிடைப்பதில்லை. ரேஷன் ஏற்பாடு நீங்கிவிட்டால் அவர்கள் கதி என்ன? தற்போதைய ஏற்பாட்டின் பலனாக வழைகளில் பலர் அருகாமையிலுள்ள பட்டணங்களில் ரேஷன் ஏற்பாடு நீடிப்பது கண்டு அங்கு குடியேற முயலுவர். இந்த ஏற்பாட்டுக்குப் பதிலாக, முதலில் உபரி ஜில்லாக்களில் கட்டுப்பாடு நீக்கத்தை அமுலுக்குக் கொண்டு வந்து, பிறகு அதை மற்ற இடங்களுக்கு நீடிப்பது உசிதமல்லவா? சர்க்கார் யோசிக்க வேண்டும். பற்றுக்குறையாக உள்ள பிரதேசங்களுக்குத் தேவையான அளவு தானியத்தை உபரி ஜில்லாக்களில் கொள் முதல் செய்து கொண்டு மற்றபடி அங்குள்ள கட்டுப்பாடுகளை நீக்கிவிடலாம். உபரி தானியத்தை பற்றுக்குறை ஜில்லாக்களுக்கு வினியோகிக்கும் ஏற்பாட்டை நாளடைவில் வழக்கமான முறைப்படி வர்த்தகர்களிடம் ஒப்படைத்து விடக்கூடும். கட்டுப்பாடு நீக்கத்திலுள்ள கஷ்டங்களைக் கூடியவரை குறைக்கும் முறையில் அதை அமுலுக்குக் கொண்டு வருவதே சர்க்காரின் கருத்தாயிருக்க வேண்டும். இதனல் கட்டுப்பாடு நீங்க இன்னும் சிறிது காலமாகுமென்றே, அல்லது தங்கள் திட்டத்தை மாற்றிக்கொள்ள நேருமென்றே அவர்கள் எண்ணினல் அதற்காக அவர்கள் கூடிய வரை உஷாரான முறையை உதறித்தள்ளி விடக்கூடாது.

"நினைப்பதும் நடப்பதும்"

(ஸ்ரீமதி. தங்கம்மாள்பாரதி)

அன்று தைப்பொங்கல். ஊரெங்கும் மகர தோரணங்களாலும், மஞ்சக் குலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எங்கு நோக்கினும் மஞ்சக் கொத்துகளும், கரும்புக் கழிகளுமே காட்சியளித்தன. வீடுதோறும் பால் பொங்குகின்ற அந்த நாளன்று, என் வீட்டிலும் பால் பொங்கிற்று. என் கணவரும், விருந்தை முடித்துக்கொண்டு, வெளியே புறப்பட்டார். கணவர் வெளியே சென்றதும் வாசற் கதவை படீரென்று சாத்திவிட்டு கூடத்திலுள்ள ஈஸிசேரில் குப்புற விழுந்தேன். என்னை அறியாது என் கண்களினின்றும், கண்ணீர் தாரை தாரையாக வழிந்தோடியது. என் உள்ளத்தில் ஏனே, அன்று துக்கம் பொங்கியது. விம்மி அழவுந் திறங் கெட்டுப் போன என் நெஞ்சம் குமுறியது. ஈஸிசேரில் சாய்ந்த வண்ணம் எதையோ உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். என் கலங்கிய கண்களுக்கு, மேஜை மீதிருந்த சில கடிதங்கள் தான் காட்சியளித்தன. எனது கண்ணின் நீர்த்திவலைகளுக்கு நடுவே, அக்கடிதங்கள் மாறி மாறித் தோன்றி என்னை வதைத்தன. அக்கடிதங்களின் ஒவ்வொரு நயவஞ்சக எழுத்தும், என்னை ஏமாற்றிவிட்டதை நினைத்து, எள்ளி நகையாடின. ஏளனம் புரிந்தன. கட்டுக் கடிதங்களினின்றும் ஒரு கடிதத்தை உருவி, பிரித்துப் பார்த்தேன். "கண்ணே! உன் அன்பை நாடித் தவிக்கின்றேன். இல்லையெனில் சாதலை வேண்டுகின்றேன். நீ இல்லையெனில் எனக்கு இவ்வுலகம் இல்லை. உனது லட்சியம், உனது ஆவல் பூர்த்தி பெற முயற்சி செய்வேன். அதற்காகப் பாடுபடுவேன். ஆதலின் தாமதியாது, உடனே புறப்பட்டு வா." மேற்கண்ட கடிதத்தைப் பார்த்து, பொய்யும், ஏமாற்றும் நிறைந்த இவ்வுலகத்தைநினைத்து மறுபடி என் நெஞ்சினின்று ஒரு பெரு மூச்சு, சோகக் குரல் எழும்பியது.

"பெண்ணென்று
சொல்லிடிலோ—ஒரு
பேயு மிரங்குமென்பார்
தெய்வமே-நின
தெண்ண மிரங்காதோ-துன்பக்
கேணியிலே...எங்கள்
[பெண்கள் அழுத சொல்
மீட்டு முறையாயோ அவர்
விம்மி அழவுந்
[திறங் கெட்டுப் போயினர்"

என்ற பாரதி பாட்டின் அடிகள், எனது சோகக் குமுறலில்,—தீன குரலில் எழும்பியது.

சிந்தனை அலைகள் என் மனக் கடலில் நர்த்தனம் புரிந்தன. என் இதழ்க்கடையில்,ஏளனம் கலந்த, புன்னகை ரேகை நெளிந்தோடியது. அன்றொரு நாள் பால பருவம். சின்னஞ் சிறு கிளியாய், சிட்டுக் குருவியாய்,-சுதந்திர வானில்-சிட்டாய்ப் பறந்த நன்னுள். கேட்கும் பொருளெல்லாம் கிடைத்து விடும் எனக்கு, பள்ளித் தோழிகளின் நட்பும் பெற்றோரின் பணிவிடைகளும் இன்பத்தைத் தந்தன. துக்கம் என்ன என்பதையே அறியேன். இன்பச் சிகரத்தில் ஏறிக் களி நடனம் புரிந்துகொண்டிருந்த என்னை, துன்பக்கேணிக்கு அழைத்து வந்துவிட்டாள் அந்தயௌவன மாரி. பதினும் பிராயம் அடைந்துகொண்டிருந்த என்னை, யௌவனத்தின் பூர்ண சௌந்தரியமும் தழுவிக் கொண்டது. வாலிப பருவத்தின் செருக்கும், கர்வமும் படைத்த நான், எனது பருவத்தை எண்ணி இறுமாந்திருந்தேன். வாழ்க்கைக் கடலில் வரப் போகின்ற அந்தத் துன்ப அலைகளை யறியாது; என் இன்பத் தோணி அதன் மீது உல்லாசமாக மிதந்து சென்றுகொண்டிருந்தது. அந்த சமயத்தில்தான் என் வரன் தேடு படலம் ஆரம்பமாயிற்று. என் தந்தை வரனுக்காக அலைந்து திரிந்தார். செல்லக் குழந்தையாக, ஒரே அருமைப் பெண்ணாக வளர்ந்த எனக்கு, தகுந்த வரன் கண்டு பிடிப்பதில் அவர் மிகவும் சிரமப்பட்டார்.

கடைசியாகப் புலன் விசாரித்ததில் ஒரு வரன்-செல்வத்திலும், அழகிலும் தேர்ந்தவனாக இருப்பதாகத் தெரிய வந்தது. உடன், என் தந்தை வரனின் படிப்பு, அந்தஸ்து முதலியவற்றை விசாரித்து, பையனையே பெண் பார்க்க அழைத்துக் கொண்டு வந்து விட்டார். என் மனம் துள்ளி விளையாடியது. வரப் போகும் மணாளனைப் பார்க்கப் போகிறோம் என்ற ஆசையினல் என் வாய் ஒரு பாட்டின் அடியை முணுமுணுத்தது. கூடத்திலிருந்து என் தந்தை "உஷா" என்று கூப்பிட்டதும், சடக்கென்று ஏதோ யோசித்தவளாய், கண்ணாடியை எடுத்து முகத்தைப் பார்த்தேன். பூசியிருந்த பவுடரை சரிபண்ணிக்கொண்டு, கால் சதங்கை ஒலிக்க, கூடத்திற்கு வந்தேன். தலை நிமிர்ந்து பாயின் மீது அமர்ந்திருக்கும் வாலிபரை நோக்கினேன். அவரது நேர்கொண்ட பார்வை என்னை ஒருகணம் உலுக்கியது. அவரது இதழ்க் கடையில், ஒரு புன்னகை தோன்றி மறைந்தது. இருவர் கண்களும் ஒரு நிமிடம் சந்தித்தன. அவ்வளவுதான். என் உள்ளத்தை அவர்கொள்ளை கொண்டு விட்டார். என் சங்கீதத்தைக் கேட்டு அகமகிழ்ந்தார். எனக்கு நாட்டியமாடத் தெரியும் என்பதை அறிந்து, எனது நடனத்தையும் கண்டு களிக்க அவர் விரும்பியதும், என் மனம் எல்லையற்ற மகிழ்ச்சி அடைந்தது. கால்கள் "ஜல்-ஜல்" என்ற சதங்கை சப்தம் ஒலிக்க, தாமாகவே களிநடனம் புரியவும், எனது வட்டக் கரிய விழிகள் நாலுபுறமும், வட்டமிடவும் தொடங்கிவிட்டன. "சொல்ல வல்லாயோ," என்ற பாட்டிற்கு நான் அபிநயம் பிடித்தபோது அவர் என்னையே உற்று நோக்கிக்கொண்டிருப்பதைக் கவனித்தேன். நடனம் முடிந்து, பிள்ளை வீட்டார் பிள்ளையின் சம்மதத்தைத் தெரிவித்து விட்டு விடு சென்றனர். முகூர்த்தம் நிச்சயிக்கப்பட்டது. கல்யாணமும் வெகு விமரிசையாக நடந்

தேறியது. வாழ்க்கைத் துணைவருடன் புறப்படப்போகும் நன்னாள் வந்தது. பிறந்தகத்தை விட்டுப் பிரியப் போகிறோம் என்பதை நினைத்ததும், என் மனம் துண்டிற் புழுவெனத் துடித்தது. ஆயினும் கணவருடன் நடத்தப் போகும் இன்ப வாழ் நாட்களை நினைத்து, மனம் சமாதானம் அடைந்தது. பம்பாய் மெயில் வெகு வேகமாகச் சென்றுகொண்டிருந்தது. பல கற்பனைச் சித்திரங்கள், என் முன்னால் வெகு வேகமாகத் தோன்றி மறைந்தன. கனவு நனவாகப் போவதை என் லட்சியங்கள் யாவும் சித்தி பெறப்போவதை, எண்ணி அக மகிழ்ந்தேன். எனது ஆசை வேறொன்றுமல்ல. சங்கீதமும், நடனமும்தான். அதை மேன் மேலும் விருத்தி செய்து புகழ் பெறவேண்டுமென்ற அவா எனக்கு மிகுதியாக உண்டு. பம்பாயில் புதுமணம் கமழும் தம்பதிகளின் புதுக் குடித்தனம் ஆரம்பமாயிற்று. நாட்கள் உருண்டன. என் ஆசை ஒன்றும் நிறைவேறாததைக் கண்டு என் மனம் சஞ்சலமுற்றது. ஆயினும் கணவரின் பணிவிடைகளுக்காகத் தானே நாம் நேரத்தைச் செலவிடுகின்றோம் என்று மனத்தை ஆறுதல் செய்து கொண்டேன். ஆம்! என்று அவர் வாயிலிருந்து அவ்வார்த்தைகள் "நோட்டைத் தூர எறி, நீயும், உன் பாட்டும்," என்ற அப் படபடப்பான வார்த்தைகள் வெளி வந்தனவோ, அன்றுதான் அவர் மனத்திலுள்ளதை அறிந்தேன். அனலிலிட்ட புழுப்போல் துடித்தேன். உண்மையில் அவருக்குச்சங்கீதத்தில் பிரியமுண்டா, ஞானம் உண்டா, நடனக்கலையில் ஆர்வமுள்ளவரா? அன்று அவர் பெண் பார்க்க வந்தபோது, என் சங்கீதத்தைக் கேட்டுத் தலையாட்டியதும், சபாஷ் கூறியதும், நடனத்தைக் கண்டு களித்ததும், உண்மையில் சங்கீத ரஸிகராய் இருந்ததனால் தானா! அல்லது அவையாவும் வெளி வேஷமா? சங்கீத ஞானம் உடையவரானால், ஆபீஸிலிருந்து வந்ததும் வராததுமாக, "போதும், நீயும் உன் பாட்டும். நோட்டைத் தூர எறி" என்ற அவ்வார்த்தைகள்தாம் வெளி வருமா? இல்லை; அவ்வளவும் பொய் வேஷம் என்பதை நாட்கள் செல்லச்செல்ல நன்கு அறிந்தேன். நான் எப்போது பாடினாலும், வெளியே எழுந்து போய் விடுவார். நான் எப்போதாவது நாட்டியம் ஆடப் பார்த்தாரானால், "போதும் நாட்டியம், நம் குலத்திற்கு ஏற்றதில்லை" என்பார். இவ்வார்த்தைகளைக் கேட்கும்போதெல்லாம் என் மனம் அவரது பெண் பார்க்க வந்த படலத்தை, எண்ணி எண்ணி குமுறும். வெளி வேஷத்தைக்கண்டு மயங்கினேன். அதை உண்மை என நம்பினேன். எனதாவிப் பூர்த்தி செய்ய-இவரே நமக்கு ஏற்ற கணவர் என எண்ணி மணம் செய்து கொண்டேன். கடைசியில் மோசம் போனேன். எனது லட்சியக் கோட்டை தகர்த்தெறியப்பட்டது. கனவு சிதைந்தது. எல்லாம் என் பாழும் விதிதான்! விதியை நினைத்துப் புலம்பி என்ன பயன்?

ஸ்டான்போர்டுசர்வகலாசாலையில் சேர்ந்துபடிக்கும் முதல் இந்திய மாணவி மிஸ் மேதாயோத் பெண்களின் உடை சம்பந்தமாக் அங்கு எழுந்துள்ள சர்ச்சைகளில்!! இறங்கவில்லை. கணுக்கால் வரையில் மறையும்படி. இந்திய முறையில் அவர் புடவை உடுத்துகிருர். புதிய மோஸ்தரில் ஆடையணிய அவர் இனியும் முற்படப் போவதில்லையாம். அவர் ஜோன்டெக்கர் என்ற பெண்மணியோடு பேசிக்கொண்டிருக்கையில் எடுத்த படம்.



மாலை வேளையாகையால் சபாமண்டபம் முழுதும் குளிர்ந்த காற்று வீசப்பெற்று தண்மை மயமாக இருந்தது.

பாலசூரியன், நடுநாயகமாக விளங்கிய, சிம்மம் ஏந்தும் பொற்பீடத்திலும், அசுவபாலன் அதன் அணித்தாக உள்ள ஓர் ஆதனத்திலும் அமர்ந்துகொண்டனர். மஹாராணியும், சுநந்தாவும் சபாமண்டபத்தின் ஒரு புறத்திலே உட்கார்ந்துகொண்டார்கள். சாதுசக்கரர் பிரபுக்களையும், மற்றப் பிரஜைகளையும் நோக்கியவாறு எழுந்திருந்தார். அவர் மிகவும் உருக்கம் தோய்ந்த பார்வையுடன் கூற ஆரம்பித்தார் செய்திகளை.

"ஜனங்களே, நீங்கள் நான் கூறப்போவதைப் பொறுமையுடன் கேட்கவேண்டும். மகத சாம்ராஜ்ய லக்ஷ்மி இன்று கண்ணீர் வடிக்கிருள். ஆனாலும், அந்தக் கண்ணீரைத் துடைக்கும் கரத்தையுடைய கருணை வடிவினன் ஒருவனை நாம் அடைந்து விட்டோம். இன்னும் விளக்கமாகவும் கூறிவிடுகிறேன். காய கல்பத்தில் மன்னர் மாண்டுவிட்டார். வக்ரநாஸனுடைய சூழ்ச்சியால் அவர் இறக்க நேர்ந்தது...அவருடைய விதி அவரை விழுங்கிவிட்டது...மகதம் தன் கண்ணில் மண்ணை வாரிப்போட்டுக்கொண்டு விட்டது"...

இவ்வாறு கூறிவரும்போதே ஒரே கூக்குரலும் அழுகையுமாக மக்கள் புலம்பினர்கள்.

சாதுசக்கரர் மிகவும் இரைந்து பேசலானர்.

"பிரஜைகளே! உங்கள் முன்னிலையில் இப்பொழுது மன்னராக இருப்பவர் பாலசூரியன் என்னும் திருநாமம் படைத்த புண்ணிய சீலர். சிறந்த அந்தண குமாரர்!" அவரை மேலே பேசவொட்டாமல் தடுத்தது பெரும் புரட்சி. மக்களில் பலருக்கு ஆவேச உணர்ச்சி உண்டாகவே தம்மையறியாமல் அலறினர்.

சாதுசக்கரர் 'பொறுமை, பொறுமை" என்று கூறியதையும் பலர் கேட்கவில்லை.

பாலசூரியன் எழுந்திருந்தான். சற்றே அமைதி நிலவியது. "மஹாஜனங்களே! அமரசிம்மர் தம் விதியாலும் காயகல்பம் என்ற ஒரு சாக்கினுலும் காலமாகவே, அதனைக்கண்டு உங்களைப்போலே நானும் வருந்துகின்றேன். நான் வக்ரநாஸனுடைய மாயங்களைப் புரிந்து கொள்ளாமல் அவன் வலையில் சிக்கினேன். அமரசிம்மர் சிக்கியதற்குப் பலன் அழிவும், நான் சிக்கிக்கொண்டதற்குப் பலனாக ராஜ்யமும் கிடைத்திருப்பதை நினைக்க எனக்கே துக்கமாகத்தானிருக்கிறது.

மகத சாம்ராஜ்யம் மாசற்றது. அதன் மக்கள் மகா ஞானிகளாக இருக்க வேண்டும். ஆகவே அவர்கள் என் வார்த்தைக்கு செவி கொடுக்க வேண்டும்.

இந்த நாட்டின் ராணி என் தாய்; சாதுசக்கரர் என் தலைவர். [illegible]ரனை இங்கு அழைத்து வந்து சேர்த்த [illegible]ஸன் எனக்கும் இந்நாட்டுக்கும் வெகுதூரத்தில் நிற்கவேண்டியவன். உண்மையாக என்னை இங்கு அனுப்பிய மகரிஷியே எனக்கு குருநாதர். நீங்கள் அனைவரும் என் சகோதரர்கள்.

நான் கூறுவதைக் கேட்டு நீவிர் என்ன தெரிவிப்பதாயிருந்தாலும் அதன்படி நான் நடக்கத் தயாராயிருப்பேன்: நான் இந்த ராஜ்யத்திற்கு

மணிமுடி மன்னனாவேன் என்பதைக் கனவிலும் கருதவில்லை. யாரேனும் என்னை வெறுப்பவர் உண்டானால் நான் இப்பொழுதே என் பதவியை உதறியெறிந்துவிடத் தயாராகவிருக்கிறேன்.'' என்றான்.

"ஆஹா! இவர் அல்லவா உண்மையான சத்தியசீலர்...'' என்ற குரல்கள் மண்டபம் முழுதும் எழுந்து ஒலித்தன. அப்பொழுது அந்தச் சப்தத்தை எதிர்த்துக்கொண்டு ஒரே ஒரு தனிக் குரல் எழுந்தது என்றால் யாருக்கும் திகைப்பாகத்தானே இருக்கும்!

சேனாதிபதியின் குரலே அது.

"கோஷம் போடுகிறான் பாபி. இவனைச் சும்மாவிடமாட்டேன். அமரசிம்மரைக் கொலை செய்ய எத்தனை நாளாகச் சூழ்ச்சி செய்தானோ இக்கயவன்....'' என்று கர்ஜித்தான் அவன். பாலன் அவனை அன்புடன் நோக்கினான். அவனை ராஜ சபை முழுதுமே நோக்கியது.

"அன்பரே, உமது எண்ணம் என்னை வெறுக்கிறதென்பதை இனியும் நான் அறியாமலிருப்பதற்கில்லை. நான் இப்பொழுதே என் முடியை உமக்கு வேண்டுமாயினும் அளித்துவிட முடியும். ஆனால் சாதுசக்கரருடைய உதவி அதற்குத் தேவையாயிருக்கும். எனக்கு இனி இப்பதவி வேண்டாம்....''

இவ்வாறு பாலன் கூறும்போது அவன் கண்கள் கலங்கியிருந்தன. பற்றற்ற தன்மை அவன் முகத்திலே பளிச்சென்று தோன்றியது.

சாதுசக்கரர் நடுங்கிப்போனார். ராணி ரத்னப்பிரபாவின் விரக்தி பாய்ந்த உள்ளத்திலும் பாலனின் துறவை எதிர்க்கும் சக்தி ஊடுருவியது. சுநந்தா துயர மயக்கத்தில் ஆழ்ந்துவிட்டாள்.

மேலும் பாலன் கூறலானான்.

"அன்பரே, இந்நாட்டை நான் அடைவதைத்தான் நீர் வெறுத்தீர். ஆனால் மக்களின் நன்மைக்கு உகந்த மற்றொருவரையாவது நான் நியமிக்கவேண்டியவனாகிறேன். இதோ என் அருகில் நிற்கும் அங்கத்தரசகுமாரர் அசுவபாலனை மகதத்துக்கும் மன்னனாக்கிக்கொள்ளுங்கள். அந்த க்ஷத்ரியகுல வீரனாவது அமரசிம்மரின் ஆசனத்தை அலங்கரிக்கட்டும்..'' என்றான். சேனாதிபதிக்கு மேலும் ஆத்திரமே மூண்டது. "சிங்கமிருந்த இடத்தில் ஒரு பூனை வந்து உட்கார்ந்துகொண்டு, ஒரு சிற்றொலியை ஸ்தாபித்து வைப்பதுபோலிருக்கிறது உனது கூற்று'' என்று கூறிக் கையிலே வாளையெடுத்துவிட்டான் அவன். அவன் பற்களைக் கடித்துக்கொண்டு கையிலே வாளுடன் பாலனை நோக்கி நெருங்கினான். சாதுசக்கரரின் புருவம் துடித்தது. கரத்திலே வாளைத் தூக்கிவிட்டார் வில் விதுரர் போன்ற அந்த வாள் விதுரர்!

சேனாதிபதிக்கும் அவருக்கும் வாள் யுத்தம் தொடங்கியது. அசுவபாலன் மிகவும் துடிப்பு நிறைந்தவனாதலின், சேனாதிபதியின் வாளைத் தன் வாளால் தாக்கிச் சாதுசக்கரரை அப்பாற்படுத்தினான். அங்கத்தரசகுமாரனுக்கும், சேனாதிபதிக்கும் பெரும் போர் உண்டாகிவிட்டது. ராணி ரத்னா நிறுத்துங்கள் யுத்தத்தை என்று கூவினாள். சுநந்தா 'வேண்டாம் விபரீதம்' என்று அலறினாள். சாதுசக்கரர் பெருஞ் சிந்தனையுள் மூழ்கி, அசைவற்றவராய் நின்றார். அச்சமயத்தில் ஜனங்கள் எல்லோரும் ஆரவாரத்தை எழுப்பினர்.

சிலர் சேனாதிபதியை ஆதரிக்கவும் தொடங்கிவிட்டனர். அவர்களுக்கும் மற்றவர்களுக்கும் போர் மூண்டுவிட்டது. ராஜசபையின் கட்டுப்பாடுகள் எல்லாம் சிதறிவிட்டபடியால் ஆளுக்கு ஆள் நியாயங்கூறத் தொடங்கிவிட்டனர்.

சாதுசக்கரர் எந்தப் பூசல் விளையும் என்று எதிர்பார்த்தாரோ அது விளைந்துவிட்டது. பாலசூரியன் அவசரப்பட்டுவிட்டான் என்று தம் மனத்துக்குள் ஒரு முறைக்குப் பன்முறையாகச் சொல்லிக்கொண்டார் அவர்.

பாலன் பார்த்தான். சபையில் ஒருபுறம் யுத்தமும், மற்றொருபுறத்தில் கலகமும் நடப்பதை அவனால் சகித்துக்கொள்ள முடியவில்லை. தனது கிரீடத்தை எடுத்து வீசியெறிந்தான். அன்று முனிவர் தன்னைச் செய்யப் பணித்த தியாகத்தை இப்பொழுது செய்துவிடுவதே மேல் என்று அவனுக்குத் தோன்றியது.

"என் உயிர்த் தியாகத்தை எவரும் எதிர்பார்க்கவில்லை. முனிவரும் அதை எதிர்பார்க்கமாட்டார். அவரைத் தவத்தினின்றும் கலைப்பித்தபோது எனக்குண்டான பாவத்தை நான் துடைத்தெறிய வேண்டுமானால், ஒரு தியாகம் செய்யவேண்டுமென்று அவர் கேட்டுக்கொண்டார். அதை இப்பொழுதே நிறைவேற்ற என்னால் முடியும். என் பதவியையே விட்டு நீங்குவதைவிட வேறு எந்தத் தியாகத்தை நான் செய்யமுடியும்? ராணி ரத்னாவும், குமாரி சுநந்தாவும் மதியூகி சாதுசக்கரரும் சம்மதித்து அளித்த இந்த ராஜ்யம் என்னுடையதுதானே! ஆகவே அதை இழக்க எனக்கு உரிமையில்லாமலில்லை!'' என்று பலவாறாக எண்ணியவன் சேனாதிபதியை நோக்கினான்.

"நிறுத்துங்கள் யுத்தத்தை...! எனக்குக் கிடைத்த ராஜ்யத்தை நான் விதியின் மற்றொரு சிருஷ்டிக்குத் தியாகம் செய்து விட்டேன்......'' என்று கூறி வேகமாகச் சபையிலிருந்தும் செல்லலானான்.

எங்கும் ஓர் அமைதி நிலவியது அப்போது. அடுத்த க்ஷணப்போதில் ராணியின் குரல் "நில், பாலா'' என்றது. சுநந்தா பாலனைப் பின்பற்றினாள். ஒன்றையும் லட்சியம் செய்யாமல் சென்ற அவனை மற்றொரு குரல் தடுத்து நிறுத்தவே செய்தது. அவன் கால்கள் நின்ற இடத்திலேயே நன்கு பொருந்திவிட்டன. குரல் வந்த திசையை நோக்கியவாறே அவன் கண்கள் பூத்துப்போயின.

☆ காயகல்பசித்தி ☆

வைத்த விழியைப் பெயர்த்து வேறோரிடத்தில் திருஷ்டியைச் செலுத்தாமல் நின்ற பாலனின் முன்னே முனிவரும், குணசீலரும், சித்ராவும் வந்து நின்றனர். குதிரையொன்றினின்றும் இறங்கிய அருணா பின்னே வரலானாள். சாதுபூஷணரும் காளிந்தியும் அடுத்தாற்போல் வந்தனர். சபைமுழுதும் பெருவியப்புக்கொண்டது.

"பாலா, நீ செய்த யாகத்துக்கு அர்த்தமில்லை. ஆனால் தியாகம் புரிந்ததற்குப் பலனாக உன் குற்றமகன்றது. அது மாத்திரமில்லை. நீ எதைத் தியாகம் செய்தாயோ அதையே திரும்பவும் அடையவேண்டிய நிலை வந்துவிட்டது.

சேனாதிபதி, அமரசிம்மன், அவன் விதியால் மடிந்தான். வக்ரநாஸனையும் அவனது விதிப் பாம்பு தனது நச்சுப்பற்களால் கடித்து விழுங்கிவிட்டது. காய கல்பமென்ற துறையில் மன்னர் இறங்கியது நியாயமற்ற செயல்! ஆகவே அவர் மடிந்தார். அவரை மாளச்செய்த குற்றத்தால் வக்ரநாஸன் மடிந்தான். அதிர்ஷ்டமென்ற பூர்வஜன்ம புண்ணிய பலத்தால் பாலசூரியன் மன்னனானான்..

நாமே பாலசூரியனது நல்காலத்திற்கு வழிகாட்டும் கருவியாக இதுவரையிலும் விளங்கினோம். இனியேனும் உண்மையை அறிந்து நீ நடக்க வேண்டும்!

மஹா ஜனங்களே! உங்கள் ராஜ்யம் ஒளி பெறப்போவது திண்ணம்!

பாலா, ஏறு சிம்மாசனத்தில், எடு செங்கோலை, நாம் சூட்டுகிறோம் மணிமுடியை......?' என்று முனிவர் கூறவே, பாலசூரியன் மறு வார்த்தை கூறமுடியாமல் திகைத்து நின்றான். முனிவர் பின்னும் துரிதப்படுத்தினார். சேனாதிபதி முதல் அனைவரும் முனிவரின் ஆகர்ஷண சக்தியில் ஆழ்ந்துபோயினர்.

பாலன் சிம்மாஸனத்தில் ஏறியதும் முனிவர் கிரீடத்தைச் சூட்டினார், "மகத சாம்ராஜ்யத்தின் மணிமுடிச் சக்ரவர்த்தி பாலசூரியர் வாழ்க!'' என்ற ஜயகோஷம் எல்லோருடைய உள்ளத்திலிருந்தும் பேதமற்ற நிலையில் எழுந்து ஒலித்தது.

மஹாராணியின் முகத்தில் அமைதி நிலவியது. சாதுசக்கரர் மகிழ்ச்சியால் பூரித்து நின்றார்.

முனிவர் பாலனை நோக்கிக் கூறினார்.

"சூரியா, நீ சுநந்தாவுடன் இன்பவாழ்வை நடத்தவேண்டும். மஹாராணியின் மனமென்னும் ஓடையில் உனது பக்தி நீர் பாயவேண்டும். பிரஜைகளின் கண்களுக்கு நீ தெய்வத்திற்குச் சமானமாகிறாய்! இன்றே உன் வாழ்வு மேன்மையடைகிறது'' என்று கூறிப்பின் அருணாவைப் பார்த்தார். அவள் கண்களில் துயரக்கண்ணீர் பெருவதைக் கண்டபோது அவள்மீது பரிதாபத்துடன் முனிவர் சில மொழிகளைக் கூறினார்.

"அருணா! இதோ நிற்கிறான் அசுவபாலன்! உனது நாயகன்! எம் வார்த்தையை நீ கடைப்பிடிக்கத்தான்வேண்டும்...'' இவ்வார்த்தை முனிவரிடமிருந்து வெளியாகுமென்று அவள் எதிர்பார்க்கவேயில்லை. அவளுடைய தலை கவிழ்ந்துகொண்டது.

"அருணா, உன் தோழி சித்ராவும் அதைத்தான் வரவேற்கிறாள்'' என்றாள் சித்ரா.

"நானும் அதையே விரும்புகிறேன்'' என்றார் குணசீலர். பாலசூரியன் அவளைப் பார்த்தான். "சகோதரி, என் நண்பனின் கரத்தில் உனது வாழ்வை அன்றேநான் ஒப்படைத்துவிட்டேன். அவனும் உன்னிடம் எல்லையற்ற காதல்கொண்டிருக்கிறான். உனது உள்ளமும் அதை வரவேற்குமென்று நம்புகிறேன்'' என்றான்.

"தெய்வத்திற்கு நிகரான முனிவரும், தந்தையை ஒத்த குணசீலரும், தாய்க்குச்சமானமான சித்ராவும், சகோதரன் பாலனும் கூறும்போது, தான் மறுப்பது தர்மமில்லை என்று தோன்றியது அருணாவுக்கு.

"மஹரிஷியே! இனி அசுவபாலரே எனது பிரேம புருஷர்...." என்று கூறித் தலை குனிந்த வண்ணமாகவே நின்றாள் அருணா.

முனிவர் அசுவபாலனையும் அவளையும் ஒன்று சேர்த்து வைத்து, அதே சமயத்தில் சுநந்தாவைப் பாலனின் கரத்தில் ஒப்பித்துப் பின் சில மொழிகள் கூறினார். சபையிலிருந்த மக்கள் அடைந்த ஆனந்தத்திற்கு அளவேயில்லை.

"குமாரா, இன்றே எம் கடமையும் பூர்த்தியடைந்தது. குதிரையைப்பற்றிய செய்தி ஒன்றை கூறவேண்டும். அதுவே எஞ்சிக் கிடப்பது. நீ ஒரு பிராம்மணச் சிறுவன் என்றாலும் உன் பூர்வஜன்ம தபோபலத்தால், உன் இரத்தத்தில் க்ஷத்திரிய உணர்ச்சியே கலந்துள்ளது. குதிரை உன்னை அன்று பிரியுமாறு செய்யாமலிருப்பின், நீ அதன் மீது ஏறிச்சென்றிருப்பாய் என்று நினைத்தே நாம் அதை அப்புறப்படுத்தினோம். இன்று உன் சகோதரி அருணாவே அதன் மீது ஆரோகணிக்கச் செய்தோம். எல்லோரையும் ஒன்றுகூட்டி வைக்கும் பொறுப்பை இறைவன் எமக்குத் தந்தான். அதை, அதே இறைவன் எம்மூலம் நிறைவேற்றி வைத்தும் விட்டான்.

இனிக் கடைசியாகச் சில வார்த்தைகள் கூறுவோம். அவற்றை நீ எப்போதும் கடைப்பிடிக்க வேண்டும்!

"மஹாராணி ரத்னாவின் உள்ளத்தில் ஓரளவேனும் உன்னால் துயரம் உண்டாதல் கூடாது. மகத சாம்ராஜ்யத்தின் தலைவியே அவள் என்ற நினைவுதான் உன் நெஞ்சில் ஊன்றியிருக்க வேண்டும். அசுவபாலனும் அருணாவும் உன் இரு கண்கள் என்றே நாம் கருதுகிறோம். அவர்களுக்கு நன்மை புரிவதே உன் லட்சியமாக இருத்தல் வேண்டும்.

சுநந்தா உன் வாழ்வின் ஒளி! அந்த ஒளியில் உன் உள்ளம் பூரண சுகத்தையும் அடைய வேண்டும்.

இனிக் கடைசியாக ஒன்றைக் கூற வேண்டும். அமரசிம்மர் ஆவி நீத்ததற்குக் காரணமாயிருந்த 'காயகல்பம்' உன் உள்ளத்தையும் கவர்ந்துவிடாமல் பார்த்துக்கொள். அவர் அத்துறையில் இறங்கியதால்தான் உனக்கு இப்பதவி கிடைத்தது. இனி நீயும் அதை எண்ணிவிடாதே! உன் உடல் ஒளி என்றும் மங்கிவிடாது, கால சக்கரத்தின் சுழற்சியில் முதுமை உன்னை அடையும்போதும் உன் உள்ளத்தின் ஒளி மங்கப் போவதில்லை என்று நாம் நம்புகின்ற உறுதியான எண்ணத்தைச் சிதைத்துவிடாதே! பாலா, வாழ்க நீடூழி காலம்!" என்று கூறி ஆசியும் புரிந்த முனிவரைப் பாலன் பணிந்தான். சாதுபூஷணர், காளிந்தி, குணசீலர் ஆகியவர்களையும் அவன் வணங்கினான்.

சாதுசக்கரரும், ராணி ரத்னாவும் பாலனுடைய சாஷ்டாங்க நமஸ்காரத்தை ஏற்றுக்கொண்டனர்.

முனிவர் பின்பு மறைந்து சென்றார். சபை சந்தோஷத்துடன் கலைந்தது.

இரவில் அன்று சந்திரன் உதிக்கவில்லை. அமாவாசை இருட்டு தன் ஆட்சியைச் செலுத்த நினைத்து ஏமாற்றத்தையே அடைந்தது. நகர் முழுதும் நிம்மதி நிலவியதன் காரணமாகப் பல கோடித் தீபங்கள் ஒருங்கு சேர்ந்து வீசிய ஒளியில் எந்த இருள்தான் தலை காட்ட முடியும்! இரவிலே சூரியன் உதித்தாற்போல், பாலன் அலங்கார மண்டபத்தில் சுநந்தாவுடன் ஒளி வீசலானான்.

அருணா அசுவபாலனுடன் இன்பமொழிகளை அள்ளித்தெளித்த வண்ணமாய்க் காட்சியளித்தாள்.

மஹாராஜா அமரசிம்மர் காயகல்ப சித்தி பெறாமல் ககன உலகிற்குச் சென்றுவிட்டாரென்றாலும், பூலோகத்தினர் திலகம்போன்ற மகதபுரியில் அந்த நான்கு ஆத்மாக்களும் காயகல்பம் பெற்றவர்போலவே, இளமை யெழிலுடன், இன்ப ரஸானுபவத்துடன், புதுமையொளியுடன், மகிழ்ச்சியுள்ளத்துடன் ஆநந்த உலகில் சஞ்சரித்தார்கள். இனி அவர்களுக்கு எல்லாமுமே புதுமையனுபவங்கள் தாம் அல்லவா? இயற்கையிலேயே அழகின் உறைவிடமான இளம் பருவத்தினர் நால்வரும், இன்று சுகானுபவத்தில் மூழ்கியபின், காயகல்ப சித்தியைப் பெற்றவர்களாவதில் தடையிருக்க முடியுமா?

— சுபம். —

அன்பிலே பூத்த ஆத்மா

"அதோ அந்த ஜன்னலில் நின்றுகொண்டிருக்கிறானே அந்தப் புதுச்சேரிச் சிறுவன், ஏழு வயது இருக்கலாம். அங்கே ஏன் அப்படி நிற்கிறான்?" என்று பார்க்கவந்த சென்னைவாசிகள் அணுகிப் பார்த்தபின்புதான் அது ஒரு புதுச்சேரிப் பொம்மை என்று கண்டார்கள். அப்படி அவர்கள் திகைத்து வியந்து கொண்டிருக்கும்போது கடைக்காரன், "இந்தச் சிறுவனுக்கு விலை ரூபாய் ஏழு தான்" என்பான். ஆனால் அப்படி வியந்து [illegible]ர்த்தவர்களே அந்தப் பொம்[illegible]யே வாங்காமல் வேறு ஏதா[illegible] பொம்மைகளை வாங்கிக் [illegible]டு போவார்கள். கண்ணை [illegible]டித் திறக்கும் யந்திரப் [illegible]மைகளை வாங்குவார்கள்; [illegible] விதம் விதமாக வர்ணம் [illegible]ட்டல்காரங்களை வாங்கிக் கொண்டு போவார்கள். பிடித்து அமுக்கினால் சத்தம் போடும் பொம்மைகளையும் வாங்கிக் கொண்டுபோய்த் தங்கள் வீட்டுக் குழந்தைகளிடம் காட்டிச் சத்தமிடச் செய்து, "பார், அப்பா! அம்மா! என்று கூப்பிடுகிறது பாப்பா!" என்று மகிழ்ந்து போவார்கள்.

அந்த ஏழு வயதுப் பையனோ ஓர் உயிர்ச்சித்திரம், அந்தப் புன்னகை பூத்த வதனமும் கருங் கண்களும் யந்திர உதவியில்லாமலே பேசும், கொஞ்சும், எனினும் அந்த ஜீவசக்தியோடு கூடிய சித்திரப்பொம்மையை வாங்க ஒருவரும் விரும்பவில்லை, "சித்திரகாரன் எப்படியோ இதில் ஜீவசக்தியைப் பெய்துவிட்டான்! ஆனால் இது யாருக்கு வேணும்? விசித்திரமான பொழுதுபோக்குப் பொம்மைகளேபோதும்", என்பது வாங்க வந்தவர்களின் மனநிலை.

அந்த ஏழுவயதுப் பையனை எத்தனையோ கைகள் எடுத்துப் பார்க்கவும் செய்தன. அழுக்குப் படுத்தி ஒவ்வொருவரும் திருப்பி அதே இடத்தில் வைத்துவிட்டார்கள். நாளடைவில் 'அது விலையாகவில்லையே' என்று கடைக்காரன் சாதாரண கடைச் சாமான்களுடன் அதை வைத்துவிட்டான். அப்போதும் அந்த ஏழு வயதுப் பையன் புன்னகை புரிந்து கொண்டுதானிருந்தான். "யாராவது ஒரு ரஸிகன் கிடைக்கமாட்டானா, நம் கவியை அவன் காதில் போடுவதற்கு?' என்று நம்பிக்கையுடன் கவிதா தேவியை நோக்கிப் பிரார்த்தித்துக்கொண்டிருக்கும் கவிஞனைப்போல் இருந்துவிட்டான் அந்தச்சித்திரப்பையனும்.

சாதாரணப் பொருள்களுடன் வைக்கப்பட்டிருந்தபோதிலும் ஜன்னலை நோக்கியிருந்ததால், வருகிற போகிற குழந்தைகளையும், தாய்மார்களையும், தபால்காரனையும், போலீஸ்காரனையும் பார்த்துக்கொண்டிருந்தான். அந்த ஜனப் பிரவாகத்திலே ஒரு துளியாவது உண்மை காணும் சக்தியும் ரஸிகத்தன்மையும் இருக்க முடியாதா?

ஒரு நாள் ஒரு அம்மாள் வந்து நின்றாள். விசித்திரப் பொம்மைகளைப் பார்த்துவிட்டு இந்தச் சித்திரப் பதுமையை உற்று நோக்கினாள். இனிமையான புன்முறுவலுடன் அன்புபூத்த கண்களுடன் அந்தச் சித்திரப் பையனும் அவளை நோக்கி விசேஷமாய்ப் புன்முறுவல் செய்து வரவேற்பது போல் இருந்தான். எங்கேயோ பார்த்த முகம்போல் இருந்தது சிறுவனுக்கு. தன் ஊராகிய புதுவையைச் சேர்ந்த கிராமத்தில் தன்னை நிர்மாணித்த தொழிலாளியின் கூடத்திலே ஒரு சொப்பனத்தில் பார்த்த முகம்போலத் தோன்றியது. அதைச் சொல்ல வேண்டுமென்று ஆசைதான்: ஆனால் அதையும் அந்தப் புன்னகை வாயிலாகத்தான் சொல்ல முடிந்தது.

இந்தப் புன்னகைப் பேச்சும் அந்த அம்மாளுக்குப் புரிந்துவிட்டது. அவள் கடைக்காரனை நோக்கி, "இந்தச் சிறுவனுக்கு ஓவியன் உயிர் கொடுத்திருக்கிறான்; அன்பு பாராட்டினால் ஆத்மாவையும் அளித்துவிடலாம்" என்றாள். சென்னைக் கடைக்காரனோ மக்களையும் யந்திரங்களாகவே மதிப்பான், 'ஆத்மா வியாபாரச் சரக்கு அல்ல' என்பது அவனுக்கு நன்றாகத் தெரியும். எனினும், 'இந்தப் பித்துக்குளியிடம் காசு பறித்துக்கொண்டு, விலையாகாத பொம்மையை விற்றுவிடலாம்' என்று எண்ணி, வந்த சந்தோஷத்தை உள்ளுக்குள்ளே அடக்கிக்கொண்டான். விலையை அதிகப்படுத்தி பத்து ரூபாய்க்கு அதிசயச் சிறுவனைக் கொடுத்துவிடுவதாய்ச் சொன்னான்.

அவள் உடனே பணத்தைக் கொடுத்துப் பொம்மையைப் பெற்றுக்கொண்டாள். வேறு விசித்திரப் பொம்மைகளையும் வர்ணப் பொம்மைகளையும் தொங்கிப்பொம்மைகளையும்காட்டினான். அவள் கண்களோ அவற்றைப் பார்க்கவும் கூசின. யந்திர விசைகளை முடுக்கிப் பொம்மைகளை அவன் சத்தமிடச் செய்ததும், அவள் காதைப் பொத்திக்கொண்டு கடையைவிட்டுப் புறப்பட்டாள். பழுப்புக் காகிதம், உவ்வே மென்மையான காகிதம் முதலியவற்றால் சுருட்டிக் கடைக்காரன் கொடுத்த பொம்மையை ஒரு வேலைக்காரன் காரில் வைக்க, அது 'விர்'ரென்று புறப்பட்டது, அம்மாளுடனும் புதுவைச் சிறுவனுடனும். சிறுவனுக்கு உள்ளுக்குள்ளே சந்தோஷம்.

சில தினங்களாகச் சிறுவனுக்கு அந்த ஒதுக்குப்புற மாளி

கையிலிருப்பது ஒருமாதிரி இருந்தது. "பரபரப்பான காட்சிகளைப் பார்க்க முடியவில்லை; எப்படிப் பொழுது போகும்?" என்று தான் முதல்முதல் நினைத்தான். நாளடைவில் "அது என்ன வாழ்வு?" என்று தோன்றிவிட்டது. அந்த அம்மாள் தன்னை "மணி" என்று அழைத்ததும், மணியான பெயர் கிடைத்துவிட்டதேயென்று புன்னகை ஒரு புது நிலவுபோலப் பொங்கி வந்தது.

அந்த மாளிகையில் அம்மாளின் மூன்று குழந்தைகள் புதுவைச் சிறுவனுடன் விளையாட வந்தார்கள். கடையில் இருக்கும்போதே குழந்தைகள் கொடுமை செய்யக் கூடுமென்று ஒரு புத்திசாலியான பொம்மை எச்சரிக்கை செய்திருந்தது. சிறுவர்கள் தங்கள் சகோதரிகளின் பொம்மைகளைக் குண்டூசிகளால் குத்தி ஹிம்ஸிப்பது உண்டென்றும் புதுவைச் சிறுவன் கேள்விப்பட்டிருந்தான். ஆனால் இந்த வீட்டில் மணிக்குக் கொடுமை இழைப்பவர் ஒருவருமில்லை.

புதுவை மணிக்கு அந்த மூன்று சென்னைக் குழந்தைகளும் கதை சொல்வார்கள். அக்குழந்தைகளில் இருவர் சிறுவர், சிறுமி ஒருத்தி. சிறுமி எப்போதும் நோயாளியாக இருந்தாள். அவள் அதிசயமான கதை சொல்வாள். அக்கதைகள், சாதாரணத் தலையணைகளையும் பாய்களையும் பெரிய பெரிய கோட்டை கொத்தளங்களாகவும் மலைகளாகவும் காட்டிவிடும்: சொர்க்க பூமியாகவும் காட்டி விடும்.

ஒரு நாள் அந்த வீட்டுச் சிறுமி வீட்டை விட்டுப் போய்விட்டாள். "ஏன் அவளை அப்படி மூடி மறைத்துக் கட்டிக் கொண்டு போகிறார்கள்? தன்னை விலைக்கு வாங்கிய அம்மாள் ஏன் அப்படி அலறி அழுகிறாள்?" என்பதெல்லாம் புதுவை மணிக்குப் புரியவில்லை. இந்த உலகத்தை விட்டே ஏதோ ஒரு புதிய லோகத்திற்குப் போய் விட்டதாகவே பேசிக் கொண்டார்கள். அப்படியானால் இப்படியெல்லாம் புலம்புவானேன்? அதுவும் புதுவை மணிக்குப் புதுமையாகவே இருந்தது.

நீண்ட நேரமாக மணியைக் கவனிப்பார் யாருமில்லை. தன்னை அன்புடன் வாங்கிவந்த அம்மாள் மெள்ளத் தன்னை நோக்கி வருவதை மணி கண்டான். அவளை, அம்மா என்று கூப்பிட ஆசைப்பட்டான். அதுவும் புன்னகையாகத்தான் வெளிப்பட்டது. அவளுடைய முகம் வழக்கமான மலர்ச்சியில்லாமல் கூம்பிக் குவிந்திருந்தது. தான்மட்டும் முக மலர்ச்சியுடன் இருப்பது அவ்வளவு சரியில்லை என்று தோன்றியது மணிக்கு. ஆனால் தன் புன்னகையை மறைத்துக்கொள்ளத் தெரியவில்லை.

அந்த நிலையில் அந்த அம்மாள் மணியை வாரி எடுத்தாள். கண்ணீர் தோய்ந்த அந்த முகத்தை நோக்கி, "பனித்துளிகள் நிறைந்த தாமரைபோல் இருக்கிறது!" என்று வியந்தான் மணி. இரண்டொரு கண்ணீர்ச் சொட்டு தன் மேல் விழுந்ததைக் கண்டு, "உஷ்ணமாயிருக்கிறது" என்று எண்ணினான். அந்த அம்மாளுடைய இதயதாபம் மணிக்குத் தெரிந்துவிட்டது. எல்லாம், பிரிந்துபோன அந்தச் சிறுமிக்காகத்தான்! என்பதும் புலனாயிற்று.

அந்த அம்மாள் மணியை நோக்கி, "உனக்குக் கதை சொல்லிக்கொண்டே இருப்பாளே, அவளை நீ எப்படியப்பா பிரிந்திருக்கிறாய்? என்று சொல்லிக் கொண்டு அழுதாள் ஒரு கணம். படித்தவள், புத்திசாலி; "இனி, அவள் வந்து கதை சொல்ல முடியாது. சொர்க்க லோகத்திற்குப் போய்விட்டாள். அங்கே சந்தோஷமாய் இருக்கிறாள். இங்கே இவ்வளவு கஷ்டப் பட்டுக்கொண்டிருந்தாள் அப்பா! இப்போது விடுதலை கிடைத்து விட்டது; ஆனந்தமாய் இருப்பாள்!" என்றாள் மறுகணம்.

மணியனை மடியில் வைத்துக் கொண்டு அவள் இப்படிப் பேசிக் கொண்டிருக்கும்போதே, மணியன் முகமும் கண்ணீரால் நிறைந்து விட்டது, அதில் மணியனுக்கும் ஒரு திருப்தி. அவள் மணியனை அணைத்துக்கொண்டாள். "ஆஹா, அந்த அன்புதான் எவ்வளவு அதிசயமாக, எவ்வளவு ஆனந்தமாக இருந்தது!" அந்த அணைப்பிலே, எத்தனை அதிசய உணர்ச்சிகள், இதற்கு முன் உணர்ந்திராத உணர்ச்சிகள், அலை பாய்ந்தன மணியன் உள்ளத்திலே!

அந்தச் சோகத்தை, அன்பின் அணைப்பிலே, அப்படியே உணர்ந்து கொண்டான் மணியன். அந்த மகத்தான சோகம் புரிந்து விட்டது. "அதில் முத்துமுத்தாய் விழும் கண்ணீர் மட்டுமா? முத்தைக் காட்டிலும் அருமையான ஒளிமிக்க அழகும் கலந்திருக்கிறது!" என்பதும் தெரிந்து விட்டது. மகத்தான சோகத்தின் மகத்தான அழகு மணியனுக்கும் ஒரு புதிய அழகை—ஏன், ஒரு புதிய பிறப்பையே—தந்துவிட்டது. அந்த அம்மாவின் அன்புத் தழுவல் புதுவை மணியனுக்கு ஓர் ஆத்மாவை அளித்துவிட்டது!

முதல் முதல் தானும் அந்தச் சிறுமி போயிருக்கும் பொன்னுலகத்திற்குப் போகவேண்டும், அங்கே அவளுடன் கற்பகச் சோலையில் விளையாட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. நாளடைவில் சோகம் கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து ஒரு புனித நினைவாகிவிட்டது.

இரண்டு சிறுவர்களும் நாளடைவில் மணியுடன் விளையாடுவதை விட்டுவிட்டார்கள். ஒருவன் பேர் பெற்ற எழுத்தாளனாகிவிட்டான்; "கலைஞர்களல்லவா? நம்மைப் மற்றவன் சங்கீதக் கலைஞனாகிவிட்டான். புரிந்து கொள்வார்கள்!" என்று நினைத்தான் மணி. ஆனால் அந்தக் கலைஞர்கள் சேர்ந்து எத்தனையோ பாரமான புகாட்ட களும், கர்னாடக இசை நுணுக்கங்களும் புரிந்தபோதிலும், மணியுடைய உள்ளம் தெரியவில்லை. தெரிந்த கலைஞர்களும் '[illegible] கடைக்காரனைப் போல் மூடிக்கொண்டு லெளகிக பிரகஸ்பதிகளாகத்தான் இருந்தார்கள்.

ஆனால் அம்மாவுக்கு—தனக்கு ஆத்மாவை அளித்த அம்மாவுக்கு—மணியன் உள்ளம் திறந்த புஸ்தகம்போல் இருந்தது. மணியனுக்கு வயது இருபத்தெட்டு. அம்மா கிழவியாகி விட்டாள். எனினும் மணியனோடு கொஞ்சுவாள்; தோட்டத்திற்குத் தூக்கிக்கொண்டு போவாள். அவளுடைய அன்பிலும் அனுபவங்களிலும் மணி தாராளமாய்க் கலந்து கொண்டான்.

திடீரென்று அந்த அம்மாளுக்குச் சென்னையை விட்டுப் புதுவையில் போய் வசிக்கவேண்டுமென்ற ஆசை ஏற்பட்டது. அதில் மணிக்கு, விசேஷ உத்ஸாகம். அவள் புதுவையில் வசதியான ஓர் இல்லத்திலே மணியுடன் வசித்து வந்தாள். இரண்டு பிள்ளைகளும் சென்னையிலேயே தங்கி விட்டதால், அம்மாளுடன் புதுவையில் தங்கிய அருமைப் புதல்வன் மணியன் தான்!

இளமை வெள்ளம்

ப. ஸ்ரீ.

21

தேசியம் தந்த தமிழ்

★

தமிழ் மறுமலர்ச்சிக்குத் தேசியமே அதிமுக்கிய காரணம் என்பதை அறியாதார் இல்லை. 1907-ம் ஆண்டுக்கு முன் புதிய தமிழ் நடை உருவாகவில்லை என்றே சொல்லலாம். தமிழில் அரசியல்-கருத்துக்களையெல்லாம் தெளிவாக வெளியிட முடியுமென்று 1907—ம் ஆண்டுக்கு முன்பே **'சுதேசமித்திர'னும்** பாரதியாரின் **'இந்தியா'** பத்திரிகையும் மெய்ப்பித்துவிட்டன. எனினும் புதுமைத் தமிழ் நடையில் ஒரு புதிய சக்தி பிறப்பதற்கு,

செந்தமிழ் நாடெனும்
போதினிலே,—இன்பத்
தேன் வந்து பாயுது
காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற
பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே!

என்பதுபோன்ற தேசியப் பாடல்களின் பிறப்பு அவசியமாக இருந்தது.

பாரதிதோன்றிய காலம்

இத்தகைய பாடல்கள், 'மனோன்மணீயம்' என்ற புதிய தமிழ் நாடகத்தை விரும்பிப் படித்திருந்த என்னைப்போன்றவர்களுக்கும், ஒரு புதுமைத் தமிழாகவே தோன்றின. 'நாட்டுப் பாடல்கள்' விஷயமான ஒரு போட்டியில் பாரதியாரின் மேலே குறித்த பாடல்களுக்குப் பரிசு கிடைக்கவில்லை! பாரதியாரின் நடையை அந்நாளில் பண்டிதர்கள் அங்கீகரிக்கவில்லை; மற்றவர்களும் அவற்றைச் சாமானியப் பாடல்களாகவே கருதிவிட்டனர். 'ஒரு புதிய மேதாவி தோன்றிவிட்டார்: தமிழகத்திற்குப் புத்துயிர் அளிக்கப்போகிறார்' என்பதைத் தமிழறிஞர்களும் அறிந்துகொள்ளவில்லை; பொதுமக்களும் அறிந்துகொள்ளவில்லை.

அக்காலத்திலேயே 'பிரதாப முதலியார் சரித்திரம்' 'கமலாம்பாள்' 'பத்மாவதி' முதலான சில நாவல்கள் எளிய இனிய தமிழில் எழுதப் பெற்றிருந்தன. எனினும் பல தமிழ்ப் பண்டிதர்கள் கடினமான நடையையே 'செந்தமிழ்' என்று கருதி வந்தனர். சங்க இலக்கியங்களை டாக்டர் உ. வே. சாமிநாதையர் வெளியிட்டபின் சங்ககால நடையில் எழுத முயன்றவர்களும் உண்டு. 'செந்தமிழ்' என்றால் 'சென்ற தமிழ்'— அதாவது இறந்த காலத் தமிழ், இறந்த தமிழ்—என்றே அவர்கள் கருதுவராயினர்.

சென்னைப் பல்கலைக் கழகம் தமிழ் அகராதி வெளியிட்டிருக்கிறதல்லவா? அதில் வழக்கு வீழ்ந்த சொற்கள் இவை இவை என்று குறிக்கப்படவில்லை. ஆங்கில அகராதிகளில் இக்குறிப்பு உண்டு. 'ஏன் தமிழ் அகராதியில் இக்குறிப்பு இல்லை?' என்று ஒருவர் கேட்டதற்கு, ரஸிகமணி டி. கே. சி. ஒரு சமயம் சொன்ன விடை எனக்கு இப்போது நினைவிற்கு வருகிறது: 'வழக்கில் இல்லாத சொற்களைச் சுட்டிக்காட்டியிருந்தால், அவற்றையே உபயோகித்து இளம் பண்டிதர்கள் கட்டுரைகள் எழுதத் தொடங்கி விடுவார்கள்!' என்றார் நண்பர் டி. கே. சி. தேசியம் தமிழகத்தில் வளர்ந்தோங்குவதற்குமுன் பண்டிதர்களின் விநோத ஆசையும், லட்சியமும் அந்தப் போக்கிலேதான் சென்றன.

அக்காலத்தில் 'தூய தமிழ்' என்ற நடையையும் சிலர் கையாள முயன்றார்கள். 'தமிழ், உயர் தனிச் செம்மொழி: ஒரு காலத்தில்—அதாவது ஆரியர்கள் வருவதற்கு முன்பு—வடமொழிக் கலப்பில்லாமல், வேறு மொழிக் கலப்பும் இல்லாமல் தனித்தமிழாக இயங்கி வந்தது. நாமும் வடமொழிக் கூட்டுறவை அறவே ஒழித்து அப்பண்டைப் பழங் காலத் தமிழை—அத்தனிமையை—மீண்டும் உயிர்ப்பிக்கவேண்டும்' என்பது அவர்கள் வாதம். 'அப்படியானால் **மாண்ட தமிழா** மீண்டும் தாங்கள் வேண்டுவது?' என்று ஒருவர் கேட்க, அத்தகைய தூய தமிழ்ப் புலவர்களில் ஒருவர், "ஆம், மாண்ட தமிழே யாம் வேண்டுவது! 'மாண்ட' என்றால் 'மேம்பட்ட, மாட்சிமைப்பட்ட' என்பதுதான் பழந்தமிழ்ப்பொருள்" என்று விடையளித்தார்.

அப்புலவர் கூறியது உண்மைதான். சங்ககாலக் கவி, ஒருவர், அறிவாலும், குணங்களாலும் மேம்பட்டிருந்த தம் மனைவியை 'மாண்ட என் மனைவி' என்றே குறிப்பிடுகிறார். இந்நாளில் எந்தத் தூய தமிழ்ப் புலவரே உயிரோடு இருக்கும் தம் மனைவியை 'மாண்ட என் மனைவி' என்று குறிப்பிடத் துணிவர்? மாண்ட தமிழ் இனி வேண்டுவதன்று என்பதுதான் உண்மையிலும் உண்மை. மாண்ட உயிர் மீளுமா? அப்படியேதான் வழக்கு வீழ்ந்த வார்த்தையும்.

சிலர் அந்நாளில் ஆளின் பெயர், ஊரின் பெயர்களையும் தமிழாக்க முயன்றார்கள். 'ஷேக்ஸ்பியர்' என்ற பெயரை 'ஜெகப்பிரியர்' என்று எழுதினார் வடமொழித் துவேஷமில்லாத தமிழ்ப் புலவர் ஒருவர். இவரே தமிழ்க்காதலால் 'டெனிஸனை'த் 'தேனிசையன்' ஆக்கினார். 'காண்டர்பரி' (Canterbury) 'கந்தர்புரி' யாயிற்று. 'கந்தர் என்ற முருகக் கடவுளின் வழிபாடு அவ்வூரிலும் இருந்திருக்குமோ?' என்று ஆராயத் தொடங்கினார் திருநெல்வேலிச் சீமைப் புலவர்களில் ஒருவர். வேறு சிலர் ரங்கூனை 'இரங்கூன்' என்றும், ரோம் நகரை 'உரோமபுரி' என்றும் 'இரோமை நகர்

என்றும் எழுதத் தொடங்கினர். இப்படியெல்லாம் தமிழை வதைத்த முயற்சிகளைத் தடுத்து தமிழை வளர்க்க முயன்று வெற்றியும் கண்டது தேசீயம்.

பாரதியாரின் வெற்றி

அந்நாளிலேயே வங்க மொழி வளமுற்று வளர்ந்தோங்கி வந்தது. தமிழும் அப்படி வளர வேண்டும் என்று ஆசைப்பட்டார் பாரதியார். ஆங்கிலேயர்கள் தங்கள் மொழியை எத்தகைய சக்தி வாய்ந்த கருவியாக்கி உபயோகிக்கிறார்களோ, அத்தகைய ஜீவ சக்தியுடன் தம் தாய் மொழியையும் வளர் மொழியாக்க முயன்று வெற்றியும் கண்டார் நம் தேசிய கவிஞர்.

'தமிழ்த் தெய்வம்' என்று தமிழை உயர்த்திப் பேசினார்கள் அந்நாளிலும். ஆனால், இத்தெய்வத்தை வாழ்விழந்த பழந் தெய்வங்களோடு சேர்த்துவிடக்கூடாதென்று துணிந்தார் பாரதியார். பேச்சுத் தமிழுக்கும் எழுத்துத் தமிழுக்கும் இடையே கிடந்த கடல்போன்ற வேற்றுமை மறையும்படி, யாரும் தமிழை விரும்பி படித்து பலவேறு விஷயங்களையும் தெரிந்துகொள்ளும்படி, தமிழ்க் கவிதையையும் சாதாரண மக்கள் அறிந்து அனுபவிக்கும்படி, நம் கவிஞர் ஒரு புதிய தமிழ் நடையை உருவாக்கினார். தேசீயக் கிளர்ச்சியைப் பயன்படுத்திக்கொண்டு பாரதியார் தமிழையும் வளர்த்துவிட்டார்.

'தமிழ்த் தென்றல்' 'தண்டமிழ் மாருதம்' என்று தமிழின் இனிமையையும், தன்மையையும் மெல்லோசையையும் பண்டிதர்கள் குறிப்பிடுவதுண்டு. பாரதியாரோ,

கனலையும் நீரையும்
சேர்த்து— நல்ல
காற்றையும் வானவெளி
யையும் சேர்த்து,

தமிழை மிகச் சிறந்த சக்தி—ஆயுதம் ஆக்கிவிட்டார். 'தமிழ்த் தென்றல்' மட்டுமல்ல, 'தமிழ்ப் புயலு'ம்கூட—என்று சொல்லும்படியாகச் செய்துவிட்டார். சுரத் தமிழை வீரத் தமிழாகவும்செய்து விட்டார்.

பாரதியாரின் தமிழ், எட்டயபுரம் முதலான இடங்களில் ஒரு சக்திக் குழந்தையாகத் தவழ்ந்தது; சென்னையில் ஆரோக்கியமும் அழகும் வாய்ந்த சிறுமியாக வளர்ந்தது; புதுவையில் சக்திக் கனலான கலா மோகினியாய் ஜொலித்தது. எல்லாம் தேசீயம் பாரதியார் வாயிலாகச் செய்த அற்புதம்தான்.

வ. வே. சு. ஐயரின் தமிழ்ப்பணி

பாரதியார் தம் உள்ளொளியால், தேசிய ஆவேசத்தால், வளர்த்த தமிழை ஆசிரியர் வ. வே. சு. ஐயர் தம் பெரும்புலமைத் திறத்தால், தம் அறிவுப் பரப்பினால், மேலும் வளர்த்தார். ஐயர் அதிக அளவில் வட சொற்களை கையாண்டார் என்று இவர் நடைக்கு ஒரு குறை சொல்வது உண்டு. ஆனால் கருத்துக்களை அணியணியாக வகுத்துச் சேனா சமுத்திரம்போல் காட்டும் நடையில், ஆங்கிலத்தில் வெளியிடக் கூடிய, அரும்பெருங் கருத்துக்களையெல்லாம் தமிழிலும் காட்டிவிடவேண்டும் என்ற ஆத்திரத்தில், 'எது வடமொழி? எது தமிழ்?' என்று நிறுத்துப்போட அவகாசம்தான் ஏது? அப்படிச் செய்யத்தான் முடியுமா?

ஆசிரியர் வ. வே. சு. ஐயரின் புலமை நிறைந்த தமிழ் நடையையும் தேசீயம் தூண்டி வளர்த்தது என்று சொல்லவேண்டும். தாம் நடத்திய 'பால பாரதி' பத்திரிகையிலும் பிறகு நடத்திய 'தேசபக்தன்' பத்திரிகையிலும் ஐயரின் தமிழ்நடை, ஆங்கிலம் போல் தெளிவும் ஆற்றலும் ஆழமும் வேகமும் பெற்றிருந்தது. அரசியல்-புரட்சியில் துணிந்து இறங்கியிருந்த ஐயர் தமிழ்நடையிலும் புரட்சிகரமான மாறுதல்களை மேற்கொண்டார்.

திரு.வி.க. செய்த தமிழ்த்தொண்டு

திரு. வ. வே. சு. ஐயர் தம் ஆங்கிலப் புலமையையும் வடமொழிப் புலமையையும் பிறமொழி புலமையையும் ஒட்டித் தமிழை வளர்க்க முயன்றார் என்றால், திரு. வி. க. பழைய தமிழ்ப் புலமையை ஒட்டி ஒரு புதிய தமிழைப் படைக்க முயன்றார் என்று சொல்லலாம். இவரும் 'தேசபக்தன்' பத்திரிகை வாயிலாகத் தேசீயப் பிரசாரம் செய்வதோடு ஒரு தமிழ்நடையையும் வளர்க்கலானார். 'நவசக்தி' என்ற பத்திரிகை வாயிலாகவும் தமிழ் நடையில் ஒரு புதிய சக்தியை அமைத்துக் காட்டினார்.

1917-ம் ஆண்டில்தான் நான் முதன் முதல் தெரிந்துகொண்டேன். அந்நாளில் நான் கிராமவாசியாக இருந்தேன். சென்னைக்கு வரும்போது திரு. வி. க. வுடன் தங்குவதுண்டு. நாளடைவில் 'நவசக்தி' பத்திரிகையில் உதவி ஆசிரியராக வேலைபார்த்த 'கல்கி'யுடனும் பழக நேர்ந்தது.

'பாரதி பரம்பரை' என்று இந்நாளில் புதுமை எழுத்தாளர்களைக் குறிப்பிடுகிறோமல்லவா? அந்நாளில் திரு. வி. கவும் எழுத்தாளர்களுக்கும் பேச்சாளர்களுக்கும் ஒரு வழிகாட்டியாக இருந்தார். எத்தனையோ இளைஞர்கள் அவரைப்போல எழுதவும், பேசவும் முயன்றனர். 'கல்கி' தான் அந்நாளிலேயே தமக்கென்று ஒரு சொந்த நடையைப் படைத்துக் கொள்ள முயன்றார்.

வ. உ. சி. முதலானவர்களின் தமிழ்த்தொண்டு

திரு. வி. க. எழுத்தாளராக இருந்ததுபோல் சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். இவர் சொற்பொழிவுகளைக் கேட்பதற்கு முன்பே நான் வ. உ. சியின் ஆவேசப்பொழிவுகளை அனுபவித்திருக்கிறேன். வங்க நாட்டுப்பிரசங்கியான விபினசந்திரபாலரைப்போல் அவ்வளவு திறமையாக வ. உ. சி. யும் அவரது தோழரான சுப்பிரமணிய சிவமும் பேசுவார்கள்.

'அவன் தோல் வெளுப்பாம், என் தோல் கறுப்பாம்' என்ற பல்லவியுடன் தமிழ்நாடெங்கும் பிரசங்க மழை பொழிந்த திரு. சத்தியமூர்த்தியும் சிறந்த தமிழ்ப் பேச்சாளர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். வேறு பலர் தமிழ்ப் பேச்சாளர்களாகவும், எழுத்தாளர்களாகவும் விளங்கியதற்கும் தேசீய வளர்ச்சியே முக்கிய காரணமாகும்.

* * *

'உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்ற பாரதி வாக்கிற்கு இணங்க, வாக்கும் எழுத்தும் உண்மையொளியைத் தமிழிலே பிரதிபலிக்கத் தொடங்கின. இதனால் புதுமைத் தமிழ் பிறந்தது. இதற்கு அடிப்படையான காரணம் தேசீயம் பிறப்பித்த தேசபக்தி ஆவேசம்தான்.

ஆராய்ச்சிப் புத்தகங்கள், சரித்திரப் புத்தகங்கள் இதிலே விஷயங்களை அகர வரிசை கொடுப்பது ஆதி நாள் வழக்கு. இன்றைய மறுமலர்ச்சியில் அதற்கு வினை பிடித்தது. அகர வரிசை இன்றி வருகிறது புஸ்தகம், சுண்டுவிரல் இல்லாத கை, காற்றில்லாத டயர், வாலில்லாத நாய், என்பதாக நண்பர் சொல்லுவார். நாயின் நன்றி முழுவதும் அதன் வாலிலே இருப்பதுபோலப் புஸ்தகத்தின் சிறப்பு, பின் பக்கமுள்ள ''இண்டக்ஸ்'' அகர வரிசையிலே இருப்பதாக பண்டைய ஆசிரியர்கள் கருத்து.

பெயரகராதியாக, அகர வரிசையாகத் தொகுப்பார்கள். எள்ளளவில் இதைச் செய்பவர்கள் மகா சோம்பேறிகளாக இருக்க வேண்டும். இம்மாதிரி அகர வரிசை எழுதுகிறவர்கள் புஸ்தகத்தை விட, அகர வரிசையிடை முக்கியமாக நினைக்கிறார்கள். குமரியை விடக் குங்குமம் சமூகத்தில் ஆட்சி செலுத்தவில்லை, அந்தக் கதைதான்.

அகர வரிசை இல்லாவிட்டால் எந்தப் பக்கத்தில் எதைப் படித்தோம் என்று தடுமாற வேண்டும். பளிச்சென்று, புஸ்தகத்தில் படித்த இடத்தை எடுப்பதற்கு அகர வரிசை ஒரு கை காட்டி. வானத்துக்கு நீலமும், கடலுக்கு அலையும், நோட்டுக்குச் சில்லரையும் எப்படியோ அப்படித்தான் புஸ்தகத்துக்கு அகர வரிசை என்பதாக நினைத்தேன்.

அகர வரிசை என்று பாதிப் பக்கம் நிரப்புகிறதைவிட விஷயங்களையே எழுதிவிடலாம் என்ற அனுபவம் நான் எழுதிய ஒரு புஸ்தகத்திற்கு அகர வரிசை அட்டவணை தயாரிக்க முயன்றபோது எனக்கு ஏற்பட்டது. அகர வரிசையில் தயாரிக்க முயன்றதில் புஸ்தகத்தைவிட மூன்று பங்கும் பெயரகராதி முறைப்படி தயாரிக்க முயன்றபோது நாலு மடங்கும் வந்தன.

என் அலமாரியில் சரித்திரப் புஸ்தகம் ஒன்று இருக்கிறது. அதில் மகா அலெக்ஸாந்தரை நீங்கள் பார்க்க முயன்றால், கீழ்க்கண்ட சித்து வேலைகள் செய்ய நேரிடும்.

மகா வீரன் அல்லவா அலெக்ஸாந்தர்? என்ற அகர வரிசையில் அவனைப் பார்க்கிறேன். மகா பார்க்க என்றிருந்தது. உடனே மகா பார்க்கிறோம். மகாவில் கி. பி. 326 பார்க்க என்று சொல்லவே, நாம் கி. பி. 326க்கும் போகிறோம்! கி. பி. 326-க்குள் என்ன காண்கிறோம்? சீலம் நதி, சரி, சீலம்நதியில் அலெக்ஸாந்தர் அகப்படுவானா? மாட்டான். போர்ஸ் காண்க என்கிறார் ஆசிரியர். போர்ஸ் பார்க்கிறோம். பாரப்பா யானைப்படைக்குள். யானைப் படைக்குள் நுழைந்தால் அலெக்ஸாந்தரை சுலபத்தில் காண முடிகிறதா? யானைப்படை, மாஸிடோனியாவைப் பார் என்கிறது. மாஸிடோனியாவைத் திருப்பினால் மகா அலெக்ஸாந்தர் இருக்கிறான்.

இவ்வளவு சிரமத்திற்கு நாம் சரித்திரப் புஸ்தகத்தையே படித்து முடித்து விடலாம். அகர வரிசையை அட்டவணையை நினைக்கிறபோதெல்லாம் சிறுபிள்ளையில் நாம் புஸ்தகங்களில் 'என் பெயரென்ன' என்று எழுதி 91-ம் பக்கம் பார்க்க, பிறகு 6-ம் பக்கம் பார்க்க......இப்படிப் பக்கங்களை புரட்டச்சொல்லி, 'சொன்னபடி செய்தவன் முட்டாள்' என விளையாட்டுக்கு எழுதுவோமே அந்தக் கதைதான் நினைவில் வருகிறது.

இந்தச் சரித்திரப்புஸ்தகத்தை விட ஒரு துப்பறியும் நாவலில் அகர வரிசை அட்டவணை இருந்தது. கதையைவிட அகர வரிசை ரஸமாக இருக்கவே அதைப் படிக்க ஆரம்பித்தேன்.

அகரவரிசைக் கிரமமாகமுதல் வார்த்தை அனுமான். 9, 46, 48, 49, 79, 103, 107, 210...முதலான பக்கங்களில் அனுமானைப் பற்றிய செய்தி இருக்கிறது என்பது நூலாசிரியர் கொள்கை.

ஒன்பதாம் பக்கத்திலே அநுமான் பிறந்தவுடன் சூரியனைப் பார்த்த மாதிரி நமது கதா நாயகன், கதா நாயகி கதலிப் பூவைப் பார்த்தான்.

சரி, 46-ம் பக்கத்தில், கதலிப்பூ சொன்னாள். 'ஹே, கதா போக்கிரி இராவணனிடம் வாலை நீட்டின மாதிரி நீ என்னிடம் வாலை நீட்டாதே'

48-ம் பக்கத்தில், கதாநாயகியுடைய தந்தையின் முகம் ஒரு பக்திமானைப்போலிருக்கும்.

79-ம் பக்கம், கதாநாயகி கதலிப்பூ அனுமானைக்கண்ட பரதாழ்வார்போல, கதாநாயகனுடைய நாயைக்கண்டதும் ஆனந்தம் கொண்டாள்.

103-ம் பக்கம், சோலையிலே அவள் துள்ளி ஓடியபோது, கடலைத்தாவிய அனுமானைப்போலத் தாவிப்பிடித்தான் அவன்.

107-ம் பக்கம் கதாநாயகன் வாயிலிருந்த சிகரெட், அவளுக்கு அனுமான் வாலிலிருந்த நெருப்பை நினைவூட்டிற்று.

இப்படியாக கதையில் எங்கெங்கு அனுமான் தலை நீட்டி காட்சியளித்திருந்தானோ, அந்தப் பக்கங்கள் அகர வரிசையில் வாலாட்டின. அகர வரிசையிலுள்ள அனுமான் தன் வாலைவிட அதிகப் பக்கங்களை ஆக்கிரமித்திருந்தான். அந்த நாவலாசிரியர் ஒரு அனுமார் உபாசகராக இருந்திருக்கலாம். அந்நாவலாசிரியர் கையில் அனுமான் பட்டபாடு அனுமான் கையில் அசோக வனம் பட்டிருக்காது என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

எனது உறவினர் தமது சுயசரிதம் ஒன்றை எழுதும்படி

வேண்டிக்கொண்டார். அகர வரிசைவாரியாக வெளியிட வேண்டுமென்பது ஒப்பந்தம். முதன் முதலாக ஒரே ஒரு பாரா எழுதி அதை அட்டவணை செய்ய முயன்றேன். எழுதிய பத்து வரிகள் இதோ!

"ஸ்ரீமான் பூபாளம் பிள்ளையவர்கள், மனிதர் பிறவியின் பலாபலன்களை அடிக்கடி எடுத்துச் சொல்லிவருகிற வழக்கம் போல, ஒரு சமயம் சொல்லுங்காலை இந்நிலவுலகின்கண் ஜனவகை கண்டங்களை சமுத்திரங்கள் சூழ்ந்திருப்பதுபோன்று, பதவி, பட்டம், பணம், உத்யோகம், அந்தஸ்து எனும் ஐவகைக் கண்டங்கள் சூழ்ந்திருந்தும், நாம் அஃதின்றித் தவிப்பது கி. மு. 326-ல் மாலை நேரத்திலே சிலர் நதிக்கரையில் யானைப்படையிருந்தும் மகா அலெக்ஸாந்தரிடம் தோல்வியடைந்த சரித்திரக் கதையை நினைவூட்டுகிறதை ஆலோசனை செய்யுங்காலத்திலே, மனித யத்னங்களால் நடவாத காரியம் இல்லையென்பதை மனப்பூர்வமாக அநுபவ சாத்தியமாக, ஓங்கி உத்சாகத்தோடு, பலருடைய கரகோஷத்திற்கு இடையிலே தைரியமாகச் சொல்லுகிறேன்," என்ற அந்தக் காட்சி எனக்கு எழுகிறது.

இந்த ஒரு சில வரிகளை நான் எப்படியெல்லாம் அட்டவணை செய்கிறேன்?

பூபாளம் பிள்ளை: பிரசங்கி பக்கம். 1. அவர் சரித்திர ஞானம் பக்கம் 1. பூகோள அறிவு பக்கம் 1. மனித சுபாவத்தின் ஆராய்ச்சி பக்கம் 1. உவமைத்திறமை பக்கம் 1. அலெக்ஸாந்தரை அறிமுகம் செய்வதில் வல்லுநர் பக்கம் 1.



மனைவி:- அவன் இன்ஸ்ஷ்யூர் பண்ணிக்கோங்கோன்னு ஒங்க நல்லத்துக்குத்தானே சொன்னான். ஏன் இப்படி கோவிச்சிண்டிருக்கேள்?

கணவன்:—"அந்தப்பய என் மூளையை இன்ஷ்யூர் பண்ணணும்னு சொன்னான் டீ......!"

இனிமேல் பூபாளத்தை விட்டு மனிதப் பிறவிக்கு வருவோம். **மனிதப் பிறவி:** அந்தஸ்து, பட்டம், பதவி, பணம், உத்தியோகம் சூழ்ந்தது பக்கம். 1

சரித்திரம்: மகா அலெக்ஸாந்தர் பக்கம் 1. கி. மு. 326 பக்கம் 1.

பூகோளம்:—சீலம் நதி பக்கம் 1. ஐவகைக் கண்டம் பக்கம் 1.

பிராணிநூல்:—யானைப் படை பக்கம் 1.

சமூகம்:—மகா அலெக்ஸாந்தரைப் போன்றது பக்கம் 1. தோல்வி மனப்பான்மை பக்கம் 1.

போர்க்களம்:—சீலம் நதிக்கரையில் கி. மு. 326. யானைப் படை பக்கம் 1.

இந்த விதமாக எப்படி எப்படியெல்லாமோ அந்தப் பத்து வரிகளைச் சத கூறிட்டேன். அக்ஷய பாத்திரம் போன்று அகர வரிசைக்குப் புதிய புதிய கோணங்களில் அந்த வரிகள் இடங்கொடுக்கும். இந்தமாதிரி ஒரு சில வரிகளை அகர வரிசைப்படுத்துவதே மகா கஷ்டமாக இருந்தபோது 300 பக்கம் எழுத வேண்டிய புஸ்தகம் அகர வரிசைக்கு எத்தனை பக்கமாக வரும்?

ஆகவே. புஸ்தகத்திற்கே முழுக்குப் போட்டுவிட்டேன். அகர வரிசை தயாரிக்கும் நேரத்தில் ஆயிரம் புஸ்தகங்கள் எழுதலாம்.

மேற்படி அனுபவத்திற்குப் பிறகு, என் புஸ்தகம் எதற்கும் அகர வரிசை சேர்ப்பது கிடையாது. சுண்டு விரல் இல்லாத கை மாதிரி அகர வரிசை இல்லாத புஸ்தகம் என்ற நண்பருக்கு, ஒன்று சொல்லுகிறேன். விரலே இல்லாமல் இருப்பவர்கள் மனோ வலிமையால் காரியங்களைச் சாதித்து விடுவார்கள். அந்தக் கோஷ்டியைச் சேர்ந்தவன் என்று நான் விண்ணப்பம் செய்துகொள்கிறேன்.

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு

சந்தா விவரம்

(சந்தாவை முன்னதாக கட்டவேண்டும்.)

	இந்தியா சிலோன்	வெளிநாடு
1-வருஷம்	13 0	18 0
6-மாதம்	7 0	9 8
3-மாதம்	3 12	5 0

தனிப்பிரதி அணு 4

3-மாதத்திற்கு குறைந்த சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்—"சுதேசமித்திரன்" ஆபீஸ், மவுண்ட் ரோடு, மதராஸ்.

ஞாபகப்படுத்துகிறோம்

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.



"சாமிநாதா!"

பதில் வரவில்லை. திண்ணையில் சாய்வு நாற்காலியில் அமர்ந்திருந்த ராமய்யர், நிமிர்ந்து உட்கார்ந்து. ரேழியுள்ளே பார்த்த வண்ணம் இன்னும் உரக்க அழைத்தார் இரண்டு தடவை.

பதில் வரவில்லை. நாற்காலியில் எழ ஆரம்பித்தார். அப்பொழுது ஐந்து வயதுக் குழந்தை வாசலிலிருந்து உள் நுழைந்தான். தடாரென்று.

"சீனு, உள்ளே பார், சாமிநாதன் இருக்கிறானா என்று. இங்கே வரச்சொல்?"

இதற்குள் சீனு ரேழியுள் புகுந்துவிட்டான்; காமிரா அறைக் கதவைக் கடந்துகொண்டிருந்தான்.

"அதோ, அங்கிருக்கிறானே அத்தான், பேப்பர் படித்துக்கொண்டு, ...அத்தான், அப்பா உன்னைக் கூப்பிடறா!" என்று சொல்லிவிட்டு, தன் கடமையைச் செய்துவிட்டு, உள்ளே மறைந்துவிட்டான் சீனு.

ராமையருக்குத் தூக்கிவாரிப் போட்டது. பத்திரிகையைப் பிரித்துப் பிடித்தவாறு தூங்குகிறானா என்ன மருமகன்? பார்க்க எழுந்தார்; உள்ளே சென்றார். பத்திரிகையின் சலசலப்பொலி கேட்டது.

"சாமிநாதா!"

இதற்கும் பதிலில்லை. காமிரா அறைக்குள்ளே நோக்கினார்.

"என்னடா இது? உன்னைக் கூப்பிட்டுக் கூப்பிட்டு எனக்குத் தொண்டை கட்டிவிட்டது. பதிலே பேசவில்லை நீ!" என்றார்.

"என்னையா? என் பெயர் சாமிநாதனில்லையே! 'சீனு' மாமா" என்று சொல்லிக்கொண்டே, கட்டிலில் காலை நீட்டிக்கொண்டு சாய்ந்து படுத்திருந்தவன், காலை மடக்கிக்கொண்டு நிமிர்ந்தான்.

ஒரு நொடி பிரமிப்பை வெளியிடும் ஒரு பார்வை பார்த்துவிட்டு, 'அப்படியானால், தபாலில் வந்த இந்தக் கடிதம் உனக்கு அல்லவா? யாரோ நடராஜனும், போத்தனூரிலிருந்து போட்டிருக்கிறான்!' என்று கையிலிருந்த உறையை நீட்டினார்.

"நடராஜனா? எங்கே! எனக்குத்தான் கடிதம்!"

"விலாசத்தில் சாமிநாதன் என்றே காண்கிறது! உனது எப்படியாகும்?"

"நான்தான் சாமிநாதன்! என் நண்பன்தான் இந்த நடராஜன், போதனூரில் வேலையாயிருக்கிறான்!"

"சரி, இந்தா, சாமிநாதா!" என்றவண்ணம் கடைசியில் குறும்புச் சிரிப்புடன், அவனிடம் உறையைக்கொடுத்தார் ராமையர்.

"முற்பகல்தான் ரயிலை விட்டு இறங்கினாய், பிற்பகலே கடிதம் வந்துவிட்டது உன் பெயருக்கு! நீ இருப்பது வடக்கே, அவன் இருப்பது தெற்குக்கோடி! அவன் உத்தியோகம் பார்ப்பவன், நீ கல்லூரி மாணவன்! இப்படித்தான் இருக்கணும் நண்பர்கள்!" என்று வாழ்த்துவதுபோல கூறிவிட்டு வெளிவந்தார் ராமையர். அவர் கையிலும் மூன்று கடிதங்கள் இருந்தன, அவற்றைப் படிக்க வேண்டாமா?

திண்ணைக்கு வந்துகொண்டே "சீனு!" என்றார்!

"ஏன்?", "ஏன்?"

இரண்டு குரல்களில் பதில் வந்தது. மென் குரலில் வந்த பதிலுக்கு மென் குரலிலேயே, "உன்னையல்லப்பா, சாமிநாதா!" என்று கூறிவிட்டு, உரக்க வந்த பதிலுக்கு, உரக்கவே, 'மூக்கண்ணாடியைக் கொண்டாப்பா!" என்று மகனை ஏவினார் ராமையர்.

தந்தை ஈஸிச்சேரில் அமரும் முன்பே 'டாண்' என்று கொணர்ந்து கண்ணாடிப் பெட்டியை நீட்டினான் சீனு. "பேஷ்!" என்று அவர் அதை வாங்கிக்கொண்டு, 'எங்கே ஓட்டம் வெளியே?" என வினவினார்.

"கொத்தமல்லிவிதை கடையிலிருந்து வாங்கி வரச் சொன்னாள் அம்மா! என்று கத்திக்கொண்டே வாசலில் மறைந்துவிட்டான் சீனு.

"குழந்தையைக் கடவுள்தான் காக்கணும்! ஐந்தே வயது. வீட்டிற்கு எத்தனை ஒத்தாசை இவனால்! இவனால் அல்லவோ குடும்பம் நடக்கிறது?" என்று உதித்த எண்ணத்தால், கண்களில் நீர் அரும்பியதோ, அல்லது மூக்கண்ணாடி போட்டுக்கொள்ளுமுன் கண்ணீரைத் துடைக்கும் பழக்கமோ, கண்ணைத்துடைத்துக் கொண்டார் ராமையர்.

இவர் இங்கேயும், சாமிநாதன் உள்ளேயும் தமக்கு வந்த கடிதங்களின் ரகசியங்களை நுகர்கையிலே, நாமும் சில ரகசியங்களைக் கேட்போம்.

சாமிநாதன் பெயர் சாமிநாதன்-தான். அவனுடைய தந்தையைப் பெற்ற தாத்தாவின் பெயர் அது. முறைப்படி, உலக வழக்கப்படி, அவனுக்கு நாமகரணம் செய்யப்பட்ட பெயர். ஆனால் மற்றொரு வழக்கப்படி அவனுக்கு ஒரு செல்லப்பெயரும் உண்டு. செல்லப் பெயர்களை வைத்து அழைக்கவேண்டியது அவசியம் தான். ராஜகோபாலன், வெங்கட சுப்பிரமணியன் என்றெல்லாம் நீண்டு முழங்கும் பெயர்களை, அழகாகக் குறுக்கி, அழைக்கவேண்டியதுதான். கடவுளுக்கும் மூதாதையர்க்கும் பயந்து இதுபோன்ற பெரிய பெயர்களை மக்களுக்கு இட்டாலும், கடவுள் பக்திக்கும், பிதிர்பக்திக்கும் சிறிதும் ஒவ்வாத



வாறு அந்தக் குழந்தைகளைத் தலையில் குட்டவும், வைது கரிக்கவும் பெரியோர்க்குக் கடமையாக நேருகிறபோது "ராஜா, நாணு, சுப்பு" என்ற செல்லப்பெயர்கள் எவ்வளவு சரளமாய் உதவுகின்றன! ஆனால் சாமிநாதனுக்கு வாய்த்த செல்லப் பெயரோ, அந்தப் பெயருக்குச் சிறிதும் இலக்கணச் சம்பந்தமற்ற ஒரு பெயர்—'சீனு' என்பது! சாமிநாதனுடைய பாட்டனார் பெயரை, அவருடைய நாட்டுப்பெண்ணாகிய சாமிநாதனின் அன்னை அழைப்பது பாந்தமில்லை என்று, அவளது தாய் பொறுக்கி வைத்த பெயர் அது! தாயைப்பெற்ற பாட்டி வைத்த பெயரே சாமிநாதனுக்கு ஒட்டிக் கொண்டது. எல்லோரும் செல்லமாய் சீனு என்றே அவனை அழைத்துவந்தார்கள். ஆனால் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கும்பொழுதோ, 'சாமிநாதன்' என்றே அவன் பெயரைத் தந்தைப் பதிவு செய்தார்!

அந்தச்சிறுவயதிலே—வீட்டில் ஒரு பெயரும் பள்ளியில் ஒரு பெயருமாகக் குழந்தை என்ன திண்டாடிற்றோ, அந்த இரட்டை வாழ்வை எப்படிச் சமாளித்ததோ, இப்பொழுது ஒருவர்க்கும் ஞாபகமில்லை. ஆனால், இருபது வயது நிரம்பும் இந்த வயதில், காசிச் சர்வகலாசாலையிலே M. Sc படிக்கும் இக்காலத்தில், 'சாமிநாதன்' என்னும் பெயர் அவனுக்கு நாராசமாகத் தோன்றுகிறது. 'சீனு' என்று ராமையர் தமது மைந்தனை அழைக்கும்போது எத்தனைய அன்பும் இனிமையும் சொட்டுகிறது! அதுபோலவே தனது பெற்றோர்கள் தன்னை அழைக்கும் பொழுதுதொனிக்கும் விசுவாசமும், அன்பும், சாமிநாதன் என்று கல்லூரி நண்பர்கள் கூவும்போது தொனிக்கிறதா? 'சாமிநாதன்' என்று தன்னை அழைக்கும் எவரையும் அவன் 'நண்பன்' என்று மரியாதைக்குக் கூட ஒப்புக்கொள்ள மாட்டான்.

அவனுடைய நட்புக்கு உருமையானோர், அவனது குறு நறும் பெயரை அறிந்து 'சீனு' என்று அழைத்து வந்தார்கள். போத்தனூர் நண்பன் உறையின் விலாசத்திலே 'சுவாமிநாதன்' என்று குறித்தாலும், உள்ளே கடிதம், "எனது ஆருயிர் சீனு!" என்றே துவங்கியது! கல்லூரியின் கணக்கு ஆசிரியர் ஒரு நாள் அவனை 'சீனு' என்று தெருவில் அழைத்தபோது,—இடம் நடுத்தெருவாய் இல்லாமலிருந்தால்—அவரைத் தழுவி அணைந்திருப்பான்! 'சீனு' என்று தன்னை அழையாத—அழைக்கத் தைரியமில்லாத வாத்தியார்களையும் அவன் ஒரு படி தாழ்வாகவேதான் மதித்தான். எனினும் குரு பக்தி குறையவில்லை. பி. எஸ் ஸி. பரீக்ஷையில் முதல் வகுப்பில் தேறி, இப்பொழுது காசியில் எம். எஸ் ஸி. படிக்கும் அளவுக்கு அவன் தன் ஆசிரியர்களைப் போற்றியிருக்கிறான். எம். எஸ் ஸி. தேறிவிட்டதும் ரூபாய் பத்தோ பதினைந்தோ அதிகாரிகளிடம் தொலைத்து, 'சாமிநாதன்' என்று பதித்த பெயரைச் 'சீனு' என்று மாற்றிவிட வேண்டும் என உறுதி கொண்

டிருந்தான். இன்னும்—ஆடம்பரமான—சீனிவாசன் என்றுகூட அல்ல—தேன் சொட்டும் சின்னஞ் சிறு 'சீனு' என்ற பெயரையே தீரமாய் அணிந்துகொள்ளவே அவனது ஆசை. "ஸ்ரீமான் சீனு சேலத்திற்கு எலக்ட்ரிகல் எஞ்சினியராக மாற்றப்பட்டார்!" என்று சென்னை கெஜட்டில் என்றோ ஒரு நாள் தன் பெயர் வரப் போவதாக கனவு கண்டுகொண்டிருந்தான் தற்கால சாமிநாதன்.

இந்த நிலையில் இவனது மாமாவே, இவனை வீட்டிலேசாமிநாதன் என்று கூப்பிட்டால் இவன் மனம் கொதிக்காதா?

காலையில் பத்தேகால் மணிக்கு அவன் ஸ்டேஷனிலே வந்து இறங்கியபொழுது "வாப்பா சீனு!" என்று அன்பாக அழைத்து வரவேற்றார். "வழிநெடுக நன்றாகத் தூங்கிண்டு சௌகரியமாய் வந்தயா?" என்றார். இவனை 'சீனு! சீனு!' என்றுதான் குறிப்பிட்டு வந்தார் அப்பொழுதெல்லாம்! இப்பொழுது அவருடைய பேச்சிலே மாறுதல் ஏற்பட்டது அவனுக்குப் பிடிக்கவில்லை!

ஆனால் ராமையர் பாவம் என்ன செய்வார்? அவருக்கு அந்த மாறுதல் அவசியம் என்று தோன்றியதே!

சாமிநாதன் வீட்டிற்கு வந்து சேர்ந்த சிறிதுநேரத்திற்கெல்லாம், ஒரு தர்ம சங்கடம் ஏற்பட்டுவிட்டது அவருக்கு. "சீனு, அசடே, அப்படித்தான் தூக்குவதா தெர்மாப்புட்டியை? வைடா கீழே, பயலே!" என்று ராமையர் கோபிப்பதைக் கேட்டதும், மருமகன் சீனு

திடுக்கிட்டுத் திரும்பிப்பார்த்தான்—மாமா யாரைக் கோபிக்கிறார் என்று புரிந்துகொண்டு புன்னகை பூத்துவிட்டுச் சென்றான். ஆனால் ராமையருக்கு கதிகலங்கிவிட்டது. தாவிப்போய் மகனிடமிருந்து தர்மாப்புட்டியைவாங்கிக்கொண்டு மருமகனைப் பார்த்து, "இந்தச் சின்னச்சீனுவைத்தாம்பா சொன்னேன்!" என்றார். அப்புறம் யோசனைகள் பல எழுந்தன ராமையருக்கு. "சின்ன சீனு" "பெரிய சீனு" என்று அடைமொழிகொடுத்து அழைப்பதா இருவரையும்? தன் மகனைகோபிப்பதும் அதட்டுவதும் இருபது தடவைக்குக்குறையாது ஒரு நாளைக்கு.—அப்படியிருக்க, மருமகன் அவற்றைத் தனக்கிட்ட வசைகளாக எண்ணிவிட்டால்?..........அவன் அப்படி எண்ணவிட்டாலும், அப்படி அழைப்பது தமக்கே அழகல்லவே.

ஒரேவழிதான் உண்டு தர்ம சங்கடம் நீங்க. இருவருள் ஒருவர் பெயர் மாறவேண்டும்! தம் குழந்தை சீனுவை முழுத் திருப்பெயர் சீனிவாசன் என்றே அழைக்கலாம், ஆனால் அதனால் குழந்தைக்குத் தடுமாற்றமேற்படும்! வீட்டிலே ஏவல் காரியங்களுக்கெல்லாம் தயாராக ஓடிவரும் அவன், "சீனு!" என்ற அழைப்புக்குப் பழக்கப்பட்டுப் போனவன். அவனுக்கு, சீனிவாசன் என்ற அழைப்புப் பெயர் குழப்பம் கொடுக்கும்.........அதனால் 'காசிச்சீனு'வின் பெயரை மாற்றவேண்டும்!......ஆனால் என்னவென்று மாற்றுவது? ...எப்படி அழைப்பது?

நல்லவேளை, அந்த சமயத்தில், "மாமா! எனக்கு இங்கே கடிதம் ஏதாவது வந்ததா? இங்கிருப்பேன், இந்த விலாசத்துக்கு எழுதலாம் என்று நண்பர்கள் சிலருக்குத் தெரிவித்திருந்தேன்!" என்றான் மருமகன்.

'வரவில்லையப்பா!' என்று சொல்லிவிட்டு வாசலுக்கு வந்தார் ராமய்யர்.

'சுவாமிநாதன்', என்று பெயரிட்டு எனக்குக் கடிதங்கள் அங்கே வரலாம். வைத்திருங்கள் பத்திரமாய்! வந்து பெற்றுக் கொள்கிறேன்!' என்று அவன் விடுத்த கடிதம் இரண்டுநாள் முன் வந்ததும் நினைவு வந்தது ராமையருக்கு!

அடாடா! அவனுடைய நாமகரணப் பெயர்...பள்ளியில் வழங்கும் பெயர்...'சாமிநாதன்' இருக்கிறதே!' என்று சொல்லிக்கொண்டார் அடுத்தகணம்.

'இனி அப்படியே நாமும் அழைப்பதுதான் சரி.' என்று நிச்சயம் செய்துகொண்டுவிட்டார் அதற்கடுத்த விநாடி.

ரேடியோ நாடகங்களிலும்... ஏன்—அச்சு நாடகங்களிலும், நாவல்களிலும், சம்பாஷணைகளிலே கேட்போருக்கும் படிப்போர்க்கும் தெளிவாக இருப்பதற்காக, 'பாத்திரங்'களின் பெயர்களை மிகுதியாகவே எதிரெதிர் பரிமாறிக்கொள்ள வைப்பார்களே, அதுபோல ராமையரும் ஆரம்பித்தார். சாமிநாதனின் பெயரைத் தவறியும் 'சீனு' என்று கூறாமலிருக்க, அவர் வாய்க்குவாய் அவனை 'சாமிநாதா! சாமிநாதா!' என்று அழைக்கலானார். அவசியம் இல்லாதபொழுது, 'சாமிநாதா! வா, சாப்பிட!, சாமிநாதனுக்கு பலகை போடு!' என்றெல்லாம் அடிக்கொருதரம் மொழியலானார், ஒவ்வொருதரமும்—அவர் அப்படி

அடிக்கொருதரம் மொழியும் போதும்—தன் செவிணியிலே அடிப்பது போன்றே இருந்தது அவனுக்கு!

தான் பிறந்தது இங்கேதான்! தனக்கு 'சீனு' என்ற செல்லப் பெயரைத் தந்தது, அம்மாவைப் பெற்ற—அதாவது—இந்த மாமாவைப் பெற்ற—பாட்டி! இவரும் 'சீனு' என்றே இத்தனை நாளும் கூப்பிட்டுவிட்டு, யாரோ அசலார் போல 'சாமிநாதன்!' என்று இப்போது அழைக்கிறாரே என்று தோன்றியது அவனுக்கு. உள்ளூற ஆத்திரப்பட்டுக்கொண்டு இருந்தான் அவன்.

ஆரம்பத்திலே குறிப்பிட்டோமே...'சாமிநாதா!" என்ற அழைப்புக்கு அவன் "ஊம்!" கொட்டாமல் வாய்மூடி இருந்தானே!...அதுவும் அந்தக் கோபத்தின் பலன்தான்!

"சான் சீனுதான், சாமிநாதன் அல்ல!" என்று நாட்டிக்கொண்டிருந்த மறுநொடியே.... "சாமிநாதன் நான்தான்! கடிதம் எனக்குத்தான்!" என்று அவன் ஒப்புக்கொள்ள நேர்ந்தது — மாபாவிடம்!...எத்தனை அவமானம்?

கடிதத்தைக் கொடுத்துப்போன ராமையர், வாசலில் தமக்கு வந்த கடிதங்களைப் படித்துக் கொண்டிருந்தார். இங்கே உள்ளே சாமிநாதன், அருமை நண்பனின் மேல் கோபங்கொள்ளாமல் அவன் கடிதம் செய்துவிட்ட சதியை எண்ணிக் கலங்காமல் சாவதானமாகப் படித்து முடித்தான் தனக்கு வந்த கடிதத்தை.

ஒரு யோசனை எழுந்தது அவன் மனதிலே: 'ஆம்! அப்படித்தான் செய்யணும்! இங்கிருந்துதொலைந்துபோய் விடணும்!" என்று முடிவு கட்டிக்கொண்டிருந்தான்.

"என்ன, சாமிநாதா? கடிதத்திலே என்ன விசேஷம்?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் ராமையர்.

"விசேஷம் இருக்கு மாமா. வேலை ஒன்று காலியாம்! உடனே நான் புறப்பட்டுப்போய் ரெயில்வே எஞ்சினியரைப் பேட்டி கண்டால் அனுகூலம் என்கிறான். நான் இன்று சாயங்காலம் வண்டிக்கே

கிளம்பவேண்டும். இப்பொழுது மூன்றுமணிதானே ஆகிறது?'' என்று பதில் சொல்லிக்கொண்டே இடது மணிக்கட்டை உயர்த்தி கைக்கடியாரத்தைப் பார்த்தான் அவன். அப்படிப் பார்க்கையிலே, ஒருகணம், எதிரே சுவரில் தொங்கிய புகைப்படம் ஒன்றின்மீது அவன் கண்கள் பதிந்ததை ராமையர் கவனித்தாரோ இல்லையோ!

''வேலை ஏற்பதாயிருந்தால், இந்தக் காசிப்படிப்பு என்ன ஆகும்? அரைகுறையாக நிற்பதா? நீ போகக்கூடாது இன்றைக்கு. வேலை கிடைக்காவிட்டால், இப்போது, ஒரு நஷ்டமுமில்லை!'' என்றார் ராமையர் சிறிது பதற்றமாய்.

'என்ன மாமா இது. நான் இங்கே நான்கைந்துநாள் தங்கிறதாகச் சொல்லியிருந்ததற்காக, இப்போது ஒரு நல்ல வேலையை விட்டுவிடுவதா? எப்படியும்போக வேண்டியவன், இன்றே போகிறேனே!...நான் போகத்தான் வேண்டும், மாமா!'' என்று கூறிக்கொண்டே எழுந்து, தனது ஹோல்டால் மூட்டையருகே குனிந்தான் சாமிநாதன்.

''இதென்ன அக்கிரமம்! ஒன்றரை வருஷம் படித்துவிட்டு, பணம் ஆயிரம்வரை செலவிட்ட பின்பு நடுவிலே கையை உதறுவதுதானா விவேகம்? உன் அப்பா, அம்மா ஒப்பமாட்டார்கள். பள்ளிக்கூடம் போயிருக்கிற குழந்தைகள் வருமுன்பே, நீ ரயிலடிக்குப்போக வேண்டியிருக்கும். அவர்களைப் பார்க்கணும் என்ற ஆவல் உனக்குச் சிறிது இல்லை என்று தெரிகிறது.........பாவம் அவர்கள் தான் நாலுநாளாய் ''அத்தான் வராபோகிறான்!'' என்று குதியாய்க் குதித்துக்கொண்டிருந்தார்கள். பத்தரை மணிக்கு வந்துவிட்டு, மூன்றரை மணிக்குப் போகணும் என்று சொல்கிறாய் பாரு!...என்னமோ உன் இஷ்டம்போல செய் ...மூட்டைகட்டு!', என்று மனத்தாங்கல் தொனிக்கப் பேசிவிட்டு அங்கிருந்து நகர்ந்தார் ராமையர்.

''அவசரமில்லை மாமா! அவர்கள் வந்த பின், கொஞ்சம் சந்தோஷமாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டுப்போனாலும், வண்டி கிடைக்கும் தப்பிவிடாது! இப்போ சம்மதம் தானே!...வலுவிலே கிடைக்கிற வேலையைத் தள்ளிவிட எனக்கு மனசில்லை மாமா!'' என்றான் அவன் மீண்டும்.

''எம். எஸ் ஸி. தேறினால் பெரிய வேலை கிடைக்குமே!... காசியிலே படிக்க உனக்கு இடம் கிடைக்க எவ்வளவு பாடுபட்டது! நினைவிருக்கா?'' என்று தாக்கினார் ராமையர்.

கொஞ்சம் அவன் திடுக்கிட்டாலும், விட்டுக்கொடாமல் ''ஆமாம் நிஜம்தான்!...ஆனால் என்ன படிப்பு அங்கே ரொம்ப பிரமாதப் படுத்தறது! நினைத்ததெற்கெல்லாம், மாணவர்கள் ''ஸ்ட்ரைக்'' பாடங்களே சரியாக நடப்பதில்லை!...இந்த வருஷம் நான் ஒன்றுமே புதிதாகக் கற்கவில்லை''

'பெரிய கலாசாலையைப் பழிக்காதேப்பா! ஒன்றும் கற்காவிட்டாலும் அங்கே 'ஜே ஹிந்த்' முழங்கும் கோஷ்டியுடன் நீ சேர்வதே உனக்குச் சிறப்பு. உனக்கு சுதந்திர இந்தியாவிலே நன்மை கிட்டும்! என்னமோ எனக்குத் தெரிந்ததைச் சொன்னேன், அப்புறம் உன்னிஷ்டம்!'' என்று ராமையர் சொல்கையிலே, மகன் சீனு 'தட தட'வென்று உள்ளே பாயும் ஓசை கேட்டது.

''இந்தா சீனு! நான்கு அணா! எட்டு கார்டுகள் வாங்கி வா!'' என்றார்.

''போஸ்டாபீஸ், இருக்குமிடம் எனக்குத் தெரியாதே மாமா!'' என்றான் மருமகன்.

''உன்னைச் சொல்லவில்லையப்பா! எங்கள் சீனுவை...அட, சட் குழந்தை சீனுவைச் சொன்னேன்!'' என்று கூறிச் சிரித்தார் ராமையர்.

''இவனையா தனியாக போஸ்டாபீஸுக்கு அனுப்புவது?'' என்றான் மருமகன்.

''கூப்பிடு தூரத்திலேதான் இருக்கிறது....போய் வருவான். இந்தா சீனு! போய் வாங்கி வா!'' என்று பிள்ளையிடம் காசைக் கொடுத்து அனுப்பிவிட்டு, ராமையர் 'பார்த்தாயா...தவறிப் போய் அவனை' எங்கள் சீனு!'' என்று குறிப்பிட்டுவிட்டேன்! நீமட்டும் அயலானா? எல்லாம் இந்தப்பெயர் குழப்பம்தான் இல்லை. பெயர்ப் பொருத்தம்தான் காரணம்! இல்லையா?'' என்று சொல்லிச் சிரித்தார் ராமையர்.

வாசலில் ஒரு ஜட்கா நிற்கும் சலங்கை ஒலி கேட்டது.

''அதோ பத்மா வந்துவிட்டாள் போலிருக்கே! நாலு மணியாகவில்லை. ஆனால் சீக்கிரம் வந்துவிட்டாள்போலிருக்கு இன்றைக்கு!'' என்றவண்ணம் ஜன்னல் வழியாக நோக்கினான் சாமிநாதன்.

''என்ன, சாமிநாதா!... என்ன சொல்கிறாய்? இந்த ஜட்காகாரனையே வரச்சொல்லட்டுமா, உன்னைஸ்டேஷனுக்கு அழைத்துப்போக! வண்டியிலே இன்னும் இரண்டு பெண்கள் இருப்பார்கள்! அவர்களை இறக்கிவிட்டு வரச்சொல்லட்டுமா?......உன் பயணம் நிச்சயம் தானா?'' என்று வினவினார் ராமையர்.

பதில் வரவில்லை அவனிடமிருந்து. ஒருமாதிரி திடுக்கிட்டு நின்றான். அவருடைய வார்த்தைகள் அவனுடைய செவியில் விழுந்தனவோ, இல்லையோ...பத்மாவுக்கு எட்டிவிட்டன அவை.

''யார் பயணம்! அத்தானா?... இன்றைக்கேயா...'' என்று கேட்டுக்கொண்டே, வாசற்படியருகு வந்து நின்றாள் பத்மா.

''உன் பதில் கிடைக்குமுன் வண்டி போய்விட்டதேப்பா!' என்றார் ராமையர்— வருத்தமும் காட்டவில்லை அவர் முகம், மகிழ்ச்சியும் காட்டவில்லை.

''உங்கள் ஊரிலே வேறு ஜட்காவே கிடையாதோ?'' என்று சொல்லிச் சிரித்தான் சாமிநாதன். பத்மாவைப் பார்த்துக்கொண்டே வாசற்படிக்கு ஒதுக்காகி, கால் செருப்பை உதறிக்கொண்டே, ''என்னப்பா, அத்தான்தானா இன்றைக்குப் போகணும் என்கிறான்?'' என்று அப்பாவைப்பார்த்துக் கேட்டுவிட்டு, உள்ளே வந்துவிட்டாள் பத்மா. அருகிருந்த மேஜைமேல் புத்தகங்களை வைத்துக்கொண்டே, ''என்ன மாமாவுக்கும் மருமானுக்கும் சண்டையோ?'' என்று கூறி குறும்பாகச் சிரித்தாள் பத்மா.

சாமிநாதனும் மெல்லச் சிரித்தான்.

''இல்லாவிட்டால் மத்தியானம் டிபன் சரியில்லையோ!......என்ன அத்தான்...சொல்லு..நான் அம்மாவிடம் சொல்லி, உனக்குப்பிடித்ததைப் பண்ணச்சொல்கிறேன்!'' என்றாள் பத்மா.

''உளறாதே பத்மா!...சாமிநாதனுக்கு ஏதோ உத்தியோகம் கிடைக்கிறதாம்...'' என்று இழுத்தார் ராமையர்.

''யார் அது சாமிநாதன்!...... எங்கே வேலை...''

''இவன்தான் சாமிநாதன்...''

''இவன்பேர் சீனு இல்லையோ... என்னப்பா இது...''

''ஆனால் இங்கே இருக்கிறானே உன் தம்பி...ஒரு குட்டிச் சீனு!... எப்படி அழைக்கிறது இருவரையும் ஒரே பெயரில்! சங்கடமாய்ப் போய்விட்டது எனக்கு!...''என்று தன் தவிப்பைக் காட்டினார் முகத்திலே ராமையர்.

''ஓகோ...'' என்று சிரித்துவிட்டு பத்மா...'' நம்ம சீனு பெயரை மாற்றி...'' என்றாள்.

''யார் நம்ம சீனு! உன் தம்பியா உன் அத்தானா?...அத்தானை அவமதிக்கிறாயே பத்மா!...அவன் ஏன் மூட்டை கட்டமாட்டான் இப்போதே?'' என்று கோபிப்பது போலக் குறுக்கிட்டார் ராமையர்.

''அடடா!...ஆமாம்!...ஆமாம் அத்தான், தப்புத்தான்!.....சரியப்பா! அத்தான் பெயரை மாற்ற வேண்டியதுதான்!...ஆனால் ஏனப்பா 'சாமிநாதன்' என்று மாற்றணும்.,உனக்கென்ன அந்தப் பெயரில் அவ்வளவு மோகம்!...'' என்று கேட்டாள் பத்மா.

''அவனையே கேள்'' என்று சொல்லிக்கொண்டே கட்டிலின் மீது கிடந்த—அன்று வந்த கடித உறையை அவளிடம் நீட்டினார் ராமையர்.

'அத்தான், உனக்கு வந்த கடிதமா இது?'' என்று அவன் பக்கமாக தன் கையிலிருந்த உறையை நீட்டிக் கேட்டாள் பத்மா.

''ஆமாம்!'' என்றான் அவன். அவள் கையிலிருந்த கடிதத்தை வாங்கிக்கொள்ள முயற்சி செய்யவில்லை அவன்.

''சாமிநாதன் என்று தானே போட்டிருக்கு விலாசத்திலே!'' என்று கிண்டினாள் மேலும் பத்மா.

''நான் அப்படிக் கூப்பிடுவது அவனுக்குப் பிடிக்கவில்லையோ என்னமோ, அதான் மூட்டை கட்டுகிறேன் என்கிறான்!'' என்றார் திடுக்கென்று ராமையர்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை மாமா...நான்...'' என்று இழுத்தான் சுவாமிநாதன்.

''என் பெயர் சீனுவோ, சாமிநாதனோ, எதுவாயிருந்தால் என்ன? இங்கேயார் உன்னை பெயர்சொல்லி அழைக்கப்போகிறார்கள்?...நாங்கள் எல்லோரும் ''அத்தான்!'' என்றுதான் அழைக்கப் போகிறோம்....'' இதிலே வருத்தம் என்ன அத்தான்?'' என்று கொஞ்சுவது போல் பேசினாள பத்மா.

அவளுடைய ஜோதி முகத்தைப் பார்த்தவாறே இருந்தான் சாமிநாதன். ஒரு கனைப்புக் கனைத்தார் ராமையர்.

''என்ன சொன்னாய் பத்மா? எனக்குக்கூட அத்தானா அவன்? உன் அம்மாவுக்கும் அத்தானா? நாங்கள் இவனை என்னவென்று அழைப்பது? மருமகனே, மருமானே என்று உறவு முறை சொல்லிக்கொண்டு கூப்பிடுவதா?...நான் கூப்பிடுவதில்தானே குழப்பமே வந்தது....பேர் மாற்றிக் கூப்பிட ஆரம்பித்தேன்!....'' என்றார் ராமையர்.

''நானும் அதைப் பொறுக்க முடியாமல் துள்ளி ஓடி விடுவேன், மான்போல, காட்டுக்கு!'' என்று சிரித்தான் சாமிநாதன்.

''காசிப்படிப்பு இனிமேல் வேண்டாமாம்....உத்தியோகம் பார்க்கப் போகிறானாம்.....அதற்காகத்தான் இன்றே ஊருக்குப் போகணுமாம்...உன் அத்தான் சொல்கிறான்!'' என்றார் ராமையர்.

''அப்படியா அத்தான்?'' என்றாள் பத்மா ஆச்சர்யமாக.

''ஆமாம்...போகணும்...''என்று ஒருமாதிரியாகச் சொன்னான் பதில்.

''காசிக்குப்போய் வருபவர்கள் எதையேனும் விட்டுவிட்டு வருவார்கள்....நீ படிப்பையே விட்டுவிடுகிறாய் போலிருக்கு!'' என்று கேலி செய்தாள் பத்மா.

''ஆம்...அப்படித்தான் நேரும் போலிருக்கு! படிப்பதெல்லாம் எதற்கு? கடைசியில் ஒரு உத்தியோகத்தில் அமர்வதற்குத்தானே! உத்தியோகம் இப்போதே கிடைக்கிறது...அதனால்...''. தடுமாறினான் சாமிநாதன்.

''என்ன உத்தியோகம்?'' என்று வினவினார் ராமையர்.

''அதெல்லாம் அப்புறம் உங்களுக்குத் தெரியும்...'' என்று பதில் வந்தது அதே வீம்புடன்.

''இதிலே எழுதியிருக்கல்லவா?...'' என்று சொல்லித் துள்ளிக்கொண்டே அங்கிருந்து விரைந்து சென்றாள் பத்மா, கையில் கடிதத்துடன்.

''இதென்ன அக்கிரமம். பத்மா ...எனக்கு வந்த கடிதத்தை நீ எடுத்துக்கொண்டு ஓடுகிறாயே!'' என்று சாமிநாதன் கூச்சலிட்டானே தவிர, அவளிடமிருந்து கடிதத்தைப் பிடுங்க முயலவில்லை.

''பார் அவள் தைரியத்தை! கூசாமல் படிக்கிறாளே தனக்கு வந்ததுபோல!'' என்று விஷமமாய்ச் சிரித்தார்.

அதைக் கவனித்துவிட்டு...கவனிக்காததுபோல... ''படிக்கட்டும். அவளும் நான் சொன்னது சரிதான் என்பாள்!'' என்று சாமிநாதன் கூறிவிட்டு, விரித்த ஹோல்டால் கித்தானைச் சுருட்டினான்.

இப்போது சாமிநாதனுக்கு ஒரு தர்ம சங்கடமான நிலைமை. ஊருக்குப் போவதாக வீம்பு பேசிவிட்டான். ஆனால் அவன் மனசு ''ஏன் சொன்னோம்!'' என்று அங்கலாய்த்துக்கொண்டிருந்தது.

மத்தியானம் சாப்பிட்டுவிட்டுக் காமிரா அறைக்குள் நுழைந்த போது, அவன் அங்கே சுவரில் மாட்டியிருந்த 'பத்மா'வின் புகைப் படத்தைப் பார்த்தபோது "அவள் எப்போது பள்ளியிலிருந்து வருவாள்? எப்போது நேரில் இந்த அழகிய உருவத்தைப் பார்ப்போம்?" என்று எண்ணினான். அப்புறம் வெகு நேரம் அவளைப் பற்றி எண்ணமிட்டான்.

உலகத்திலே யாருமே பதினாலு வயதில் எஸ். எஸ். எல். ஸி. படிக்காததுபோல, பத்மா பதினாலு வயதில் அந்த வகுப்பில் படிப்பதைப்பற்றி வியந்தான். அவளைப் பார்த்து ஆறு வருஷங்களாவதால், தன்னைக் கண்டதும் அவள் பேசவும் கூசுவாள் என்று நினைத்தான். அவள் தன் தம்பியைச் 'சீனு சீனு' என்று அழைக்கும்பொழுதெல்லாம் தனக்கு எப்படியிருக்கும்...என்ன இனிமையாய், இன்பமாய் இருக்கும் என்று கற்பனை செய்து அனுபவித்தான். அவள் தம்பியைக் கூப்பிட்டால், வேடிக்கையாக, தான் போய் எதிரே நின்று, "என்ன வேணும்....கைகட்டி நிற்கிறேன்!" என்றுகூட தமாஷ் பண்ணலாம் என்று யோசனை செய்திருந்தான்.

ஆனால் பத்மா வந்தபின் ஒரு சந்தோஷ ஏமாற்றம்...ஒரு வருத்த ஏமாற்றம் அவனுக்கு.

அவளே தன் பெயர் மாறுவதை ஒப்பிவிட்டதால்...தான் கற்பனை செய்திருந்த தமாஷ்களும்...இன்பமும்...போய்விட்டனவே என்ற வருத்தம்...ஆனால் அவள் கூச்சமில்லாமல் தன்னுடன் நேருக்கு நேர் பேசவும், வாதாடவும் முன் வந்ததைப்பற்றி சந்தோஷம் அவனுக்கு. ஏதோ அசட்டுக் கோபத்தில் ஊருக்குப் போவதாகச் சொல்லிவிட்டதற்கு வருத்தம் எழுந்தது அவனுக்கு...ஆனால் எப்படி திடீரென்று மறுபடி மாற்றுவது?

அர்த்தமில்லாமல் ஹோல்டாலைச் சுருட்டினான்.

'இந்தாப்பா, கார்டுகள்!' என்ற குரல் வந்தது. சீட்டுப் பிரித்துப் பிடிப்பதுபோல எட்டு கார்டுகளை பிடித்துக்கொண்டு, சீனு உள்ளே நுழைந்தான். ராமையர் அவற்றை வாங்கிக்கொண்டார்.

'சாமிநாதா! நீ பத்திரமாய் இங்கு வந்து சேர்ந்ததைப்பற்றி உன் அப்பாவுக்கு எழுதணும் என்று இருக்கிறேன். இன்றே நீ போர்த்தனூருக்குப் புறப்பட்டுப் போவதாக எழுதட்டுமா?...இன்னும் ஏதாவது செய்தி உண்டா, சொல்!' என்று உசாவினார் ராமையர்.

"இப்போதே என்ன அதற்கு அவசரம்!" என்று குழறினான் சாமிநாதன், மழுப்பிவிடும் நோக்கத்துடன்.

"தபால் கட்டு எடுக்கும் வேளை வந்துவிட்டதப்பா!" என்று ராமையர் சொல்லுகையிலேயே பத்மா திரும்பினாள் அறையுள்.

"என்ன எழுதியிருக்கு சொல்லட்டுமா அத்தான்!" என்று மிரட்டுவதுபோல கேட்டாள் பத்மா.

"சொல்லேன்!" என்று கூறிக்கொண்டே, தலையை அசைத்து, கண்ணையும் சிமிட்டினான் அவன். ராமையர் அதைக் கவனித்தாரோ என்னமோ...

ஒரே பதட்டமும் மிரட்டலுமாகத் தோன்றிய பத்மா, சிறிது தயங்கினாள்.

"சரி, சொல்லு! என்ன உத்தியோகம் அது?" என்று விடாப்பிடியாகத் தொடர்ந்தார் ராமையர்.

மென்று விழுங்கிக்கொண்டே சரியாகத் தெரியலைப்பா எனக்கு ரொம்ப மட்டமான உத்தியோகம் தான்...என் அத்தான்......அந்த நிலக்கரிச் சாம்பலிலா நீ வேலை செய்வது....அழகுதான்....ஸ்வாமியும் நாதனுமான சாமிநாதனுக்குச் சரியான வேலை இது அல்லப்பா... என்ன அத்தான்?......" என்று மாறி மாறி இருவரையும் பார்த்துக்கொண்டே சொல்லி முடித்தாள் பத்மா.

"எங்கே கொடு, கடிதம் நான் பார்க்கிறேன்!" என்று ராமையர் கேட்கவில்லை. அவர்களைக் குறும்பாகப்பார்த்தார் அவ்வளவுதான். சாமிநாதனின் கடிதத்தைப்பார்க்க பத்மாவுக்கு இருக்கும் உரிமை தமக்கு இல்லைபோல சும்மாயிருந்துவிட்டார்!

"சரி மாமா...நான் அந்தவேலைக்குப்போகவில்லை. நீங்கள் சொன்னமாதிரி காசிப் படிப்பு முடிந்துவிட்டும்! பெரியவேலை, நல்ல வேலையாகும்!...இங்கே நான் ஒரு வாரம் இருந்துவிட்டு ஊருக்கு வருகிறேன் என்று அப்பாவுக்கு எழுதிவிடுங்கள்!" என்று புன்னகையுடன் பத்மாவின் பதிலுக்கு ஒப்பினான் சாமிநாதன்.

"அப்படி வா வழிக்கு! சாமிநாதன் என்ற எங்கள் அழைப்புக்கு நீ இணங்கியிருக்கிறாய் என்றும் குறிக்கட்டுமா, சாமிநாதா?... உனக்குச் சம்மதம்தானே..." என்றார் ராமையர்.

"காசிக்குப்போய் வருபவர்கள் தமக்குப் பிரியமானது ஏதாவதொன்றை விட்டுவிடுவார்கள் என்றுதான் பத்மா சொல்லிவிட்டாளே! நானோ படிப்பை விடவில்லை...எனக்குப்பிடித்தமான 'சீனு' என்ற பெயரைத் துறந்துவிடுகிறேன்!...இனிமேல்...எங்கும் யார்க்கும்....எப்போதும்......நான் "சாமிநாதனே!" என்றான் சாமிநாதன்......சபையிலேயே தனக்கு யாரோ புகழ்மாலை இட்டுவிட்டது போன்ற கர்வம் தொனிக்க.

"தங்கம்...! உள்ளே என்ன பண்ணிண்டிருக்கே!...வா பாரு!... இனிமேல் இவனை "சாமிநாதா!" என்றுதான் அழைக்கணும் நீயும்!" என்று மனைவியிடம் சொல்ல சமையலறை நோக்கிப்போனார் ராமையர்.

"பத்மா...நல்லவேளை மானத்தைக் காத்தாய்!...கடிதத்தைப் பற்றி என்ன சொல்லிவிடுவாயோ என்று பயந்தேன்...கெட்டிக்காரி, நீ...சமாளித்துவிட்டாய்!" என்று இங்கே குழறினான் பத்மாவிடம் சாமி—நாதன், அவள் கன்னத்தை மெள்ளத் தட்டிக்கொண்டே.

"மருமானின் காசியாத்திரையில், பெயரை விட்டுவிடுவது மட்டும்தானா நடப்பது? காசியாத்திரைக்கப்புறம் என்ன தெரியாதா?....." என்று கேட்டுக்கொண்டே தங்கம்மாள், ராமையர் பின்தொடர வந்தாள்.

"கோவிச்சுண்டு கிளம்பற மாப்பிள்ளை மாதிரி நீயும் ஊருக்குக் கிளம்பறதாகச் சொன்னாயாமே, சாமிநாதா! பத்மாதான் ராஜி பண்ணி நிறுத்தினாளாக்கும்!" என்று மருமகனை ஒருபோடு அருமையாகப் போட்டாள் மாமி.

கிட்டுவின் கிரஹஸ்தாச்சிரமம்

நியாயவாதி

வாசல் திண்ணையில் கிட்டு உட்கார்ந்துகொண்டு இருந்தான். பக்கத்து வீட்டுக்கார் தன் மைத்துனியின் பெண் குழந்தையை தூக்கி வைத்துக்கொண்டு விளையாட்டுக் காட்டிக்கொண்டிருந்தார். அதைப் பார்த்துவிட்டு கிட்டு நகைத்தான். அவன் பக்கத்தில் இருந்த என்னிடம் அவன் "பாவம்! பெண்டாட்டிக்குப் பயப்படுகிறார் அவர். மைத்துனியின் குழந்தை அவரது இடுப்பை விட்டு இறங்குவதில்லை. அவரைப் படாதபாடு படுத்துகிறது. என்ன செய்வார் பாவம்" என்றான்.

நான் சிரித்துக்கொண்டே, "கிட்டு, நீ இன்று பிரம்மசாரியாய் இருக்கிறாய். இப்படியெல்லாம் நீ இப்பொழுது பேசிவிட்டு நாளைக்கு உனக்கு சம்சாரம் வந்தால் அப்புறம் உன்பாடு தெரியும். அடுத்த வீட்டுக்காரர் உன்னைக் கேலிபண்ணும்படியாய் விடும்" என்றேன்.

கிட்டு பதட்டத்துடன், "ஒருக்காலும் இல்லை. எனக்குக் கல்யாணம் ஆகும்பட்சத்தில் நான் என் மனைவியை அடக்கி ஆளுவேனேயன்றி அவள் கையை ஓங்கவிடும்படி இருக்கமாட்டேன்" என்றான்.

"பார்ப்போமே! எல்லாம் பின்னால் தெரியப்போகிறது" என்றேன் நான்.

"ததாஸ்து" என்று பதில் கூறினான்.

2

கிட்டு என் மாமாவுக்கு ஒரே பிள்ளை. அவன் சிறு குழந்தையாய் இருந்தபொழுது என் மாமா காலமாகிவிட்டார். அவனை வளர்க்கும் பொறுப்பு விதவையாய் போன என் மாமியின்மீது விழுந்தது. என் மாமாவுக்கு சோற்றுக்கும் துணிக்கும் குறைவில்லை. கிட்டுவை மாமி மிகவும் அருமையாகவே வளர்த்தாள். யுக்த வயதில் அவனுக்கு வித்தியாப்யாசம் செய்யப்பட்டது. கலாசாலை உள்ளூரிலேயே. அவனுக்கு ரயில்வே இலாகாவில் ஒரு உத்தியோகம் கிடைத்தது. பட்டணத்துக்குப் போகவேண்டும் என்ற ஆசை கிட்டுவுக்கு. ஆனால் காவேரியையும், கோவிலையும் விட்டுப் பிரிய மாமிக்கு இஷ்டமில்லை. அதனால் கிட்டுவும் உள்ளூரிலேயே இருக்க வேண்டியதாயிற்று.

கிட்டு சுந்தரமான வாலிபன். ரொம்ப தமாஷாகப் பேசுவான். ஆனால் கோபம் சீக்கிரம் வந்துவிடும். பிடிவாதமும் அதிகம். முரடன் என்ற பெயர் அவனுக்கு நிலைத்துவிட்டதில் அதிசயமில்லை. என் மாமிக்கு அவனிடம் உயிர். ஆனால் அவன் ஒரு சிறு பிழைசெய்தாலும் அதைப் பொறுக்கமாட்டாள். மிகவும் கடுமையாக கண்டிப்பாள். அவனோ, தான்செய்தது தான் சரி என்று சாதிப்பான். இருவருக்கும் பலத்த விவாதம் நடைபெறும்.

மாமிக்கு தன் மகனை மஞ்சள் வேஷ்டியுடன் மணக்கோலத்தில் பார்க்கவேண்டுமென்று எவ்வளவோ ஆசை. எத்தனையோ இடங்களிலிருந்து அவனுக்குப் பெண்கொடுக்க முற்பட்டார்கள். ஆனால் அவர்களது முயற்சிகள் பலன்பெறவில்லை.

முடிவில் நான் பிரயத்தனம் எடுத்துக்கொள்ள தீர்மானித்தேன். என் அம்மாஞ்சி கிட்டுவுக்கு என் அத்தை மகள் சரோஜாவை சகதர்மிணியாக்குவது என்று முடிவு செய்தேன்.

3

என் அத்திம்பேர் இறந்துபோய் ஏழெட்டுவருடங்கள் ஆய்விட்டன. அவர் நல்ல உத்தியோகத்தில் இருந்தார். இப்பொழுது இருப்பின் அவர் பெரிய 'ஆபீஸர்' ஆக இருப்பார். ஆனால் துரதிர்ஷ்டவசமாய் அவர் திடீரென்று அகால மரணத்துக்குள்ளாகும்படி நேரிட்டது. அவருக்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணுமே. சரோஜா அவரது கடைசிக் குழந்தை.

சரோஜா ரொம்பவும் அழகாய் இருப்பாள். களை சொட்டும் முகம், பிரகாசத்துடன் மிளிரும் கண்கள், மாந்தளிர் மேனி, இனிமையான குரல், சிரித்து விளையாடும் சுபாவம். என் அத்திம்பேருக்கு நல்ல சொத்தும் ரொக்கமும் இருந்தன. அவர் காலமானபின் அத்தை தன் குழந்தைகளை ரொம்பவும் செல்வமாக வளர்த்தாள். அவளுக்குப் புது மோஸ்தர்களில் ரொம்பவும் பிரேமை. சரோஜாவை ஒரு துரைசானியைப்போல் ஆக்க வேண்டும் என்று நினைத்தாள். அவளுக்கு 'கான்வென்ட்' படிப்பு. கிறிஸ்தவப் பெண்கள் சிநேகம். நடையுடை பாவனைகள் எல்லாம் நவீனமானவை. இப்படி அவள் ஒரு துரைவீட்டுப் பெண்ணைப் போல் வளர்ந்தாள்.

இந்த நவீன சுந்தரியைத்தான் நான் என் அம்மாஞ்சி கிட்டுவுடன் பிணைக்க ஆசைப்பட்டேன். என் முயற்சி வெற்றி பெற்றது. என் வற்புறுத்தலின் பயனாகவும் மாமியின் போதனையின் விளைவாகவும் கிட்டு கிரகஸ்தாச்சிரமத்தில் பிரவேசிக்க சம்மதித்தான். கிட்டுவுக்கும்சரோஜாவுக்கும் திருமணம் சிறப்பாக நடைபெற்றது.

மாமி பழைய ஆசாரத்தில் பழகினவள். பிராசீன சம்பிரதாயத்தில் பற்றுள்ளவள். கிட்டுவுக்கும் ஆசாரத்தில் மிகுந்த ஊக்கமுண்டு. அவனுக்கு "கிளப்பில்" மோகம் இல்லை. குடுமியுடன்தான் விளங்கினான், ஸ்நானம், சந்தியாவந்தனம் பூஜை—இவற்றை அவன் தினம் ஒழுங்கு தவறாமல் செய்து வருவான்.

ஆனால் சரோஜா எப்படி இருந்தாள் தெரியுமா! கோண வகிடு, பவுடர் டப்பி, பட்டு ரிப்பன், கையைவிட்டு அகலாதபத்திரிகை, பாரசீக ஜோடுகள் தரித்த பாதம் இத்யாதி சின்னங்களுடன் அவள் புக்ககம் வந்தாள்.

4

இப்படி மணவாழ்க்கை ஆரம்பித்த அவளுக்கு புக்ககம் பயங்கரமான காடுபோல் தோன்றி

யது. மாமியார் கோபமுள்ளவள். கணவனோ முரடன்.) பிறந்தகத்தில் அறிந்த பழக்க வழக்கங்கள் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வைத்துவிட வேண்டிய அவசியத்தை அவள் உணர்ந்தாள். தனது புதிய வாழ்க்கையை ஏற்றவாறு ஆசாரத்தில் பழக வேண்டிய அவசியம் அவளுக்கு ஏற்பட்டது.

மாமி எந்த குற்றத்தையும் மன்னிப்பாள். ஆனால் சமையல் அறையில் ஆசாரக் குறைவாய் நாட்டுப்பெண் ஏதேனும் செய்தால் அதை மன்னிக்கமாட்டாள். பலமாய் கண்டிப்பாள். அவளுடன் கிட்டுசேர்ந்துகொள்ளுவான்.

“என்ன பெண் அடி நீ! உனக்கு எத்தனை தடவை சொல்லிக் கொடுத்தாலும் புத்தி இல்லை. சாதம் மீதி இருந்த பாத்திரத்தை தொட்டுவிட்டு, கையை அலம்பாமல் தயிர் பாத்திரத்தை எடுத்துவிட்டாயே! அசுத்தம் ஏற்பட்டுவிட்டதே. எனக்கு இன்று சாப்பாடு வேண்டாம்” என்று மாமி கோபித்துக்கொண்டு கூடத்துக்குப் போய்விடுவாள்.

பாவம் சரோஜாவால் என்ன பதில் சொல்லமுடியும்! பேசாமல் சமையல் அறையில் இருப்பாள். தன் விதியை நொந்துகொள்ளுவாள். மாமியின் மனம் இரங்காதா என்று அவள் ஏங்குவாள்.

உச்சி நேரத்துக்கு மாமி உள்ளே வருவாள். “சரோஜா நீ சாப்பிடவில்லையா! அடி அசடே! நீ இப்படி பட்டினி கிடந்தால் உன் உடம்பு என்ன ஆகும்! இனிமேலாவது ஆசாரத்தை கவனித்து காரியம் செய்கிறாயா! இலை போடு, இரண்டு பேரும் சாப்பிடுவோம்” என்பாள்.

மாமிக்கு ரொம்பவும் இளகின மனம். அவள் கோபம் வெகு சீக்கிரம் ஆறிவிடும். தன் நாட்டுப் பெண்ணை விட அன்பாய் மதிப்பாள். ஆனால் அக்கம் பக்கத்தார் காதில் அவளது இரைச்சல்கள் விழுந்தனவேயன்றி, அவளது அன்பும் பராமரிப்பும் அவர்கள் கண்ணில் படவில்லை. மாமியார் நாட்டுப் பெண்ணை படாத பாடு படுத்துவதாகவும் அதற்குப் புருஷன் உடந்தை என்று வதந்திகள் பரவின. இது பக்கத்து ஊரில் வசித்த என் அத்தை காதிலும் விழுந்தது.

அத்தைக்கு ஏற்கனவே ரொம்பவும் கோபம். தன் வீட்டில் நடைபெற்ற விசேஷங்களுக்கு அவள் தன் பெண்ணையும் மருமகனையும் அழைக்காமல் இருந்ததில்லை. ஆனால் கிட்டு சரோஜாவை பிறந்தகத்துக்கு அனுப்பினால்தானே. அவன் தாய் என்ன வற்புறுத்தியும் அவன் சரோஜாவை அனுப்ப இணங்குவதில்லை.

“கிட்டு! உன் மாமியார் என் மண்டையை உருட்டுவாள். நான் சரோஜாவை பிறந்தகத்துக்கு அனுப்ப சம்மதிக்கவில்லை' என்ற பெயர்தானே கடைசியில் எனக்கு, இது உனக்குத் தெரியவில்லையே” என்பாள். ஆனால் கிட்டு, “நீ சும்மா இரு அம்மா” என்பான். சரோஜாவை அழைக்க வந்த மைத்துனனிடம் கிட்டு முகம் கொடுத்து பேசமாட்டான்.

தன் பெண் புக்ககத்தில் கஷ்டப்படுவதாக முடிவு செய்த அத்தை என்னிடம் முறையிடாத சந்தர்ப்பம் இல்லை. “ஏண்டா! நீ பார்த்துக்கொண்டு இருக்கிறாயே! சரோஜாவுக்காக நீ பரிந்து பேசக் கூடாதா! என் பெண் கஷ்டம் எப்பொழுது விடியுமோ? என்று கண்ணீர்விடுவாள்...

நான் எப்படி பரிந்து பேசுவது? பேசினால் அனுகூலம் ஏற்படுமோ? கிட்டு முரடனல்லவா? ஆதலால் நான் அத்தையிடம், “அத்தை! பொறுமையாய் இரு. எல்லாம் நாளாக ஆக சரியாய்விடும்.” என்பேன்.

5

நாட்கள் செல்லச் செல்ல சரோஜா தனது புக்கக வாழ்க்கையில் ஊக்கங்கொண்டாள். மாமியார் கற்பித்த வழக்கங்களை வழுவாமல் கைக்கொண்டாள். அவளது கோணவகிடும், பட்டு ரிப்பனும் மறைந்தன. சமையல் வேலையில் நல்ல தேர்ச்சி பெற்றாள். பூஜை புனஸ்காரங்களில் கணவனுக்கும் மாமியாருக்கும் அனுசரணையாக உதவலானாள்.

என் மாமி ஆசார சீலையாயிருப்பினும் பழைய கட்டுப் பெட்டியல்ல. உலக நடப்பை நன்கு அறிந்தவள். ஆங்கிலமும் கொஞ்சம் தெரியும். பெயர்போன வைதிக குடும்பத்தில் பிறந்து வளர்ந்து வைதிக குடும்பங்களில் வாழ்க்கைப்பட்ட அவளுக்கு புதிய நாகரிகத்தில் மோகம் இல்லாவிட்டாலும் அது எப்படிப்பட்டதென்பதை நன்கறிவாள். திவ்வியப் பிரபந்தம், ராமாயணம், முதலியவற்றை பாராயணம் செய்யாமல் சாப்பிடமாட்டாள். பத்திரிகைகளிலும் பிரியம் அதிகம். அவற்றை தருவித்து தனது நாட்டுப் பெண்ணை படிக்கும்படி சொல்லுவாள். சங்கீதத்திலோ அவளுக்கு ரொம்பவும் பிரேமை. வீணையுடன் புக்ககம் வந்த சரோஜாவை அவள் தினம் ஒரு மணி நேரமாவது வாசிக்கும்படி வற்புறுத்துவாள். கிட்டுவுக்கு சங்கீதம் என்றால் வெறுப்பு. அவன் இல்லாத சமயம் பார்த்துதான் சரோஜா வீணை வாசிப்பாள். மாமி அவளது கானத்தைக் கொண்டாடுவாள்.

இப்படி வெகு சீக்கிரத்தில் சரோஜா, குடும்பத்துக்கு பாங்கான பெண்ணாக மாறிவிட்டாள். மாமியாரிடம் அவளுக்கு அளவற்ற விசுவாசம். புக்ககத்துக்கு வந்தபின் அவள் தன் மாமியாரிடமிருந்து திவ்வியப் பிரபந்தத்திலுள்ள திருப்பல்லாண்டு, திருப்பள்ளி எழுச்சி, திருப்பாவை முதலியவற்றை கற்றுக்கொண்டாள். அவற்றை அவள் இசையுடன் வீணையில் வாசிப்பாள். அது கேட்க கேட்க தெவிட்டாத இனிமையாய் இருக்கும்.

ஆனால் கிட்டுமட்டும் தன் மனைவியிடம் முரடனாகவே இருந்தான். அவளைமிரட்டிக்கொண்டே அவள் மீது ஏதாவது குற்றம் சுமத்தாமல் அவன் ஒரு நாளையும் கழித்ததில்லை. அவன் தாய் இதற்காக வருந்தினபோதிலும் அவன் குணம் மாறவில்லை. ஆனால் சரோஜா எல்லாவற்றையும் பொறுமையுடன் சகித்துக்கொண்டிருந்தாள்.

6

மாமிக்கு ஒருகுறைதான். தன் மகனுக்கு ஒரு குழந்தை பிறந்து அப்பேரப்பிள்ளையை தான் மடியில் சீராட்டிவிட்டு கண் மூட வேண்டுமென்பது அவளது ஆசை. ஆனால் அது ஈராமலே போய்விட்டது. சரோஜா புக்ககத்துக்கு வந்து ஐந்து வருடங்கள் ஆயினும் அவளுக்குக் குழந்தை பிறக்கவில்லை. அவள் ஜாதகப்படி இன்னும் 2-வருடங்கள் கழிய வேண்டுமென்று ஜோஸியர் கூறினார்.

திடீரென்று ஒரு இரவு மாமி மாரடைப்பால் இறந்தாள். இதை கிட்டு எதிர்பார்க்கவே இல்லை. இன்னும் தன் தாய் பல வருடங்கள் ஜீவனுடன் இருப்பாளென்று அவன் எதிர்பார்த்தான். திடீரென்று ஏற்பட்ட இந்தக் குடும்ப மாறுதலால் அவன் சரோஜாவுடன் தனிமையில் குடித்தனம் நடத்தவேண்டியதாயிற்று.

மாமியின் உத்தரகிரியைகள் நடைபெற்றபொழுது அத்தை கடைசி நாட்களில் வந்து இருந்து செய்யவேண்டியவற்றை செய்துவிட்டு ஊருக்குத் திரும்பினாள். கிட்டு அவளை தன் மனைவிக்கு சில நாட்கள் துணையாய் இருக்கும்படி கேட்டுக்கொண்டான். ஆனால் அவன் மாமியார் அதற்குச் சம்மதிக்கவில்லை. “என் பிள்ளைகள் தனிமையாய் இருக்கிறார்கள். என் பெரிய நாட்டுப் பெண் பிரசவத்துக்காக இருக்கிறாள். வீட்டை விட்டு நான் இங்கே இருக்கமுடியாது” என்று ஊருக்குப் போய்விட்டாள்.

கிட்டுவுக்கு மாமியின் மீது கோபம். ஆனால் என்னசெய்வது? முன்பு, தான் முரட்டுத்தனமாக இருந்ததற்கு வருந்தினான். சரோஜாவுடன் அவன் இப்பொழுது சுமுகமாக இருந்தான். அவளுக்கு அடிக்கடி தலைவலி, ஜுரம், ஏதாவது வந்துவிடும். அவன் ஆபீஸ் நேரம் ஒழிந்த மற்றப்பொழுதை வீட்டிலேயே கழித்தான். சமையல் அறையில் சரோஜாவுக்கு உதவியாக இருந்தான். சிரிப்பும் விளையாட்டும் இப்பொழுது தம்பதிகளிடையே நிலைபெறலாயின.

ஒருவருஷம் கழிந்தது. சரோஜா கர்ப்பவதியானாள். வீட்டு வேலை செய்ய அவளால் முடியவில்லை. அதேசமயம் அவன் மூத்த மைத்துனனுக்கு கிட்டு இருந்த ஊரிலே மாற்றலாயிற்று. அவன் தனி ஜாகை பார்க்க உத்தேசித்தான். ஆனால் கிட்டு தன் மைத்துனனிடம் சென்று, “எதற்காக தனி ஜாகை! என்னுடன் நீ இருக்கக் கூடாதா? அம்மாவும், நீயும் இங்கேயே இருந்தால் உன் தங்கைக்கு எவ்வளவோ ஒத்தாசையாய் இருக்கும்” என்றான். மிகுந்த வற்புறுத்தலின்பேரில் என் அத்தை தன் புத்திரனுடன் கிட்டுவின் ஜாகைக்குக் குடியேறினாள். இதனால் அனுகூலம் பெற்றவர்கள் கிட்டுவும், சரோஜாவும்தாம். சரோஜாவுக்கு வீட்டு வேலை பழகுகிறதேது. அவள் தேக ஆரோக்கியமும் வளர்ந்தது. ஆனால் அக்கம் பக்கத்தார்கள் என்ன சொல்லுகிறார்கள் தெரியுமா? “கிட்டு அம்மா கண் மூடினதுதான் தாமதம். அவன் மாமியாரிடம் அடைக்கலம் புகுந்துவிட்டான்” என்கிறார்கள்.

கிட்டுவுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. நாளைக்கு அதன் ஆண்டு நிறைவு. அதோ கிட்டுவும், அவன் மனைவியும் என்னை அழைக்க வருகிறார்கள். கிட்டு இடுப்பில் இருக்கும் குழந்தை யார் தெரியுமா? அவன் மைத்துனனின் பெண் குழந்தை!

எல்லாம் காலத்தின் போக்கு! கிட்டுவின் குணம் மாறிவிட்டதோ! அல்லது காலத்தின் போக்குதானோ அது?

சமீபத்தில் மணம் புரிந்த எலிஸபெத் இளவரசிக்கும், பிலிப் மவுண்ட்பாட்டனுக்கும் மன்னர் குடும்பத்திலிருந்துபோன நகைகள் இவை. ஸெயிண்ட் ஜேம்ஸ் அரண்மனையில் காட்சியாக வைக்கப்பட்டுளது.

கட்டுரையாளருக்கு

★

“சுதேசமித்திரன்” வாரப் பதிப்பில் கட்டுரைகள், கதைகள், ஹாஸ்ய கதைகள், கவிதைகள் முதலியவற்றை எழுதும் நண்பர்கள், தங்களுடைய கதர் பாத்திரங்களையும் கற்பனையாகவே அமைக்க வேண்டுகிறோம். குறிப்பாகச் சுட்டிக்காட்டும் வண்ணம் ஊரையோ, பேரையோ குறிப்பிடாமலிருக்க வேண்டும்.

— ஆசிரியர்



அன்புள்ள அம்மாவுக்கு
அலமு அநேக தண்டம்
ஸமர்ப்பித்த விஞ்ஞாபனம்.

விமலாவும் அவளுடைய தாயாரும் நேற்றுதான் சேலத்துக்குப் போனார்கள். அவள் இங்கே இருந்த வரையில் கணக்கு வாத்தியாராத்து மாமியும் எதிரகத்து எச்சுமுப் பாட்டியும் தலைகாட்டவில்லை. உள்ளொன்று வைத்து வெளியொன்று பேசும் வழக்கந்தான் கிடையாதா? அவர்கள் ஏதாவது விஷமமாக வார்த்தையை ஆரம்பித்தால் நறுக்கு நறுக்கென்று பதில் சொல்லிவிடுவாள். கொஞ்சம்கூட தாக்ஷண்யமே பார்க்கமாட்டாள். அக்கிரமத்தைக் காண அவள் மனம் கொஞ்சம்கூடச் சகிக்காது.

மொத்தத்தில் அவள் இங்கே வந்தபிறகு குடும்பமே ரொம்ப சீர் திருந்திவிட்டதென்று சொல்லலாம். இந்த அசட்டு விமலா வீணிற்காவது அவர்களுடைய கலக வார்த்தையைக் கேட்டுக்கொண்டு எங்களுக்குத் தெரிந்தும் தெரியாமலும் அவர்களைத் திருப்தி செய்வதற்காக பண்டமாகவும் பணமாகவும் வாசற்பக்கமாகவும் புறக்கடைபக்கமாகவும் வாரி வாரி அவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருக்கும். இதைத் தெரிந்துகொண்டு விமலாவின் தாயார் ஒருநாள் அதை 'விடுவிடென்று' கேட்டுவிட்டாள். பைத்தியமே! இப்படியாருடைய சொத்தோ கொள்ளை போகிற மாதிரி'கொடுத்துக்கொண்டிருக்கிறாயே. இதனால் அலமுவுக்கு மாத்திரம்தான் நஷ்டம் என்று நினைக்கிறாயா? உனக்கும் அதில் பங்கில்லையா? அத்துடன் இப்படியெல்லாம் அவர்களுக்குக் கொடுத்து விட்டால் அவர்கள் ஆபத்தில் வந்து தாங்கி விடுவார்கள் என்று நினைக்கிறாய். நீ கொடுத்துக்கொண்டிருக்கிறவரையில் தான்உன்னுடன் உறவுகொண்டாடுவார்கள். கொடுப்பதை, என்று நிறுத்துகிறாயோ அன்றேஉன்னுடன் துவேஷம்தான். இதுவரைக்கொடுத்தது கொஞ்சம்கூட ஞாபகத்துக்கு வராது அதுகளுக்கு. அத்துடன் அப்படியே அவர்கள் உனக்கு ஆபத்தில் வந்து தாங்குவதாகவே வைத்துக்கொள். வீட்டில் இருப்பவர்கள்உனக்குவிரோதமாக இருந்தால்தானே அப்படியெல்லாம் யோசனை செய்ய வேண்டும். அலமுவாகட்டும், அவள் மன்னியாகட்டும் ரொம்பவும் தங்கமான பெண்கள். சௌந்தரமும் கூடிய வரையில் நல்ல பெண்தான். மாமியார் தானாகட்டும் உன் வரையில் பிரீதியாகத்தான் இருக்கிறாள். பார்க்கப்போனால் அலமுவினிடம் உன்னைவிடக் கொஞ்சம் பிரிதி மட்டு என்றே சொல்லலாம். அலமு அதை லட்சியம் செய்கிறாளா பார், அவள் விவேகி. குடும்பம் என்றால் அப்படித்தான் இருக்கும். இதையெல்லாம் பொருள்படுத்திக்கொண்டு எதிர் நடவடிக்கை எடுத்தால் நாலுபேருக்குப் பரிகாசத்துக்கு விஷயமாய்ப் போய்விடும் என்று அவள் ஒன்றும் தெரியாததுபோல் கம்மென்று இருந்துவிடுகிறாள். அதுதான் புத்திசாலிகளுக்கு அடையாளம், இவ்வளவு வயசாகியும் உனக்கு இதைத் தெரிந்துகொள்ள முடியவில்லையே. படித்து என்ன பிரயோஜனம்? அசட்டுக்குணம் போகவில்லையே' என்று ஒரு அத்யாயம் சொல்லித் தீர்த்துவிட்டாள், விமலாவுக்கும் அவள் சொல்வது சரி என்று தோன்றியதோ என்னவோ தெரியவில்லை. அன்றுமுதல், அவர்களுடன் சிநேகம் செய்வதை விட்டுவிட்டது. எங்களுடன் ஜாடைமாடையாகக் கலந்துகொள்ள ஆரம்பித்தது. எங்களுக்கென்ன அதன்மீது துவேஷமா? இப்படி விவேகமில்லாமல் அசடாய் இருக்கிறதே என்ற அனுதாபம் தவிர வேறென்ன எங்களுக்கு? நாங்கள் 'முகத்தைக் காட்டாமல்' ரொம்பவும் ஸகஜமாய்த்தான் பழகினோம். அதுவும் கொஞ்சம் கொஞ்சமாக நல்ல வழிக்கு வந்துகொண்டிருக்கிறது. நல்லபடியாக இந்தக் குணம் இப்படியே நீடித்திருக்க வேண்டுமே என்று பெருமாளை வேண்டிக்கொண்டிருக்கிறேன்.

கோபுவும் ஹோட்டல் சாப்பாடு உடம்புக்கு ஒத்துக் கொள்ளவில்லை என்றும் உடனே யாராவது சகாயத்துக்கு வந்தாக வேண்டுமென்றும் நிர்ப்பந்தமாய்க் கடிதம் எழுதிவிட்டார். முதலில் மாமியார் போவதாகச் சொல்லிக்கொண்டிருந்தார். ஆனால் மாமனாருக்கு அங்கே போய் இருப்பதில் இஷ்டமில்லை. மாமியார் தான் மட்டிலும் போவதாகச் சொன்னார். அதற்கும் மாமனார் சம்மதிக்கவில்லை. வயசு ஆக ஆக பால்யம் திரும்பும் போலிருக்கிறது! ஒரு நிமிஷம் மாமியாரை விட்டுப் பிரிந்திருக்க இஷ்டமில்லை அவருக்கு. கல்யாணமோ, கார்த்தியோ எங்காவது சென்றால் இரண்டுபேரும் ஜோடியாகத் தான் செல்வார்கள். அசாத்ய ஆசை, பாவம் அகத்தில் தானாகட்டும். காலையில் எழுந்தால் ராத்திரி படுக்கப்போகிற வரையில் 'யாரடி அங்கே' என்று நிமிஷத்துக்கு ஒருதரம் கூப்பிட்டபடிதான். இருபது வயது தம்பதிகள் மாதிரிதான். ஏதாவது மொச்சு 'மொச்சு' என்று பேசிக் கொண்டே இருப்பார்கள். பெரிய நாத்தனார் பிள்ளை கண்ணன் வருகிறதே, அதைக் கூப்பிட்டு வைத்துக் கொண்டு தன் கையிலுள்ள பிரம்பை மாமனார் அதன் தலையில் வைத்து 'அதோ இருக்கிறது யார் சொல் பார்க்கலாம்' என்று மாமியாரைச் சுட்டிக் காண்பிப்பார். 'பாட்டி' என்று சொல்லும் கண்ணன். 'இது யார் சொல் பார்க்கலாம்' என்று தன்னைச் சுட்டிக் காண்பித்துக்கொள்வார், 'தாத்தா' என்று பதில் சொல்லும், 'உனக்கு தாத்தா வேண்டுமா? பாட்டி வேண்டுமா?' என்பார் 'தாத்தா' என்று சொல்லும். 'ஆனால் பாட்டி வேண்டாமே உனக்கு?' என்பார் மாமியார். '...ம்...பாட்டியுந்தான் வேண்டும்' என்று சொல்லும். இந்த மாதிரி 'தாத்தா-பாட்டி விளையாட்டு' விளையாடிக் கொண்டு அதில் ஒரு ஆனந்தம். உண்மையிலேயே வயசு அதிகம் ஆக ஆக ஆசையும் பாசமும் அதிகமாகிக்கொண்டுதான் வரும்போலிருக்கிறது!

ஆகவே சேலத்துக்கு மாமியார் போகவில்லை. முதலில் விமலா மட்டிலும் போகட்டும். கொஞ்ச நாளைக்குத் தனிக்குடித்தனம் செய்யட்டுமே, என்று நாங்கள் சொன்னோம். விமலாவுக்கும் அதில் இஷ்டந்தான். ஆனால் அவளுடைய தாயார் அதற்கு ஒத்துக் கொள்ளவில்லை. முன்பின்தெரியாத புது இடத்தில் சிறிசுகளைத் தனியாக விடக்கூடாது என்று சொல்லிவிட்டு அவளும், விமலாவும் நேற்று சேலம் போய்ச் சேர்ந்தார்கள்.

பெரிய நாத்தனார் அகமுடையானுக்குக் காயமெல்லாம் நன்றாகக் குணமாகிவிட்டது. ஒரு ஜவுளிக் கடையில் 'இவர்' வேலை பார்த்துக் கொடுத்திருக்கிறார். அதன் மீதிருந்த வழக்கும் ஒருவாறாக விரோதம் ஒன்றும் இல்லாமல்நல்லபடியாகத்தீர்ந்தது.

சிரோமணி நாளுக்கு நாள் பிரபலஸ்தனாகிக்கொண்டு வருகிறது. சம்ஸ்க்ருதம் அனாதரவு செய்யப்படுவதைக் கண்டு, தேசத்தின் பொக்கிஷமாகிய அதை விருத்தி செய்வதற்காக ஒரு சங்கம் ஏற்படுத்தியிருக்கிறது என்று முன்னமேயே எழுதியிருக்கிறேனல்லவா? அந்த சங்கத்தில் பெரிய பெரிய மனிதர்களையெல்லாம் அங்கத்தினர்களாகச் சேர்த்து அதை வெகு சீக்கிரத்தில் பிரபல்யப்படுத்தி



......முகத்தைக்காட்டாமல் சகஜமாய் பழகினேம்......

விட்டது. அது வேலை செய்கிற தீவிரத்தைப் பார்த்தால் ஒரு பத்து வருஷ காலத்துக்குள் சம்ஸ்கிருதத்தின் பழம் பெருமையை நிலை நாட்டி விடும்போலிருக்கிறது. அது, இறந்தபாஷை என்று சொல்லப்படாமல் கூடிய சீக்கிரத்தில் சம்ஸ்கிருதமும் உயிருள்ள பாஷைதான் என்று ருசுப்பித்து விடும்

......"அதோ இருக்கிறது யார் சொல் பார்க்கலாம்" என்று......

போலிருக்கிறது. தெருவுக்கொரு இரவு பாடசாலையை ஏற்படுத்தி அதற்கு ஒரு சிரோமணியை வாத்தியாராகப் போட்டு குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் சம்ஸ்கிருதம் போதித்துக் கொண்டு வருகிறது. அதனுடைய சலியாத உழைப்பைக் கண்டு பெரிய பெரிய உத்யோகஸதர்கள், பணக்காரர்கள், பொருளுதவி செய்து மேன் மேலும் அதனுடைய வேலையை வெற்றி பெறச் செய்து கொண்டு வருகிறார்கள்.

அந்த சினிமாக்காரியினுடைய பாடசாலையும் ரொம்பவும் பிரபலமடைந்துவிட்டது. அதற்கு ஆங்காங்கே வெளியூர்களிலெல்லாம் பல கிளைகள் ஏற்பட்டு விட்டன. சர்க்காரையே எதிர் பார்க்காமல் ஆங்காங்கே ஜனங்கள் இந்த மாதிரி வேலை செய்து வந்தால் தேசம் எவ்வளவு முன்னுக்கு வந்து விடும் என்பதற்கு இவை சிறந்த உதாரணங்களாய் விட்டன.

ஆமாம். அதெல்லாம் கிடக்கட்டும். இன்னொரு முக்யமான விஷயம் எழுதபபோகிறேனே முன்னமேயே எழுதியிருக்க வேண்டும். நானே எழுதிக் கொள்வதென்றால் என்னமோ போலிருக்கிறதம்மா. என்ன யோசிக்கிறாய்? எல்லாம் நல்ல ஸமாசாரந்தான். நீ பாட்டியாகப் போகிறாய். அப்பா தாத்தாவாகப் போகிறார். அதான் ஏற்கனவே ஆகி விட்டோமோ என்று சொல்கிறீர்களா? அழமூலமாக ஆகவில்லையல்லவா? புரிந்து விட்டதா? இது நான்கு மாதம். உடம்பு அடியோடு சரியாக இல்லை. டாக்டர் மருந்து கொடுத்திருக்கிறார். நாட்டுப்புறத்தில் போய் மருந்து சாப்பிடச் சொல்லியிருக்கிறார். நானும் 'இவரும்' நாளைய தினம் புறப்பட்டு வருகிறோம். மன்னியும், அண்ணாவும் கூட வருகிறார்கள். இந்திராவும், வாஸுவும் அடுத்த வாரம் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். இந்தக்கடிதத்தை இத்துடன் நிறுத்திக்கொண்டு மற்ற விஷயங்களை நேரில் வந்து சொல்லிக் கொள்கிறேன்.

இப்படிக்கு
உன் அன்புள்ள
அலமு,

—✯—

மாதர் மகாசபை

இந்தலைப்புடன் அடுத்த இதழிலிருந்து "குங்குமம்" எழுதிய கட்டுரைகள் தொடங்கும். அன்றாட வாழ்வில் காணும் அதிக ரஸமான விவரங்கள் இக்கட்டுரைகளில் இடம் பெறும்.

கிறிஸ்துமஸ் வெகுமதி

-கௌரி-

மேரி ஒரு பணக்காரருடைய புத்திரி. மிகவும் தாராள மனசு உடையவள். இந்த விஷயத்தில் அவள் அவளுடைய தந்தைக்கு நேர் எதிராக இருந்தாள்.

லில்லியின் தந்தை ஜான் மேரியின் வீட்டில் தோட்டக்காரனுக இருந்தான். லில்லி ஏழையாக இருந்தாலும் மேரி அவளுடன் மிகவும் சிநேகமாக இருந்தாள்.

கிறிஸ்துமஸுக்கு முந்தின நாள் ஜான் பக்கத்து ஊருக்கு ஏதோ ஒரு காரியமாகப்போயிருந்தான். அன்று மாலை லில்லியும், மேரியும் தோட்டத்தில் ஒரு மரத்தினடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

மேரி "லில்லி! என் தந்தை கிறிஸ்துமஸுக்கு என் இஷ்டம்போல் செலவு செய்வதற்காக 25 ரூபாய் தந்திருக்கிறார். ஏன், நீ நல்ல பாவாடை ஒன்றும் தைத்துக் கொள்ளவில்லையா?" என்று கேட்டாள்.

'நான் ஒன்றும் தைத்துக் கொள்ளப் போவதில்லை" என்று லில்லியிடமிருந்து பதில் வந்தது.

இவர்கள் பேசிக்கொண்டிருக்கும்பொழுது மேரியின் தந்தை அந்தப் பக்கமாக உலாவ வந்தார். அன்று அவர் சிறிது சந்தோஷத்துடன் இருந்தார். ஏதோ பேச்சுக்குரல் கேட்கவே அவர் மறைந்து நின்று கொண்டு அவர்களுடைய பேச்சைக் கேட்கத் தொடங்கினர். இரு தோழிகளும் அவர் அங்கு வந்ததை அறியவில்லை. எனவே சம்பாஷணை தடையின்றி நடந்துகொண்டிருந்தது.

"லில்லி! நீ ஏன் இன்று மிகவும் வருத்தத்துடன் இருக்கிறாய்? நாளை கிறிஸ்துமஸ் இல்லையா? சந்தோஷமாக இருக்க வேண்டாமா?"

"மேரி! நாங்கள் மிகவும் ஏழைகள். கிறிஸ்துமஸுக்காக ரொட்டி வாங்கக்கூட எங்களுக்குக் காசில்லை. அப்பாவாவது வீட்டில் இருக்கக்கூடாதா?" என்று லில்லி அழுதுகொண்டே கூறினாள்.

மேரி அவளுக்காக வருத்தப்பட்டாள். "லில்லி! நான் என்ன செய்வேன்? என் தந்தையைப்போன்ற கருமியைப் பார்த்ததுகூடக் கிடையாது. எனக்குக்கூட ஒன்றும் வாங்கிக் கொடுக்கமாட்டார். ஆனாலும் நான் சண்டை போட்டாவது அப்பாவிடமிருந்து ரூபாய் வாங்கி வருகிறேன்" என்று எழுந்தாள்.

"வேண்டாம் மேரி, நான் ஒன்று சொல்கிறேன் கேள். முன்பு 'சாந்தா கிலாஸ்' என்று ஒருவர் இருந்தாராம். அவரை யார் நினைக்கிறார்களோ அவர்களுக்கு அவர் நல்ல சாமான்கள் எல்லாம் பரிசளிப்பார் என்று அம்மா கூறினாள். அவர் எனக்குக்கொடுக்கிறாரா என்று பார்க்கலாமே"

இதைக் கேட்ட மேரியின் தந்தை தன்னுடைய கருமித்தனத்திற்காக மிகவும் வருந்தினார். பிறகு அவர் அங்கிருந்து மெதுவாகப் போய் விட்டார்.

வீட்டிற்கு வந்ததும் அவர் ஜானை அழைத்து வருவதற்கு ஒரு வேலைக்காரனை அனுப்பினார். வேறு ஒருவனைக் கூப்பிட்டு ஒரு பெட்டியில் துணிமணிகள் ரொட்டி முதலிய பலவித சாமான்களை வைத்து லில்லியின் வீட்டில் யாரும் இல்லாத சமயம் பார்த்து வைத்து விட்டு வரச் சொன்னார்.

அன்றிரவு ஏழு மணியாயிற்று லில்லியும், அவள் தாயும் வீட்டு வாசலில் வருத்தத்துடன் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஜான், கையில் ஒரு பெட்டியுடன் வேகமாக வந்தான். அவனைப் பார்த்ததும்

இருவர் முகமும் சந்தோஷத்தால் மலர்ந்தது.

சீக்கிரம் வந்ததின் காரணம் கேட்கவே ஜான் "எஜமானர் ஒரு வேலையாளை அனுப்பி என்னை அழைத்து வரச் சொன்னார். அவர் வீட்டிற்குப் போனதும் கிறிஸ்துமஸுக்கு செலவு செய்வதற்காக 25 ரூபாய் தந்தார். இன்று அவர் என்னுடன் எவ்வளவு அன்புடன் பேசினார் தெரியுமா?" என்றான்.

பிறகு சிறிது நேரம் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள். லில்லி பேச்சைக் கேட்டுக்கொண்டே தூங்கி விட்டாள்.

ஜானும், அவன் மனைவியும் உள்ளே சென்றபொழுது ஒரு பெட்டியில் நிறைய சாமான்கள் இருப்பதைப் பார்த்தார்கள். ஜான் "இதெல்லாம் இங்கே எப்படி வந்தது?" என்றான். "எனக்குத் தெரியாது. நம் எஜமானர்தான் நமக்குத் தெரியாமல் வைத்துவிட்டுப் போயிருப்பான்" என்றாள் அவன் மனைவி.

மறுநாள் காலை லில்லி எழுந்ததும் ஒரு பெட்டியில் என்னவெல்லாமோ இருப்பதைப் பார்த்தாள். அவள் சந்தோஷத்துடன் "அம்மா! இதெல்லாம் சாந்தா கிலாஸ் தந்த பரிசுகள்தானே?" என்று கேட்டாள். அவள் தாயாரும் சிரித்துக்கொண்டே "ஆமாம்" என்று கூறினாள்.

லில்லி புதிய சட்டையணிந்துகொண்டு மேரியின் வீட்டிற்குப் போனாள். எல்லாவற்றையும் மேரியிடம் கூறினாள். இருவரும் சாந்தா கிலாஸை வாயாரப் புகழ்ந்தார்கள்.

* * * *

சகோதர சகோதரிகள் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள்.

சகோதரன் ஹரி.
"குலிஸ்தான்"
கார், பம்பாய் 2.

பூனாவில் ராஜாஜி ஜயந்தி

சென்ற 17-12-47-ல் பாரத சமுதாயத்தின் திர்க்க தரிசியான ராஜாஜியின் 70-வது பிறந்த தினத்தை பூனா தமிழர்கள் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். அரும்பெருந் தலைவரின் மேதையைப்பற்றி ஸ்ரீமான்கள் எம். ஆர். ஸ்ரீநிவாஸராகவன், எஸ். கணபதி சுப்ரமணியன், சிவராமகிருஷ்ணன், ரா. சௌரிராஜன் முதலியோர் தெளிவாக எடுத்துரைத்தனர். ஸ்ரீ பி. வி. வி. ஐயர் தலைமை வகித்தார்.

அச்சமயத்தில் பூனா கலைக்கழகத்தின் சித்திரக்காரர் ஸ்ரீ நடராஜன் வரைந்து கொடுத்த ராஜாஜியின் உருவப்படமொன்று திறந்து வைக்கப்பட்டு பூனா ஸரஸ்வதி வித்யாலயத்திற்கு அன்புடன் அளிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் படம் அழகாக வரையப்பட்டதுபற்றிக் கொண்டாடினர். கூட்டம் முடிந்ததும் ராஜாஜியின் படம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு சரஸ்வதி வித்யாலயத்தில் சேர்க்கப்பட்டது. ஊர்வலத்தில் திரளான ஜனங்கள் கலந்துகொண்டனர்.

ராஜாஜி நீடூழி வாழ்ந்து தேசத்தை மேன் மேலும் உன்னத நிலைக்குக் கொண்டு வர வேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்பதாக வாழ்த்துச் செய்தியொன்றும் ராஜாஜிக்கு அனுப்பப்பட்டது.

காதல் கல்யாணம்

லக்ஷ்மீதரன்.

"டேய், சுந்து இதோ வருகிறதே, இந்த ரிக்ஷாவைப் பாருடா. அவளைப்பற்றித்தான் நேற்று உன்னிடம் பேசிக்கொண்டிருந்தேன்."

"உனக்கென்னடா பைத்தியம் பிடித்திருக்கிறதா? இந்தப் பெண்ணையா காதலிப்பதாகச் சொன்னாய்?"

"ஆமாண்டா. ஏன் இப்படி ஆச்சரியப்படறே?"

"அவள் நெற்றியைப் பார்த்தாயா?"

"திலகம் இல்லை என்றுதானே சுட்டிக் காண்பிக்கின்றாய். தலையில் புஷ்பம் இல்லை என்பதையும் கவனித்துவிட்டேன்."

தன் நண்பன் சீனுவாசன் ஒரு இளம் விதவையைக் காதலிக்கிறான் என்று ஐயமறத் தெரிந்துகொண்ட சுந்து, அவனிடம் தர்க்கம் புரிவதில் அர்த்தமில்லை என்று உணர்ந்து, "காலேஜுக்கு டயம் ஆயுடுத்துடா. இந்த பஸ்ஸை 'மிஸ்' பண்ணக்கூடாது ப்ரதர்" என்று பேச்சை மாற்றி பஸ் ஸ்டாண்டைக் குறித்து ஓடினான். சீனுவாசனும் ரிக்ஷாவைப் பார்த்தவாறே அவனைப் பின் தொடர்ந்தான்.

* * * *

காலேஜுக்குப் போவதற்காக ஒருநாள் பஸ் ஸ்டாண்டில் காத்துக் கொண்டிருக்கும்போதுதான் சீனுவாசன் ரிக்ஷாவில் ஸேவாசதனத்திற்குப் போகும் அந்தப் பெண்ணை முதன் முதலில் பார்க்க நேர்ந்தது. புஸ்தகத்தைப் பிரித்து படித்துக்கொண்டே சென்ற அவள் சீனுவாசன் தன்னைப் பார்க்கிறான் என்பதை கவனித்திருக்க நியாயமில்லை. அப்படித்தான் அவன் நினைத்தான். ஆனால் ரிக்ஷா அவனைக் கடந்து சற்று தூரம் சென்றதும், அந்தப் பெண் பின்புறம் திரும்பி சீனுவாசன் நின்ற திசையை நோக்கி தன் பொல்லாத கண்பார்வையை செலுத்தியதுமல்லாமல், மனதைக் கொள்ளை கொள்ளும் ஒரு மந்தஹாஸத்தையும் கூடவே அனுப்பி வைத்தாள். 'படித்த பாவனையிலிருந்து தன்னை அவன் 'வைத்த கண் எடுக்காமல்' பார்த்ததை, கடைக்கண்ணால் அவள் தெரிந்துகொண்டது அவனுக்கு எப்படித் தெரியும்? இருவர் கண்களும் பேசிய வம்புப் பேச்சுகளை உற்று கவனித்த அவன் வாய் ஒரு விஷமப் புன்சிரிப்பு சிரித்தது! பிறகு "டிக்கட் ப்ளீஸ்" என்ற கண்டக்டரின் குரலைக் கேட்டுத்தான் சீனுவாசனுக்கு இந்த உலகில் பஸ்ஸில் உட்கார்ந்து காலேஜ் போகிறோம் என்ற சுய நினைவு உண்டாயிற்று!

தகுந்த பருவத்தில் காதல் வியாதியால் பீடிக்கப்பட்ட சீனுவாசன் காதலர்களுக்குப் பொதுவான மனநிலையையும், நிம்மதியின்மையையும் அனுபவித்தானே தவிர அசட்டு பிசட்டென்று "காதல் சேஷ்டைகள்" செய்யவில்லை. அவன் ரிக்ஷாவைத் தொடர்ந்து தினமும் ஸைக்கிளில் போகவில்லை. கடைசி 'பீரியட்' மட்டம் அடித்துவிட்டு ஸேவாசதனத்தின் வாசலில் வந்து தவம் கிடக்கவில்லை. நடந்ததெல்லாம் இதுதான். தினந்தோறும் (சனி, ஞாயிறு தவிர) சீனுவாசன் பஸ் ஸ்டாண்டிற்கு வந்து நிற்பதையும், சொல்லி வைத்தாற்போல் அந்த ரிக்ஷா அங்கு வருவதையும் பார்த்து மணி 9-30 என்று சொல்லி விடலாம். இருவரும் ஒருவரையொருவர் பார்த்துச் சிரிப்பார்கள். சீனுவாசன், தன் வாழ்க்கையின் லட்சியம் பூர்த்தியாகி, ஜன்ம சாபல்யமடைந்து விட்டதாக தன் மார்பை ஒருதரம் பார்த்துக்கொண்டு ஷர்ட் காலரை தூக்கிவிட்டுக்கொள்வான். என்றைக்காவது அவள் புஸ்தகத்தில் ஆழ்ந்திருந்தாளானால் அவன் ஒரு கனைப்பு கனைத்து அவள் கவனத்தை தன் பக்கம் திருப்புவான், அவ்வளவுதான்.

சாதாரணமாக யுவர்கள் தாங்கள் புரியும் காதல்லீலைகளை மற்ற நண்பர்களிடம் பெருமையுடன் சொல்லிக் கொள்வது வழக்கம். ஆனால், சீனுவாசன் எப்படி ஒரு விதவையைக் காதலிப்பதுபற்றி பிறரிடம் சொல்லுவான்? 'காதல் நாடகத்தில்' 15 நாட்களே அனுபவமுள்ள அவன் 'எப்படி அவளை அணுகுவது' என்று சதாசர்வ காலமும் யோசனை செய்து வந்ததால், தன் பாட புஸ்தகங்களை அறவே மறந்து விட்டான். தப்பித்தவறி புஸ்தகத்தைப் பிரித்தாலோ, ரிக்ஷாவும், அவன் காதலியுந்தான் காட்சி அளிக்கின்றார்கள். அவன் என்ன செய்வான் பாவம்! இம்மாதிரி நிலைமையில்தான் சீனுவாசன் நம்பிக்கைக்குப் பாத்திரமான தன் நண்பன் சுந்துவிடம் எல்லாவற்றையும் ஒருநாள் சவிஸ்தாரமாய் சொல்லி, அவனுடைய யோசனையையும் உதவியையும் வேண்டினான். மொத்தத்தில் சுந்து 'அனுபவசாலி' என்பது அவன் எண்ணம். ஆனால் தன் நண்பன் ஒரு 'விதவையைக் காதலிக்கிறான்' என்பது சுந்துவிற்கு மறுநாள் அப்பெண்ணைப் பார்த்த போதுதான் தெரிந்தது.

ஒருநாள் நண்பர்களிருவரும் பார்க்கில் சந்தித்துப்பேசிக்கொண்டிருந்தனர். "டேய் சீனி, உனக்கு ஏண்டா இப்படிப் போச்சு மூளை. இந்த மெட்ராஸில் காதலிக்க பெண்களா அகப்படவில்லை உனக்கு?" என்று ஏகத்தாளமாக சுந்து சொன்னதும் சீனுவாசனுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. மேடைமீது ஏறி கர்ஜனை புரியும் ஒரு சமூக சீர்திருத்தவாதிபோல் அப்போது காட்சி அளித்தான் அவன்.

"என்ன சுந்து! என்னையு[illegible] காதல் விளையாட்டில் ஈடு[illegible] விஷமத்தனம் செய்யும் இத்தூர்.

களின் கோஷ்டியில் சேர்த்துவிட்டாயா? அவள் மீது நான் கொண்டிருக்கும் பாசம் அளவிடமுடியாதது. அவளை மணப்பது என்ற திடசங்கல்பத்தினுல்தான் தொடர்ந்து என் அன்பை அவளிடம் செலுத்தி வருகிறேன். மனமொத்து காதல் ஏற்பட்டு விட்டால் அவர்கள் மணத்திற்கு ஒருவிதமான சமூகத் தடங்கலும் இருக்கக்கூடாது. நீ சுத்த கர்நாடகமாய் இருக்கிறுயே. முற்போக்கு சக்திகள் துரிதமாக முன்னேறிக்கொண்டிருக்கும் இந்த அணுகுண்டு சகாப்தத்தில் நம் நாட்டில் ஒரு, பெரிய சமூகப் புரட்சி ஏற்பட வேண்டும். அரசியல் தடைகளைத் தகர்த்தெறிந்த நாம் சமூகத் தடைகளையும் தவிடு பொடியாக்க வேண்டும். விதவா மறுமணம் சட்டமாக வேண்டும். எத்தனை இளம் விதவைகள் நம் நாட்டில் ஆதரவின்றி அநாதைகளாக அவஸ்தைப்படுகின்றனர் தெரியுமா? தாலிக் கட்டியப் பாபத்திற்காக ஒருத்தி கன்னியாகவே சாக வேண்டுமா? ஹிந்து மதத்தில் தீண்டாமையைப்போல் இதுவும் ஒரு களங்கந்தான். சந்தேகமில்லை. மறு மணம் புரிந்து கொள்ள புருஷனுக்கு எவ்வளவு உரிமை உண்டோ, அவ்வளவு உரிமை ஸ்திரிகளுக்கும் உண்டு என்று நான் ஆணித்தரமாகக் கூறுவேன்......" சுந்து சிரித்துக்கொண்டே "பிரதர். காதல் மது அருந்தி எல்லோரும் தங்களுக்குச் சாதகமாக சமுதாயத்தைப் புனருத்தாரணம் செய்ய வேண்டும் என்று கொக்கரிப்பது சகஜந்தான்" என்று சொன்னதும் சீனுவாசன் பதில் சொல்லாமல் தன் பிரசங்கத்தை நிறுத்திக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. ஏனெனில் அப்போது சுமார் 50 வயதுள்ள ஒருவர் இரு பெண்கள் பின் தொடர, எதிர் பெஞ்சியில் வந்து உட்கார்ந்தார். ஒரு பெண் சீனுவாசன் காதலித்த அதே விதவைதான். மற்றொருத்தி அவளைப்போலவே மாநிறமாக இருந்தாள். வயதில் சற்று சிறியவள். ஆனால் சிவந்த குங்குமப் பொட்டும், புஷ்பக்கொத்தும் நகைகளும் அவள் லாவண்யத்தை மிகைப்படுத்திக் காண்பித்தன.

அவர்களைக் கண்டதும் சீனு ...ர் தன் பிரசங்கத்தை நிறுத்திவிட்டான். காதலர்கள் கண்கள் சந்தித்தன. என்னென்னவெல்லாமோ பேசித் தீர்த்தன. "சுந்து, இவர்கள் பின்னுலேயே சென்று வீட்டைக் கண்டுபிடித்தாக வேண்டும்" என்று சீனுவாசன் சொல்லவே சுந்துவும் 'தயார்' என்றுன்.

எதிர் பிளாட்பாரத்தில் மூவரையும் பின் தொடர்ந்து சென்றவர்கள், அவர்கள் ஒரு பெரிய பங்களாவில் நுழைவதைப் பார்த்தார்கள். சற்றுநேரம் பொறுத்து இருவரும் கேட்டின் அருகில் சென்று பார்த்தார்கள். ரோட் லைட் வெளிச்சத்தில் "முருகேச முதலியார்" 'பிருந்தாவிலாஸ்' என்ற இரு போர்டுகளையும் வாசித்தார்கள்.

* * * *

"சுந்து நான் வீணுக காலங் கடத்தப்போவதில்லை. மற்றவர்களைப்போல் அவளிடம் நான் காதல் பேச்சுக்கள் பேசி, ரகசியமாகச் சந்தித்து, சொல்லிக்கொள்ளாமல் ஓடிப்போக ப்ளானும் போடப் போவதில்லை. ஒரு வாரமாக பார்க்கில் சந்தித்து முருகேச முதலியாரையும் சிநேகிதராக்கிக்கொண்டு விட்டேன். நேராக அவரிடம்போய் விஷயத்தைச் சொல்லி கல்யாணத்திற்கு சம்மதத்தைக் கேட்கப்போகிறேன்"

"சீனி. உனக்கு மூளைக் குழம்பிதான் போய்விட்டது. சந்தேகமில்லை. அந்த மனுஷன் சுபாவம் எப்படியோ அசட்டு தைரியத்தில் கன்னுபின்னுவென்று எதையாவது செய்து வைக்காதே. நாலு பேரைவிட்டு கட்டி வெச்சு உதைக்க......"

"பின்னே என்னடா பண்ண சொல்றே?"

"முதலில் அவளுக்கு எழுதி, அவளும் உன்னை காதலிக்கிறுளா, மறு மணம் செய்து கொள்ள அவளுக்குச்சம்மதமா, என்பதைத் தெரிந்துகொண்டுவா. பிறகு என்ன செய்வது என்று யோசனை சொல்கிறேன்."

* * * *

நுங்கம்பாக்கம்,
23-11-47.

அன்புள்ள காதலிக்கு,

உன்னை நான் மனப்பூர்வமாகக் காதலிப்பது போல் நீயும் என்னை காதலிக்கிறுய் என்று நினைக்கின்றேன். என்னை மணம் புரிந்து கொள்ள உனக்குச் சம்மதமானுல், நான் உன் தகப்பனுரைச் சந்தித்து இது விஷயமாகப் பேசுகிறேன். என் மீது அவருக்கு நல்ல அபிப்பிராயம். உன் பதிலை நாளை எதிர் பார்க்கிறேன்.

இப்படிக்கு

T. சீனுவாசன்.

மேற்படி கடிதத்தை எழுதி சீனுவாசன் ரிக்ஷாவில் எறிந்து விட்டான். மறுநாள் அதற்குப் பதில் எழுதி, அந்தப் பெண் அவனருகில் ரிக்ஷா வந்ததும் கடிதத்தை தெருவில் போட்டு விட்டுப் போனுள்.

மாம்பலம்,
24-11-47.

அன்பு மிகுந்தவருக்கு,

தங்களை நான் இதயப் பூர்வமாக காதலிக்கின்றேன் என்பதில் உங்களுக்குச் சந்தேகம் வேண்டாம். ஆனுல் நம் கல்யாணத்தைப் பற்றி ஒரு வார்த்தை. நீங் நினைத்திருப்பதுபோல் நான் கேசமுதலியார் பெண் இல் நான் ஒரு **கிறிஸ்துவப் பெண்.** எ தகப்பனுர், முதலியாருக்கு ஆப்த நண்பர். 5 வருடங்களாக இவர் வீட்டிலிருந்துகொண்டுதான் படித்து வருகிறேன். காதல் மணத்தில் நம்பிக்கையுள்ள நான் கலப்பு மணத்திலும் நம்பிக்கையுள்ளவளாக இருக்கிறேன். உங்கள் இஷ்டம் எப்படியோ? பதிலை எதிர்பார்க்கும்

தங்களன்புக்குப் பாத்திரமான,

மேரி லில்லி.

பிறகு என்ன நடந்தது என்பதை அதோ வரும் சீனுவாசனே சொல்லுவான் கேளுங்கள்.

"மேற்படி கடிதத்தைக் கண்டதும் எனக்கு திகைப்பும் சந்தோஷமும் உண்டாயிற்று. வாழ்க்கையிலிருந்துதான் கதைகள் எழுதுகிறுர்கள் என்று நினைத்திருந்த நான், கதைகளில் வருவதுபோல் வாழ்க்கையிலும் நடக்குமென்ப

தைத் தெரிந்துகொண்டேன். ஒரு கிறிஸ்துவக் கன்னிப் பெண்ணை விதவை என்று எண்ணிக்கொண்டு நான் விதவா விவாகத்திற்குத் தயாராயிருந்தேன். கலப்பு மணத்திற்கு அவசியமேயில்லை. நானும் ஒரு **கிறிஸ்துவன்** தான். என்ன விழிக்கின்றீர்கள்! என் பெயர் என் மதத்தை மறைத்து எல்லோரையும் ஏமாற்றியதைப்போல் மேரியையும் உங்களையும் ஏமாற்றியிருக்கிறது. என் பெயர் **தாமஸ் சீவாலங்கம்.** கார்ப்பொரேஷன் [illegible] ஹெட்மாஸ்டர் அரைச் [illegible]ாய் இருந்ததால், நான் [illegible]வாசகம் என்று சொன்னதை T. சீனுவாசன் என்று ரிஜிஸ்தரில் எழுதி விட்டார். அதைப்பற்றி எங்கள் வீட்டிலும் அதிகம் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. எஸ். எஸ். எல். ஸி. புஸ்தகத்திலும், ஏன், காலேஜிலும் கூட T. சீனிவாசன் என்ற பெயர்தான் நிலைத்து விட்டது. வீட்டாரும், நண்பர்களும் சீனி என்றுதான் என்னை கூப்பிடுகிறுர்கள்"

பிறகு என்ன நடந்தது என்பதை நான் சொல்லித்தானு கோடிக்கணக்கில் சிறு கதைகள் படித்திருக்கும் நீங்கள் தெரிந்து கொள்ளப்போகிறீர்கள்!

—0—

இளவரசி எலிஸபெத்தின் படத்தை அவரது கணவன் பிலிப் மவுண்ட்பாட்டன் பார்க்கிருர். இந்த மாதிரி பரஸ்பரம் படங்களைப் பார்த்து மகிழ்வதிலும் இதர உல்லாஸ விளையாட்டுகளிலும் இளம் தம்பதிகள் காலங் கழிக்கின்றனர். (டபிள்யூ. பி. என். எஸ்.) ஆர்.



பி. எஸ். நர்ஸரி பாடசாலையில் உள்ள குழந்தைகளுக்கு அதன் டைரக்டர் விளையாட்டுக் காட்டுகிறார்.

ஸாயி ஜோதிடர்



உமது எதிர்கால 5 கேள்விகட்கு விபரமாய் பதில் எழுத ரூ. 1¼. ஒரு வருடத்திற்கு மாதவாரி பலன் ரூ. 3. வாரா வாரம் விவரமாய் எழுத ரூ. 7. முழு ஆயுட் பலன் ரூ. 10. ஷை சுருக்கம் ரூ. 5. வாழ்க்கைச் சித்திரம் ரூ. 2. லாபம் நஷ்டம், காணாமற்போதல், ஆயுள், ரேஸ், லாட்டரி, ஷேர் மார்க்கெட், காதல்-இவற்றில் ஒன்றைப்பற்றி எதிர்கால பலன் ரூ. 3. ஜனனகால விவரம் or எழுதும் நேரம் தேவை.

ஸாயி ஆஸ்ட்ரல் ஸ்டுடியோஸ்,
உறையூர் — திருச்சி.

ஹோமியோபதிக் டைரக்டர்

கீழ்த்திசையின் பிரபலமான ஆங்கில ஹோமியோபதி மாதாந்திர சஞ்சிகை சந்தா-வருஷம் 1-க்கு ரூ. 5—6—0.

டாக்டர் R. C. கோஷ்:—ஹோமியோபதி பட்டம் பெற்றபின் கற்க வேண்டிய விதிகளை கற்பிக்கும் பிரபல ஆசிரியரும், "ஹோமியோபதிக் டைரக்டரின்" ஆசிரியருமானவர்-தீராத வியாதிகள் அனைத்தையும் தபால் மூலமாகவே வைத்தியம் செய்து குணப்படுத்துகிறார். கட்டணமும் குறைவே.

ஹோமியோபதி வைத்தியத்தில் பட்டம் பெற்றபின் தெரிந்து கொள்ள வேண்டியவைகளை கடித மூலமாகவே கற்பிக்கிறார். எல்லா வைத்தியர்களும் உயர் வகுப்பு மாணவர்களும் சேரலாம். பிராஸ்பெக்டஸிற்கு எழுதுக:—

HOMOEOPATHIC DIRECTOR
42-10, Doctor Lane, Calcutta.

உங்கள் அறிவு வளர்ச்சிக்கு

ஏற்ற நூல்கள்.

		ரூ.	
1.	நாஸ்திகர் யார்? ஆஸ்திகம் எது?	0	6
2.	தமிழர் யார்?	0	8
3.	ஆரியர் தமிழர் கலப்பு	0	8
4.	தமிழ் பழமையும் புதுமையும்	0	8
5.	தமிழர் சமயம் எது?	0	8
6.	ஆரிய வேதங்கள்	0	10
7.	மரணத்தின் பின்?	0	8
8.	பெண்ணே பெரியவள் ஏன்?	0	8
9.	சிந்து வெளித் தமிழர்	0	8
10.	பாம்பு வணக்கம்		
11.	உலக அறிவியல் நூல்	0	
12.	தமிழ் ஆராய்ச்சி	0	6
13.	பெண்கள் உலகம் அன்றும் இன்றும்	0	12
14.	மனிதன் எப்படித் தோன்றினன்?	0	8
15.	ஆயிரம் வினாக்களும் விடைகளும்	1	0
16.	கர்னல் - லக்ஷ்மி	0	
17.	இராவணன்-வித்தியாதரனா?	0	
18.	உலககலை உயர்வுக்கு உதவியவர் யார்?	0	8
19.	திருக்குறள் தெய்வக் கொள்கை	0	4
20.	ஏ! தாழ்ந்த தமிழகமே (C. N. A.)		
21.	தமிழரின் மறுமலர்ச்சி (C. N. A.)	0	
22.	திராவிடர் நாகரீகம்	0	1
23.	முச்சங்கம்	0	8
24.	கவிஞனின் காதல்	0	12
25.	கவிஞர் விழா	0	6
26.	தமிழ்க்கடவுளுக்கு ஆரியப்பாடலா?	0	4
27.	தமிழ் விளக்கம்	0	6
28.	நாடக உலகில்	0	8
29.	தேன் கூடு (கவிதை)	0	2
30.	எது இசை (பாரதிதாசன்)	0	6
31.	இராவண காவியம்	6	0
32.	நடன சுந்தரி	1	0
33.	வேலைக்காரி (ஜீவா)	1	8
34.	வேடதாரி (ஜீவா)	1	4
35.	நாடகக் கலைமலர்	2	0

முத்தமிழ் நிலையம்,
75, வரதா முத்தியப்பன் தெரு,
சென்னை 1.

கலியாண வெகுமதிகளுக்கு
பல ஊர்
பட்டு & நூல்
ரவுக்கைகள் சரசமாய்
கிடைக்கும் இடம்

ராம விலாஸ்

S.N. ராமஸ்வாமி செட்டி & பிரதர்ஸ், கடை வீதி, சேலம்.

...தருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd.)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப ...த்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். ...ல் விஜயநகரம் மருந்து. போலிகளைக் கண்டு ஏமாறுதீர்கள்.

Dr. பின்னா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,
11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

கும்பகோணம் கிளை:—
7, சாரங்கபாணி கோவில் தெற்குவீதி.

திருச்சி கிளை:—
15, புகழிய பிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு.

ஸ்திரீகள்! கவலைப்படுவானேன்?



"குமரி மாத்திரைகள்" (Govt. Regd.)

சாப்பிடுங்கள் ஹானியற்ற சக்தி வாய்ந்த நாட்டு மருந்து. வலிகள், தலைவலி, ரத்த சோகை, பசியின்மை, ஒழுங்கற்ற நோய்கள் & மற்றும் பல தகராறுகளுக்கும் உங்களுக்கு சம்பவிக்கக்கூடிய நோய்களுக்கும் சிறந்த நிவாரணி. பிற்காலத்தில் தகராறுகளேற்படாமல் பாதுகாத்துக் கொள்ளுங்கள். சாதாரணம் ரூ. 3. ஸ்பெஷல் ரூ. 5. எக்ஸ்ட்ரா-ஸ்பெஷல் ரூ. 8. (வி. பி. பி. தனி) ஸ்டாக்கிஸ்டுகள்:—(1) ஹாரி & சன், 93, சைனாபஜார் ரோட், மதராஸ் (2) ராஜா மெடிகல் ஹால், 31, தர்மராஜா தெரு, பெங்களூர் கன்டோன்மென்ட் (3) எல். எம். முகர்ஜி & சன்ஸ் லிட், 167, தரம்டோலா தெரு, கல்கத்தா.

தயாரிப்பவர்:—
Mrs. P. DEVEE, F. D. S. (S. W.) Tollygunge (Russa) Calcutta.

King Arrowroot

கிங் அரரூட்

குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் சிறந்த ஆகாரம் வைத்திய நிபுணர்களாலும், டாக்டர்களாலும் நன்மதிப்பு பெற்றது.

Sole Agents
EMPIRE TRADERS
4 BUNDER ST, MADRAS

பாக்யங்களுள்

சிறந்ததும், பூஷணங்களுள் முதன்மையானதுமான கூந்தலைக் காலதாமதமின்றி கேசவர்த்தினியைக்கொண்டு பெறுங்கள்.

மூக்கையும் மோவாய்க்கட்டையையும் மாற்றமுடியாது. ஆனால் கூந்தலையோ விதவிதமாயும் விசித்திரமாயும் பலவாறு ஜோடிக்கலாம்.

கூந்தலை ஜோடிக்கு முன்னர், கேசவர்த்தினியின் உதவியால் அபரிமிதமான கூந்தலைப் பெறுங்கள். கறுத்து அடர்ந்த கூந்தலினால் முக அழகையும், கேசவர்த்தினியினால் கூந்தலையும் அழகுபடுத்திக்கொள்ளுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலை காப்பது, விருத்தி செய்வது, அழகுபடுத்துவது. விலை அணா 12. மேற்செலவு வேறு. எல்லாக் கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர் :

தென் இந்திய ரஸாயன சாலை,
"ஆச்ரமம்", க்ராஸ்கட் ரோட்,
பவர்ஹவுஸிற்கு அடுத்தது கோயமுத்தூர்.

அபரிமிதமான ஜீவசக்தி
வெற்றிபெற உதவுகிறது



அம்ருதா
ரத்த சுத்தி திராவகம்

தேகப்பயிற்சி செய்வோருக்கு மிக அவசியமான சக்தியை அம்ருதா அளிக்கிறது. இந்த ரத்த சுத்தி திராவகம் இளைஞர்கள், முதியவர்கள், குழந்தைகள் அனைவருக்கும் இன்றியமையாதது. வாய்க்கு மிக இனிப்பானது, குணத்தில் சிறந்தது. அரிய மூலிகைகள், பழச் சத்துக்களைக்கொண்டு உயர்ந்த வைத்திய முறைப்படி தயாரிக்கப்பட்டு வரும் இந்த ஜீவ சக்தி திராவகம் யாவருக்கும் இணையற்ற நண்பன்.

கேஸரி குடீரம் லிமிடெட் மதராஸ்

ஒரிஸ்ஸா, நைஜாம், ஆந்திரா ஜில்லாக்களுக்கும்
தமிழ்நாட்டுக்கும் ஏஜண்டுகள் :—

ஸீதாராமா ஜெனரல் ஸ்டோர்ஸ்.

பர்ஹாம்பூர் - செகந்திராபாத் - பெஜவாடா - மதுரை.

ஸ்ரீமத் பகவத் கீதை — விலை ரூ. 3—8—0 (தபால் செலவு பிரத்யேகம்)

மானேஜர், "சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

வாரியர்

பிருங்காமலகாதி

தைலம்

குளிர்ச்சி மிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப் படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.
(பாக்கிங், தபால் செலவு வேறு)

ஆர்ய வைத்தியர்

பி. எஸ். வாரியரின்

அஷ்டாங்க
ஆயுர்வேத சாலா

தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936)

முதல்தர ஜுவல் பதித்த
கைகடியாரங்கள்

அழகான மாடல்கள், சரியாக மணி காட்டுபவை, ... மான யந்திரம் 5 ஜுவல் உத்தரவாதம் வட்டமானது ரூ 16 சிறந்தது ரூ. 17. சென்டர் செகண்ட் தட்டை, வட்டமானது ரூ. 30. ஸ்திரீகள் சைஸ் ரூ. 45. நீண்ட சதுரம், எட்டுமூலை வடிவம் க்ரோமியம் கேஸுடன் ரூ. 33. நீண்ட சதுரம் 6 ஜுவல்கள் ரூ. 35 சிறந்தது ரூ. 38/- ரோல்ட்கோல்ட் 10 வருஷ உத்தரவாதம். 7 ஜுவல்கள் நீண்ட சதுரம் ரூ. 48. சிறந்தது ரூ. 50. 15 ஜுவல்கள் ரூ. 65, சிறந்தது ரூ. 70. அலாரம் டைம் பீஸ் ரூ. 20. சிறந்தது ரூ. 22. பாக்கிங் தபால் அணா 12. இரண்டு எடுத்துக் கொண்டால் தபால் செலவு இலவசம்.

வீட்டிலேயே அச்சிடக்கூடிய பாக்கெட் பிரஸ்:-பெயர்கள் விலாஸம், கடிதங்கள், லேபில்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளை வீட்டிலேயே வெகு அழகாக அச்சிடலாம்:

விலை நெ. 1. ரூ. 1/12. நெ. 2. ரூ. 2. ஸ்பெஷல் ரூ. 2/8 சிறந்தது ரூ. 3. பாக்கிங், தபால் அணா 14. ஒவ்வொரு ஆர்டருக்கும் ஒரு விளக்கு இலவசம்.

GREAT NATIONAL STORE (198)
Post Box No 12216 Calcutta (S. W.)

சகலவிதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு
நாணயமும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

ராம்ராஜ்யா ஹால்

N.R.ராமசந்திர செட்டி & கோ. கடைவீதி...சேலம்

யுத்தத்துக்கு முன் இருந்ததை
விட குறைந்த விலைகளில்



ஸ்விஸ் தயாரிப்பு. சரியான மணி காட்டும். ஒவ்வொன்றும் 3 வருஷ உத்தரவாதம். ஜுவல் பதித்தது.

வட்டம் அல்லது சதுரம் குரோமியம் கேஸ் ரூ. ..
,, ,, சிறந்த ரகம் ரூ. 2..
தட்டை குரோமியம் கேஸ் ரூ. 29
,, ,, சிறந்த ரகம் ரூ. 35
,, ,, சென்டர் செகண்ட் ரூ. 48
ரோல்டு கோல்டு (10 வருஷ உத்தரவாதம்) ரூ. 55

நீண்ட சதுரம், டானு அல்லது வளைந்த வடிவம்

பளபளப்பான குரோமியம் கேஸ் ரூ. 40
ரோல்டு கோல்டு (10 வருஷ உத்தரவாதம்) ரூ. 55
15 ஜுவல் ரோல்டு கோல்டு ரூ. 90

அலாரம் டைம் பீஸ்
விலைகள் ரூ. 18/-, 22/- சிறந்தது ரூ. 25/-
பிக்பென் ரூ. 45/- தபால் செலவு தனி.
கடிதங்கள் ஆங்கிலத்தில்.

BRITANNIA WATCH CO
POST BOX. 11403, CALCUTTA (M 5.)

வாசனை எண்ணெய்கள் நீங்களே தயாரித்து
பணத்தை மீதி செய்யலாம்.

கீழ்க்கண்ட ஏதாவது ஒரு ரக மோஹினி எஸன்ஸை 16 அவுன்ஸ் நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் அல்லது விளக்கெண்ணெய், கடலை எண்ணெயில் கலந்தால் உங்களுக்குச் சிறந்த வாசனை எண்ணெயாகும், விலைகளோ மிகவும் குறைவு.

சுத்தமான மோஹினி எஸன்ஸுகளின் பெயர்களும் விலைகளும்

சாம்பாக்	ரூ. 2-0	கதம்பம்	ரூ. 1-8	ஹினா	ரூ. 1-8	மோத்தியா	ரூ. 1-0
காஸ்	,, 2-0	மல்லிகை	,, 1-8	லில்லி	,, 1-0	ஸ்வீட்	,, 1-0
கேவ்டா	,, 2-0	ரோஸ்	,, 1-8	தாமரை	,, 1-0	மோதியா	,, 1-0
மஸக்	,, 2-0	போகுல்	,, 1-8	கோலோன்	,, 1-0	ஐடியல்	,, 1-0

அரை அவுன்ஸ் பாட்டில்களாகக் கிடைக்கும். பாக்கிங், தபால் சார்ஜ், வி. பி. செலவு வேறு. இலவசமாக காட்லாக் அனுப்பப்படும்.

S PAUL & Co.. Perfumers, (Dept. S.W.)
4. Hospital Street, Dharamtcla, Calcutta.

முக்கிய அறிவிப்பு

மந்தார விடு இலை
தையல் இலை

சகாயமான விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் எங்களிடம் கிடைக்கும்.

S.மாணிக்கம்செட்டி கோ.
6—7, ஆதியப்ப நாயக்கன் தெரு
மதராஸ் 1.

ஏஜெண்டு இல்லாத இடங்களுக்கு ஏஜண்டுகள் தேவை.

சுதந்திர இந்தியாவில் தயாராகும் மணம் கமழும்

இண்டான் பில்ஸ்

ஜலதோஷம், இருமல், ஆஸ்த்மா இருமல் இவைகளைப் போக்கி ஆரோக்யம் தரும்

தாம்பூல மாத்திரைகள்

20 மாத்திரை கொண்டது 0—1—0. 1000-ம் ஹாஸ் பில்ஸ் டின் 2—8—0
20 மாத்திரைகள் கொண்ட பாக்கெட் 100க்கு 5—4—0. ஷை 500க்கு 25—0—0
ஷை 1000க்கு 45—0—0

தபால் செலவு இலவசம்.
25% அட்வான்ஸுடன் ஆர்டர்கள் அனுப்பப்படுவது அங்கீகரிக்கப்படும்.

ஏ. ஜி. நாயர் அன் கோ.,
89, பெரம்பூர் பாரக்ஸ் ரோடு, வேப்பேரி, மதராஸ் 1.

கூடிய சீக்கிரம் எதிர்பாருங்கள்!
மாணிக்கபஸ்பம் சிவபுரி புகையிலை
மீனம்பாளையம் ரோஸ் புகையிலை
வாசனை பட்டை புகையிலை

வெளிவந்து விட்டது!

வாசனை பாக்குத்தூள்
காலணாவுக்கு இரண்டு.
சென்னைக்கு
சில்லரை விற்பனையாளர் தேவை.
வெளியூர்களுக்கு ஏஜண்டு தேவை.

தயாரிப்பவர்:
மாணிக்க விலாஸ்
11 பீட், மதராஸ் 1.

Quality always tells!
hence BUY L.G
ASAFOETIDA



எல். ஜி
பெருங்காயமே
உயர்ந்தது

மூல வியாதியின் துன்பம்

இனி உங்களுக்கு ஏன் இந்தத் துன்பம்? அடிக்கடி ரத்த சேதத்தினுல் ஏன் பலஹீனமடைகின்றீர்கள்? உலகம் பூராவும் ஜாம்-பெக்கினுல் ஆண், பெண் அனேகர் நிவாரணமடைந்துள்ளனர்.

இவ்வற்புத மூலிகை மெழுகு கிருமிகளைக் கொன்று, சமனமூட்டி, குணமாக்கும் திறமை பெற்றது. விரிந்த ரத்தக்குழாய்களைச் சுருங்கச் செய்யும் சக்திவாய்ந்த இம்மெழுகு, ரத்தப்போக்கை நிறுத்தி பழுதுற்ற ஜவ்வுகளைச் சீப்பிடிக்காமல் தடுத்து குணப்படுத்தும். சாஸ்திர சிகிச்சை இல்லாமல் பயன் படாதோ என்று நினைக்கப்பட்டதையும் ஜாம்-பெக் எளிதில் குணப்படுத்தியிருக்கிறது.

ஜாம்-பெக் எல்லா சரும நோய்களுக்கும், முகப்படுவன்முதல் பெரிய ரணங்கள்வரை தேமல், கால் வியாதிகள் எதற்கும் சிறந்த நிவாரணி. ஒரு டப்பி தயாராக வைத்திருக்கவும்.

ஏஜுன்டுகள்:—மெஸர்ஸ்: நாதா & கம்பெனி, பி. டி., மதராஸ்.



Zam-Buk

உலகப் புகழ்பெற்ற மூலிகை மெழுகு.

மிருகக் கொழுப்பு சேராததற்கு உத்தரவாதம்.

பரிசு! பரிசு



போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

பரிமள பாக்குத் தூள்களுக் கெல்லாம் அரசனுன ஆர். கிருஷ்ணு பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

144—50 பொட்டலம் கொண்ட ரேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உறை அனுப்பினுல் 50—0-0-3 பொட்டலம் இனும்,

S. M. கிருஷ்ணு அண்டு கோ.,
2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு.
மதராஸ் 1.

மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானுல் ரியல் அசோகா அண்டு கோ.வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை சென்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸ்லின், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி, புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

N. B. ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம், கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. முந்துங்கள்.

ரியல் அசோகா அண்டு கோ.,
40, கிடங்கு தெரு, மதராஸ் 1.

ரூ. 100 இனம்

ஆச்சரியகரமான சக்திவாய்ந்த
சித்த யந்திரம்
(GOVT. REGD.)

சக்தி வாய்ந்தது. "குப்த வசீகரண யந்திரத்தை" வைத்திருப்பதாலேயே கஷ்டமான காரியங்களிலும் வெற்றி பெற்றுவிடலாம். பலன் அளிக்கச் செய்வதில் எவ்வித வேறு சாதனமும், தேவைகளும் அவசியமில்லை. இதனுல் (ஆண் பெண்) நீர் விரும்பும் எவராகிலும் உனக்கு அடங்கி வருவர். அசுப நக்ஷத்திரங்கள், விரோதி பகை இவைகள் நீங்கி, பரீட்சை, வர்த்தகம், வழக்கு லாட்டரி, ரேஸ், உத்தியோகம், சந்தானம், ஐசுவரியம், கடன் நிவாரணம் பயங்கர வியாதிகள் இவைகளில் வெற்றி பெறுவதோடு, அதிருஷ்டசாலியாகவும் இருப்பீர்கள், பொய் என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனும். செம்பு ரூ. 2-8-0. வெள்ளி ரூ. 8-0-0. சுத்த தங்கம் ரூ. 13.

நரையை ஒழியுங்கள்

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மங்கும் முதலியவற்றைப் போக்கி தலைவலியைக் குணப்படுத்தும். பார்வையை சீர்படுத்தும் நம்பிக்கை யில்லை யேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2/8. அதற்கு மேற்பட்டது ரூ. 3/8. எல்லா நரைக்கும் ரூ. 5.

SHRI DIN RAKSHAK KARYALAYA, ...)
No. 50 P. O. Bogusarai (Mon...

மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

பட்டு

புடவைகள் வேஷ்டிகள்

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

C. R. பாலுசாமி அய்யர்

115, தைலியப்ப நாய்க்கன் தெரு, மதுரை.	9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.

போன் நெ. 3132.

கஞ்ச் ஆயில்

(தந்த தூள் கலக்கப்பட்டது)

வழுக்கை குணமாகும். கேசம் அபரிமிதமாக வளரும். சகல விதமான கூந்தல் வியாதிகளுக்கும் நிச்சயமான நிவாரணி விலை ரூ. 2—8—0. தபால் செலவு அணு 13.

உலகப் பிரசித்திபெற்ற காஷ்மீர் ஊலார் ஏரியின் சாஸ்திரீக முறையில் சுத்திகரிக்கப்பட்ட

லோடஸ் ஹனி

எல்லாவித கண் வியாதிகளுக்கும் சிறந்த நிவாரணி. விலை புட்டி ஒன்று ரூ. 2, பெரிய புட்டி ரூ. 10, வி. பி. ரூ. 1—5—0.

Bharati Oushadhalaya
126/2 Hazra Road,
CALCUTTA 26.

பாரதி ஔஷதாலயா
126-2 ஹஸ்ரா ரோட்,
கல்கத்தா 26.

ஸ்டாக்கிஸ்டுகள்:—
மில்டன் & மில்லர்
157 பிராட்வே, மதராஸ்.

வைத்தியரத்ன யு. ராமநாத சாஸ்திரி

ஸித்தமகரத்வஜம்
(தங்கம் சேர்ந்தது.)

அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும். திடசாலியாயும் யௌவனமாயும் இருக்கலாம். 30 மாத்திரை சீசா 1-க்கு ரூ. 7.

மஹாபில்வாதி லேகியம்

பித்தம் அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்து விடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரூ. 4.

ஸ்ரீ தன்வந்திரி கவசம்

வியாதி, மனேவிசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை பிரதி ஸரஸ்வதி ஸ்ரீதன்வந்தரி யந்திரம், இவைகளை மந்திர பூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது, கவசம் 1-க்கு ரூ. 3.

ஆனந்த் படை நிவாரணி

எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரூ. 1.

ஆனந்த பற்பொடி
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)

சென்னை ஹைக்கோர்ட்டில் உரிமை பெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது. எங்கும் கிடைக்கும். கேட்லாக் இனும். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

வைத்திய ஸித்தாச்ரமம்
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்.

டாக்டர்கள் சிபார்சு செய்கிறார்கள்

நற்சாக்ஷி

★

பரிகைக்கும், பலனுக்கும், உத்திரவாதமானது.

குஷ்ட நிவாரணி

45 வருஷ அனுபவமானது.

எவ்வித மருந்திலும் தீராத 18 வகைகுஷ்டமும், செம்மேகப்பற்று கருமேகம், தடிப்பு, அரிப்பு, மதமதப்பு விஷக்கடி, குழிப்புண்கள் எல்லாம் 6 வேளை மருந்தில் தீருகிறது.
50 வேளை ரூ 10.

சித்த வைத்தியர் R. M. நாராயணசாமி.
தன்வந்திரி வைத்தியசாலை, பழனி.

50 வேளைக்கு குறைந்து அனுப்புவதில்லை

கனம் தங்கிய வைத்தியர் அய்யர் அவர்களுக்கு:

எனது சகலை கோயமுத்தூரிலிருந்து வந்து தங்களிடம் மருந்து சாப்பிட்டார் 10 வருஷமாக எவ்வளவோ மருந்துகள் சாப்பிட்டும் ஊசிகள் போட்டும் தீராமலிருந்த குழி புண்கள் தினம் 20 தடவை நீர் போகுதல் கால் வீக்கம் யாவும் 3 வேளையில் ஆச்சர்யப்படும்படியான முறையில் சுகமாகி விட்டது. நடக்க முடியாமலும் மதமதப்பாகவும் இருந்த கால்களில் சுரணை ஏற்பட்டு நடக்க முடிகிறது. முதுகு பூராவும் லேசாக எரிகிறதாகச் சொன்னர். இம்மருந்தின் பெருமையை வாயால் புகழுவதற்கில்லை. இதற்கு நிகரான மருந்தே இல்லையென உறுதியாய்க் கூறுகிறேன்.

(ஒப்பம்) ஜி. கிருஷ்ண ராவ்,
ஹெட் போஸ்டுமேன் பழனி.

ஸ்தாபிதம் 1924.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஷ்டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. "விவாகப் பொருத்தங்கள்" புத்தகம் விலை ரூ. 1. "வாழ்க்கையில் வெற்றி" என்னும் புத்தகம் விலை அணு 6. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,

...த்ரிகை" எல்டாம்ஸ் ரோட், தேனும்பேட்டை போஸ்டு, மதராஸ்.

மருந்து சாப்பிட ஆரம்பித்ததுமே கபத்தைக் கலைத்து, மூச்சுத்திணறலை மட்டுப்படுத்துவதுடன், மலச்சிக்கலை மாற்றி, ஜீரண சக்தியைக்கொடுத்து, உடலுறுதிப் பெற வேலை செய்கிறது. புரோகித் ஸ்வாஸஹரிதான் இந்த நோய்க்குக் கைகண்ட மருந்து. நுரையீரலை வலுவாக்கி, ஆஸ்த்மாவை அறவே தீர்க்கிறது. ஈரல், கோளாறு, மூச்சுத்திணறல், இருமல், சுவாஸாசயக் கோளாறு முதலியவற்றுக்கு ஸ்வாஸஹரி ப்ளெயின் (நீலப் பாக்கிங்) சிறந்தது.

சிவப்பு பாக்கிங் உள்ள ஸ்வாஸஹரி காம்பௌண்ட் நீடித்த கடுமையான வியாதிகளைக் குணப்படுத்தும்.

3, 6, 12 அவுன்ஸ் ஸைஸ்களில் கிடைக்கும். விலை முறையே ரூ. 3-6-0 ரூ. 5-12-0, ரூ. 10-0-0. எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

புரோஹித ஸ்வாஸஹரி

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR.

சென்னை ஸ்டாக்கிஸ்டுகள்:

1. அப்பா அண்டு கோ., சைனுபஜார்.
2. தாதா அண்டு கோ., நயினியப்ப நாயக்கன் தெரு.

திருவாங்கூர் ஸ்டாக்கிஸ்டு:—

கே. வி. மாத்தியூ அண்டு கோ.,
கெமிஸ்ட்ஸ் & ட்ரக்கிஸ்ட், கோஜான்சேரி,
திருவாங்கூர்.

ஜீவசக்தியின்மை!

ஒவ்வொருவரும் ஜீவசக்தி ததும்பி இருக்கவே விரும்புவர். ஆனால் உண்மையில் ஆயிரக்கணக்கானவர் சோர்வுற்று கவலையினாலும் அதிக வேலையினாலும் தளர்ச்சியுற்று அஜீரணம், மலச்சிக்கல், வலிப்பு மற்றும் பலவித நோய்களுக்கும் ஆளாகின்றனர். இவ்வித நிலைகளில் விகரின் ஒன்றுதான் பூரண ஆரோக்யமளிக்கும் மருந்து. இதன் அபூர்வ சக்தியினால் உங்கள் நரம்புகள் வலுவடைந்து, கண்களும் உடம்பும் பிரகாசமடைந்து இளமையின் பூரணப் பொலிவையும் அடைகின்றீர்கள். விலை ரூ. 3. தபாற் செலவு அணு 13 மட்டும்.

ஸ்திரீகளின் ஆரோக்யத்துக்கும் சந்துஷ்டிக்கும்!

அழகும், வசீகரமும், ஆரோக்கியமும் உள்ள ஸ்திரீகளே ஆடவரால் விரும்பப்படுவர். ஸ்திரீகளின் கர்ப்பக் கோளாறுகளினால் தலைவலி, வயிற்றுவலி, மயக்கம், ரத்தசோகை முதலிய பல வியாதிகள் சம்பவித்து ஸ்திரீகளின் அழகை குன்றச் செய்து தேகத்தையும் ஆரோக்யக் குறைவினால் பாழ்படுத்துகின்றன. வாழ்க்கையே கசந்து விடும். ஸ்திரீகளின் "அம்ருத சோகா" உட்கொண்டால் சகல வியாதிகளின் மூல காரணத்தையும் வேருடன் அழித்து குணப்படுத்துகின்றது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் இன்றியமையாதது விலை ரூ. 4-8-0. தபாற் செலவு 13 அணு மட்டும்.

Kaviraj R. N. CHAKRAVORTI,
Ayurvedshastri (S. W.)
HARIHAR AYURVED OUSHADHALAYA,
BHOWANIPUR :: CALCUTTA, 25.

ஸ்டாக்கிஸ்டுகள்:-மெஸர்ஸ் மில்டன் அண்டு மில்லர், 1/157, பிராட்வே மதராஸ். மெஸர்ஸ் அப்பா அண்டு கம்பெனி, 286, சைனுபஜார் ரோட் மதராஸ். மெஸர்ஸ் எம். டி. வோரா & கோ., 166, பிரின்ஸஸ் தெரு பம்பாய். மெஸர்ஸ் சிவானந்தா கெமிஸ்ட், 92, ஸீ தெரு கொழும்பு இலங்கை மெஸர்ஸ் மெடிகல் ஹால், ராகவன் & கம்பெனி, ஸ்ரீ நரஸிம்மராஜா ரோட், பெங்களூர் ஸிடி.